உ

கடவுள் துணை.

# விறலிவிடுதூது.

இஃது

திருத்தணிகை

சரவணப்பெருமாளையரவர்களால்

முன்பதிப்பித்தபிரதிக்கிணங்கச்

சரவணபுரம்

சண்முகமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு

புரசைப்பாக்கம்

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ஸ்ரீமுக ௵.

உ

கணபதி துணை.

# விறலி விடு தூது.

காப்பு.

பொங்குபெருஞ்செல்வப் புகழ்பெரிமாகன்வேர்த்
துங்கன்விறலிவிடு தூதுக்கு - மங்களஞ்சேர்
பஞ்சவருக்கங்களைமுற் பைம்பொனெடுங்குன்றிலைக்
கஞ்சமலர்க்குஞ்சரமே காப்பு.

விறலி புகழ்ச்சி.

கார்பூத்தமேனிக் கருணைத்திருநெடுமால்
பார்பூத்தவுந்திப்பரந்தாமன்-நீர்பூத்த (௧)
வேலைக்குழற்கடைந்தவேலைதருந்தெள்ளமுதும்
ஆலைதருவெண்சாறடுபாகும்-பாலும். (௨)
கனியுஞ்சருக்கரையுங்கற்கண்டுநாவுக்
கினியபசுந்தேனுமிணங்கத்-தனியாக. (௩)
மத்தித்தெடுத்தமதுரத்துக்கெண்மடங்கு
தித்திப்புக்கேட்போர்செவிக்கேறத் - தத்தைகள்போய்க். (௪)
குன்றேறத்தோத்துக்குயின்மாமரந்தோறுஞ்
சென்றேறவாணிசிறுகுரரி-நின்றொதுங்கி. (௫)
விண்ணேறவந்தரத்திலவிஞ்சயரேறக்கனிந்து
மண்ணேறப்பாடுமிசைப்பாடினியே-உண்மையருள். (௬)
போதிக்குமெய்த்தவத்தோர்புத்திக்கிடையூறு
நாதிக்குமேழிசைக்குநாயகமே-தீதக். (௭)
கொழுந்தோடிமன்னவராங்குன்றிற்படரக்
கொழுந்தோடிபாடிவருங்கொம்பே-எழுஞ்சிமிழ்: (௮)
கண்டாரகத்திலொருகாமப்பேயேற்றுவிக்குங்
கண்டாரகத்தில்வல்லகாரியோ-கெண்டைகெடுங். (௯)
கண்சுருட்டியோர்கருத்தறிவெல்லாஞ்சுருட்டி
மண்சுட்டியபடுமுயிர்பாவையே-ஒண்கிரணக். (௰)
காங்காரங்கொங்கையின்மேற்கைத்தம்புருவளைத்துக்
காந்தாரமேற்றுங்கனிமொழியே-சேந்தவரி. (௰௧)
பம்பகாம்போதிலணங்குமணங்குமிசை
கும்பகாம்போதிரசகும்பமே-தும்புருதன். (௰௨)
யாகரஞ்சித்தனிபாள்பட்டுறையிலிட்டயா
மேகரஞ்சிபாடும்விறலியே-லோகத்திற். (௰௩)
காகவுறிவின்றிக்கலந்தனில்வைத்துண்பாரைத்
தேசியென்பார்க்கியாத்தியாரை-ராகமெனும். (௰௪)

கள்ளக்கயிறுகொண்டுகட்டியுருட்டிவிழித்
துள்ளுருமனைச்சாட்டைகொண்டுசுண்டியே-தெள்ளமிர்தத். (௰௫)

தீங்குதலைச்சொல்லாற்றிகிலேற்றித்தேட்டையெல்லாம்
வாங்கிவிடவல்லமதங்கியே-நீங்கிவெறுப். (௰௬)

மானமட்டவார்க்குமாடலற்குநல்லசமா
தானநிதானவவதானியே-கானவித்தை. (௰௭)

நாட்டையெல்லாங்கற்றமணிமொழியேநான்பட்ட
பாட்டையெல்லாஞ்சற்றேயுகரக்கேள்-வேட்டமனை. (௰௮)

அவதானிதன்சம்பவந்தொகுத்துரைத்தல்.

யாட்டியுடன்போட்டிவிளைந்தாட்டிவிட்டபம்பரம்போல்
நாட்டையெல்லாஞ்சுற்றியதுநானொருநாள்-தோட்டிதழிப். (௰௯)

பூவுடைசான்றென்மதுரைப்புக்கதுவுமங்கேயோ
ர்தேவடியாள்கைக்குள்ளாய்ச்சிக்கியதும்-மாவிகிழ (௨௰)

வோரியென்கைப்பொன்னையுருஞ்சியதும்போல்வாய்த்துச்
சாரிசதிசெய்ததுவும்வைததுவும்-போராடி. (௨௧)

மேனாகிடவம்பலத்தில்விட்டதுவும்வாய்ப்பகட்டால்
ஊனாவிடப்பற்றியென்னையோட்டியதும்-பேராசை. (௨௨)

அங்கேயிழுக்கமனதாகிவழிகொண்டுபுகல்
எங்கேயென்றுன்மதுரைக்கேகியம்-சங்கேந்தும். (௨௩)

திம்மராயப்பெருமாள்செஞ்சரணசேகரனை
மும்மதமால்யானைமூர்த்தன்னியனை-ரம்ய (௨௪)

கருணாகரனைக்கனயோகவானைப்
பொருநாவலர்பூஷணனை-இருநிதியைச். (௨௫)

சந்த்ரமுகமந்த்ரதளந்த்ரகொலுவிந்திரனைச்
சிந்தமகுமாரசெயதரனை-முந்து. (௨௬)

நிலைகேட்டையானைநெடுங்கலியைத்தூரத்
துலைகேட்டுந்தயாதுரையை-மலைக்கோட்டில். (௨௭)

ஆளைவைத்துப்பார்க்குமருமைத்துரைதுமன்னர்
பாளையத்தைவென்றபடையானை-வாளரசர். (௨௮)

வெஞ்சமருக்கஞ்சாவிருதுவென்றிவாகனைநம்
பெஞ்சநகாக்கும்பெருமானை-வஞ்சகர்கயோர், (௨௯)

தண்டப்பெரும்புலியைச்சாமித்துரோகனாக்காய்
வெண்டயத்தார்சூரியனைவீரியனை-மண்டலிகர், (௩௰)

மாகனகங்கப்பமிடும்வாயிலானைப்பெரிய
நாகமகூளேந்திரகாதிபனை-யோகனயான், (௩௧)

மாடியதுமையன்முகம்பார்த்ததுவுமென்கவிவிட்
டோடியதும்பாக்கியம்வந்துற்றதுவும்-நாடிபிங்க, (௩௨)

THE TANJORE MAHARAJAH SERFOGI'S SARASWATHI MAHAL LIBRARY * TANJORE +

நான்வந்ததுவுநமெகியிலேயிரண்டு
மான்வந்தனையவிழிமாதேகேள்-தானமரன் ௩௩

நாட்டுத்தலைவன்புகழ்ச்சி,

திக்கெல்லாங்கொண்டாடுஞ்செங்கோல்விசையரங்க
சொக்கநாகேந்த்ர துரைராசன்-சக்ரபதி ௩௪
சேதுபதிபாண்டியகுலதெக்ஷிணசிங்காசன
நாதிபதிமெச்சுநரபாலன்-கோதில ௩௫
உருப்பான்மைவெண்பிறைமேலூர்வதுதன்கோல
மருப்பாகும்பன்றிமலையான்-திராக்கரத்தில ௩௬
ஆரமணியாரமணியாரமணிவாரிகடு
வாரியிடுங்குடவமானதியான்-தார்வேந்தர் ௩௭
வீதிக்குவீதிவிவாகமணிமுரசம்
நாதிக்கும்பாண்டிவளநாட்டினன்-ஆதித்தன் ௩௮
தேருநாணசெயகோபுரநிலைக்குள்
ஊருமொருமூன்மொன்பதூரினன்-கூறிபயோர் ௩௯
வேலைவைக்குஞ்செங்கருங்கண்மின்னரிதயவண்டு
மாலைவைக்கும்பூந்துளவமாலையான்-கோல ௪௰
முகமிலங்குவலையணிந்துமுதுகணைந்தகலனைகொண்டு
தகைதவிர்ந்துநடைபிறந்துசமாடர்ந்து-பகைவர்தங்கள் ௪௧
தலையினின்றுதிமிதிதிந்திதகுதிகந்தியெனநடஞ்செய்
துலவிவந்துகனகதண்டையொலிமிகுந்து-கலலென்று ௪௨
கொஞ்சிடச்சதங்கையிட்டகொண்டலொத்திடுந்திறந்த
வெஞ்சினப்பிரசண்டவுக்கிரவெண்பரிபான்-விஞ்சுகாம ௪௩
ஒன்றுமடைத்துவருமோங்கலுக்கொப்பாயிரண்டு
வென்றிப்புறைசுமந்தவேழமுனத்-துன்று ௪௪
மதங்கவெனுமூன்றுமாரிசிந்தப்பாகர்
ஒதுங்கநாலவாயாலுதறி-நதிர்ந்துமொரும் ௪௫
அஞ்சாருதிரத்தையராக்கியோரேழு
மஞ்சார்புனலைமடுத்துறங்கிக்-குஞ்சரங்க ௪௬
ளென்பதோரெட்டு பிணையில்லையென்றகற்றி
ஒன்பதூர்வீதியுலாவியே-வம்புரைப்போர் ௪௭
பைம்பொன்முடியிடறிப்பத்துநகமுந்தேய்ந்த
கும்பாணகம்பிர குஞ்சரத்தான்-அம்புவியில ௪௮
காந்துகலியை வெட்டுங் கண்டகோடாரியைப்போல்
ஏந்துவெள்ளப்பக்கரைபிடாலினன்-சாய்ந்தோடிக் ௪௯
குன்றிக்கருதாற்குடும்பக்குடிபோற
மூன்றிக்குமுறுமணிமூம் முரசான-னின்றவடி ௫௰

தூக்கினார்சென்னிதுடிக்கத்துணித்துவிடும்
ஆக்கினாசக்கரம்போலாணையான் பாக்கியவான் ௫௧

கற்பகமாம்பட்டணாயுங்கார்கருணையேமணக்கும்
பொற்கமலம்போன்றமனப்பூரணவான்-மற்றலார் ௫௨

தண்டார்மகுடங்கடவுஞ்சயவீர
கண்டாமணிமுழங்குங்காலினான்-மண்டுசமர் ௫௩

யுத்தகளத்தொன்னாருயிர்பேய்க்குத்தூட்டிவாள்
வைத்தணைத்துக்கட்டுமருங்காலினான்-கைத்தலத்தில் ௫௪

ஐந்தருவுமமர்ந்துவிரலாகித்தருவவெனச்
செந்தமிழ்க்குலகுமலாச்செங்கையான்-பைந்தொடியார் ௫௫

பொன்முலையாங்கோட்டிற்புதுக்கலவைச்சேறாட்டி
மன்மதனூலெழுதுமார்பினான்-நன்னகைதரும் ௫௬

வெற்றிச்சிறுபெண்விளையாடும்சிற்றிலெனச்
சுற்றியசேயூரமணித்தோளினான்-கற்றவராங் ௫௭

கோக்குலத்தைக்காத்தருளுங்கோபாலர்வேயிசைப்போல்
வாக்குமதுரமொழியும்வாயினான்-நாக்குளிரச் ௫௮

சொல்விரசங்கடுவர்ப்பென்றுதள்ளியின்பக்
கல்விரசம்பருகுங்காதினன்-வல்ல ௫௯

மருவலரைவெட்டுகின்றவாள்போன்முகத்திற்
கருணையுலவுமலர்க்கண்ணான்-இரவினுடல் ௬௰

சாய்த்தமதிமுகத்துத்தையலார்முத்தமிட
வாய்த்தமுழுமதிபோன்மாமுகத்தான்-காத்தருளும் ௬௧

எம்பிரான்கோயி லுடலசரடியென்னாளும்
செம்பொன்முடிதாங்குமலர்ச்சென்னியான்-உம்பர்தொழும் ௬௨

நின்மலனார்வெண்ணீறு நெற்றிக்கண்காணாத
மன்மதனைகாணொன்னும்வடிவினான்-தன்னுடைய ௬௩

வல்லக்கவார்குலத்தில்வாள் வேந்தர்கண்குளிரப்
பல்லக்குமேலுலவும்பாக்கியவான்-வில்லேறிக் ௬௪

கைக்கொண்டுபொறபடியின கால்கொண்டுவஞ்சகநி
மெய்க்கொண்டனையபரிமேறகொண்டு-செய்யரண ௬௫

துங்ககளகர்த்தர்துரைமக்கள்வாள்பிடித்துச்
சிங்கமெனச்சுற்றித்திரண்டுவர-மங்குலெனக் ௬௬

கூனன்முதுகொட்டகமேற்கொட்டுகின்றடம்மாரம்
யானையின்மேற்பெரியதிர்ந்துவரச்-சேனையொடு ௬௭

தாக்குற்றமண்டலிகர்தங்களுக்குச்சென்றுசொல்லுங்
கூக்குரல்போலவீரசின்னங்கொம்பூத-நோக்கும் ௬௮

பரிதியகைக்குப்பகையெழுந்ததென்ன
வருவிருதுடாலவட்டம்வீசத்-தாளக்கால் ௬௯

வெள்ளைக்கொடியானை மேகங்கிழித்துவரப்
பிள்ளைப்பிறைபோற்பிரகாசிக்க-வெள்ளைவெட்டச், (௭௰)

சித்ரக்குடைகள்செயமாதுகிட்டநிழன்
முத்துமணிப்பந்தரெனமொய்த்துவரக்-கைத்தலத்திற், (௭௧)

கத்திப்பிடித்துவெள்ளி கட்டினதுவாக்கிகொண்டு
பத்துலக்ஷங்காலாட்படைநடக்கத்-தத்துபரி (௭௨)

கொக்குநரையான்கைக் குமரியெனராவுத்தர்
கைக்குளடங்காதுகான்மீற-நெய்க்கவளம் (௭௩)

கூட்டியினையூட்டியிரு கொம்புசுற்றிபூட்டிமதம்
மூட்டிவிட்டமால்யானைமுன்னடக்கக்-கூட்டமிட்டு (௭௪)

வாரிட்டணிவகுத்துவாதிற்றவேற்றரசர்
போரிட்டவெங்களத்திற்போயெதிர்த்து-கோரார்மேற் (௭௫)

சுட்டபீரங்கித் தொனியும்பகையுஞ்சூ
விட்டமுகிலுமிடியுமெனப்-பட்டயங்கள் (௭௬)

வீசுவதும்வெட்டுவது மின்னலெனவீரர்சிலை
பூசலம்புமாரிமழைபோற்பொழியத்-தேசப் (௭௭)

பரதளங்கள்பட்டருளமாய்ந்த பெருஞ்செந்நீர்ப்
பிரளயப்பிரவாகம்பெருகச்-சிரதலத்தில் ௭௮

ஆனையிருப்புலக்கை யானையடிக்கவிழு
மூளைநுரைத்திரளாய்மொய்த்தோட-வாளாற் (௭௯)

மகேந்திரரேறிவரும் பல்லக்குப்பேய்க்கு
விடுநதோணிபோலு மிதப்பக்-கிடந்துசிலர் (௮௰)

வேர்த்துப்பரிசைகொண்டுமேன்மூடிசென்னியொட்டிப்
பார்த்துக்கமடமெனப்பதுங்கப்-போர்த்தலையில் (௮௧)

மந்திரவாள்வேந்தர் மகுடத்துதிர்ந்தரத்னம்
இந்திரகோபங்களெனச்சிதறச்-செந்தருகண் (௮௨)

விந்தைமிடிதீர வெற்றிப்பயிரேற்றி
வந்துகொலுவிருக்கும்வாள்வீரன்-முந்துபெரும் (௮௩)

பாதலத்தில்வேரூன்றிப் பாரிற்படர்ந்துவட
பூதரத்திலேறும்புகழினான்-நீதியான் (௮௪)

சிந்தமகாளேந்த்ரதுரை சிங்காசனதிபதி
தந்தசௌபாக்கியசம்பன்னன்-செந்துவர்வாய்க் (௮௫)

காமவடிவேல்விழியார் கைவலிவெல்லாமெழுதும்
நாமவடிவேற்பெரியநாகேந்திரன்-சேமநிதி (௮௬)

பூராதிபன்வாழிவை யொக்குநவகோடி
நாராயணன்பெரியநாகேந்த்ரன்-சோலாம் (௮௭)

ஆட்டுக்கூட்டங்களிலோ ராண்புலிபோற்பாயநடி
நாட்டுக்கூழிற்பெரியநாகேந்த்ரன்-பூட்டுசிலை ௮௮

அம்பொன்றுலீவேனாசுனக்குவீடாளு
நம்மொனறமாலபெரியநாகேந்தரன்-ஸ்தம்பமென ௮௯

லோகஞ்சுமமமதினுலோராயிரமௌளி
நாகம்பொரும்பெரிய நாகேந்ரன்-பாகனுஞ்சொற் ௯௰

பாவுக்கேறிக்கனகப்பல்லக்கேறிப்புலவோர்
நாவுக்கேறும்பெரியநாகேந்த்ரன்-வாவிதிசழ் ௯௧

மெஞ்சநகர்வாழப் பெருஞ்சீர்வளர்ந்தோங்கக்
கஞ்சமலர்மாதுகளிகூற-வஞ்சகமும் ௯௨

பொய்யும்பாங்தோடப் புண்ணியமுந்தண்ணளியும்
மெய்யும்நலந்துவிளையாடப்-பெய்யுமழை ௯௩

வானம்வழங்க மனைவாழ்க்கையோங்கவன்ன
தானம்வழங்கத்தவமோங்க-நான்மறைக்கும் ௯௪

நன்னிதியாமேகவண்ணநாதர்திம்மாராயர்திரு
சன்னிதியிற்பூசைதழைத்தோங்க-இன்னிலத்தின் ௯௫

எங்கோனபிஷேகமேந்துமனுவிக்கியானச்
செங்கோலரசுசெலுத்துநாள்-சங்கேந்தும் ௯௬

அவதானிதன்பிறப்பாதிசொல்லல்,

காரங்கமேனிக்கடவுளிருக்குமந்தச்
சீரங்கத்தேபிறந்தேன் செல்வத்தில்-ஈரைந்தோ ௯௭

டாறுவயதினுக்குளாரியமும் வேதமுநா
வேறித்தமிழ்நாலிக்கணத்தின்-மீறினேன் ௯௮

பாலசரஸ்வதியென் வாக்கிற்ப்ரசன்னமதா
நாலுகவித்திறமுனானறிந்து-வேலும் ௯௯

மயிலுமெனசொன்னவுனா மாறுமற்சொல்லக்
கயிலாடசிங்கிகழட்ட அயலொருவன் ௱

சொன்னவினுச்சொல்லவெதிர் சூதாடப்பின்முதகு
தன்னிலெழுந்தகல்லுத்தாணெண்ணப்-பன்னுசது ௱௧

ரங்கவிளையாட்டுக்கடி பார்க்கச்சொற்புலவோர்
தங்கள்கவியையவதானிக்கச்-சங்கத்தில ௱௨

எட்டெழுத்தாணிக்கேற்றகவிசொலலவும்பான்
அஷ்டாவதானியென்பதாயினேன்-மட்டார் ௱௩

திருப்பதியிலேவாசுதேவன்மகளைக்
கருப்புருவவின்மக்கனிமை-விருப்பமுள்ள ௱௪

பூங்காவனத்தைப் பொருத்தமுடன்வேட்டுப்
பாங்கானவாழ்விற்பயிலுநாள்-ஆங்குசெல்வர் ௱௫

சீர்திருச்சன்னிதியிலேந்திழையார்தம்மிலொரு
தாசிமேல்வைத்தேன்றயவுநான்-நேசமாய் ௱௬
இக்காங்கத்தேதிரிந்தேனின்பாசவல்லியிடத்
தந்தாங்கத்தேதிரிந்தேனாசையால்-அந்தத் ௱௭
திரிச்சிராப்பள்ளிக்குச்செலலாதிருக்கத்
தரிச்சிரமதென்மனதுநானும்-ஒருத்தன் ௱௮
அறியாச்சிறுவனுடன்யாமொருநாளந்த
வெறியார்குழற்மாத்தைவிட்டிற்-பிரியமுடன் ௱௯
சென்றிருந்துவந்தேன்றிடுதிடெனவோடிப்போய்
குன்றிந்தகொங்கைக்குலமனையாட்-குன்கணவர் ௱௰
ஓடத்திலேறினுருத்தரியம்போக்கடித்தார்
நாட்டிச்சிரகிரியைநண்ணினார்-கூடவந்த ௧௧௧
என்னைச்சவுக்கையில்வைததின்பாசவல்லியென்னும்
பொன்னனையாள்வீட்டுக்குப்போய்புகுந்தார்-அங்கோம் ௧௧௨
மிஞ்சியிஞ்சிப்பேசினாள்வேசிமகளதற்குள்
அஞ்சிஅஞ்சிப்பேசினாரையங்கார்-வஞ்சியந்த ௧௧௩
வீட்டுக்கதவடைத்தாண்மெள்ளமெள்ளகொஞ்சினான்
காட்டுப்புறுவோசைகாட்டினாள்-வீட்டைவிட்டு ௧௧௪
வந்தார்ம்மையனென்னைவாவென்றார்காவிரியிற்
சந்திபண்ணியிக்கரையிற்றண்டினார்-இந்தவூர்க் ௧௧௫
கென்மார்க்கஞ்சொல்லாதேயென்றுசொன்னாரொன்றந்தத்
துன்மார்க்கமையயெல்லாஞ்சொல்லிவிட்டான்-மன்மம் ௧௧௬
கொடுத்தாள்கடுத்தாள்தூங்குமஞ்சம்விட்டுப்
படுத்தாள்பகைஞாயபோற்பார்த்தாள்-அடுத்தடுத்து ௧௧௭
வேண்டினேன்குட்டுவெளியாக்குவேனென்னைத்
தீண்டாதேயென்றாள்சிராப்பளியில்-ஆண்டவள்பாற் ௧௪௮
செல்லாயென்றாள்வார்த்தைதேடுவாளேயென்றாள்
சொல்லாதவார்த்தைசிலசொல்லினாள்-இல்லாள் ௧௧௯
வலிகிடந்தமாற்றூணாக்குமேலவ்வில்
புலிகிடந்ததூறாய்விடுமென்-றுலகறியச் ௧௨0

யாத்திரைசெய்தமைகூறல்.

செப்பினாளவ்வையென்றுதேர்ந்தேனிராத்திரியே
தப்பினேன்கைக்கடங்கத்தககதுகொண்-டப்பால் ௧௨௧
அதிசயங்களானதலம்யாவுமறிவோம்
நதிகள்மலமூழ்குவோநாமென்-றிதயமாய் ௧௨௨
வெள்ளைநாவற்பழுக்குமிக்கபதியுங்கரிகள்
துள்ளுமரியானதொருதொன்னகரும்-தெள்ளுமிதன் ௧௨௩
செப்பக்கதவுதிறந்தவூநுங்கருங்கல்
கப்பலெனவந்தகடறபதியும்-இப்புறத்தில் ௧௨௪
பாங்குடையவாண்டுபெனிமண்டுகோர்காண்மா
மாங்கனீர்பொங்கும்வளப்பதியும்-பூங்குடத்தில் ௧௨௫

அங்கத்தைமங்கைவடிவாக்கினவூருந்தமிழ்சுருக்
தங்கத்தையீந்ததளியூரும்-செங்கருட்கட் ௧௨௬
காகமெரியக்கனல்வீசுமாமலையும்
யோகங்கழுகுசெயுமொண்கிரியும்-வேகமிக்க ௧௨௭
கான்றுண்டுவெம்முதலைகௌவியுண்டபிள்ளைதனை
மூன்றாண்டுசென்றழைத்தமூதூரும்-மான்றுனோர் ௧௨௮
தாசிக்கெழுந்தனத்தைலிங்கமென்றோருவன்
பூசித்துப்பேருபெற்றபொன்னகரம்-நேசித்து ௧௨௯
மைந்தனுடலரிந்துமாதவத்தோர்கிட்டுவினைப்
பந்தமரிந்தோன்பழம்பதியும்-சொந்தமாம் ௧௩0
ஆட்டைப்புலிக்காக்கும்அம்பலமுநாலுவசி
நாட்டிநடுக்குத்திக்குநன்னகரும்-காட்டையினன் ௧௩௧
கண்ணைப்பறிகொடுத்தாற்பதியுங்கண்ணுளன்றன்
பெண்ணைப்பறிகொடுத்தபேரூரும்-மண்ணுலகில் ௧௩௨
நீண்டாதாரெச்சில்செழுமறையோர்க்கீந்தாலும்
வேண்டாமெனுதேற்கும்மெய்ப்பதியும்-மாண்டவர்தம் ௧௩௩
காதிலுபதேசங் கடவுள்சொலும்பதியும்
சீதான்மாயமரியுஞ் சேவித்து-நாலுதிக்குஞ் ௧௩௪
சங்கமுகக்தக்கேறி தரங்கமுகங்கங்கையுடன்
சங்கமுகந்திர்த்தமெல்லாந்தாநாடி-அங்கிருந்து ௧௩௫
கங்குல்மகலாக்கடலோட்டக்கம்பலிலோர்
திங்களில்வந்தெய்தினேன்சேதுவின்னி-மாங்காத் ௧௩௬
தனுக்கோடிதர்ப்பசயனம்பணிந்து
மனுக்கோடிசூழ்செந்தூர்வந்தேன்-கனத்த ௧௩௭
திருப்பதிகளொன்பதுநான்சேவித்தங்குள்ள
அருட்பொலியுந்திர்த்தமெல்லாமாடித்-தருப்பொலியும் ௧௩௮
குற்றாலநெல்வேலிகோதைவில்லிபுத்தூர்வந்
துற்றேன்றிருச்சுழிகையூர்பணிந்தேன்-நெற்றிவிழித் ௧௩௯
தம்பிரான்பூவணத்தைச்சந்தித்தேன்சங்கேந்தும்
எம்பிரான்சோலைமலைக்கெய்தினேன்-மைம்பொற் ௧௪0
றலையருவியாடியெங்கள்சங்கத்தழகர்
மலரடியைப்போற்றிமகிழ்ந்தேன்-ஸ்தலமகிமை ௧௪௧
யானறிதலஞ்சுநாளங்கிருந்தேனங்கையோர்
ஞானியையன்றன்னுடனேநட்பானேன்-மேன்மையீர் ௱௪௨
சேர்க்கர்மதுரைதொழுதுவரவேநீரும்
ஒக்கவரவேண்டுமெனவுரைத்தே-தக்கோன் ௱௪௩
நகைத்தானிவ்வண்ண நடந்தகதையுண்டு
தொகுத்தமறைவேதியரேசொல்வேன்-மிகுத்தபுகழ் ௱௪௪

ஞானியார்நல்வழியுரைத்தமைகூறல்,

மேவிச்சிறந்தகோந்திவேந்தனெற்றியூர்த்திருநாள்
சேவிக்கப்போமனஞ்சிந்தித்தான்-தாவில் ௱௪௫

அமைச்சனங்கேசென்றக்காலங்கொருத்திவல்லி
உமைச்சிசெய்வாளென்றுரைத்தான்-அமைச்சனுரை ௱௪௬
மிஞ்சிகிடந்தான்வேசைகைக்குட்சிக்கினன்
வஞ்சிமருந்தான்மதிகெட்டான்-குஞ்சரமும் ௱௪௭
நாடுநகரவஸ்திரியும்வாங்கினள்
ஓடுங்குழையுமாவோட்டினள்-ஆடுகின்ற ௱௪௮
கூத்தாடிகள்வன்னோற்கோலம்பூண்டாடுவதைப்
பார்த்திரிலையோசொற்பாவலீர்-வாய்த்த ௱௪௯
கறைக்கண்டர்தென்மதுரைகாணவென்றுலாங்கோர்
தொறட்டுண்டதனையான்சொல்வேன்-பொறுந்தகசம் ௱௫௰

மதனாபிஷேகத்தின்பிறப்புணர்தல்.

அஷ்டதிக்குஞ்சூழ்கோயிலாலவாய்ச்சொக்கருக்குத்
தட்டதெடுக்குந்தழியிலாள்-வட்டமுலை ௱௫௧
மாணிக்கமலையெனுமங்கையொருபெண்ணடிதன்
காணிக்கத்தேடக்கருத்தாகி-ஊணைத் ௱௫௨
துறைமொழிகியுண்டுதவங்கிடந்துமெத்தக்
குறைகளெனக்குறிகள்கேட்டும்-பெறுவதற்குச் ௱௫௩
செப்புத்தகடெழுதிச்செம்பொற்கழுகதிலிட்டும்
கெர்ப்பத்துக்காமருந்துகிண்டியுண்டும்-தப்பாத் ௱௫௪
திருவனந்தல்சேவித்துஞ்செண்பகப்பூவாசம்
மருவனந்தநந்தனங்கள்வைத்தும்-இணையுடலை ௱௫௫
வேற்றொருவர்கண்டுவிரும்பாதநாள்தாழை
காற்றடிக்கப்பூத்தகதைபோலச்-சாற்றும் ௱௫௬
அரிவைதெரிவைகடந்தப்பானடக்கும்
பருவத்தேசர்ப்பம்படைத்தாள்-நரைவிழ் ௱௫௭
தலையிற்சுறப்பிறங்கிச்சாய்ந்ததெனத்தொங்கு
முலையிற்கறப்புமுதிரக்-கலக ௱௫௮
விழிவேல்குழியமுகம்வெண்மதியமாக
எழில்மேனிபச்சைநரம்பெய்தத்-தழைதருஞ்சூல் ௱௫௯
கொண்டவயிறுபெஞ்சைக்கூளேந்தான்சதிரத்தில்
உண்டுவருவோர்வயிற்றையொப்பாகத்-தண்டே ௱௬௰
அளிக்குடிக்குத்தாரலரும்புளியங்காய்க்கும்
புளிக்குடிக்குமுன்ன மிச்சைபூண்டாள்-களிக்கவயிற் ௱௬௧
றாடுத்தரித்தபிள்ளைக்குள்ளாவார்வாயிலள்ளிப்
போடுவதைத்தான்வாயிற்போட்டறிந்தாள்-கூடிவந்த ௱௬௨
மாதமொருபத்தாய்வயிறுளைந்துபெற்றாளவ்
வேதனையான்மூர்ச்சையாய்மெய்சோர்ந்தாள்தாதிமார் ௱௬௩
பெண்ணென்றார்காதிற்பிழிந்தமருந்ததுபோல்
துண்ணென்றழுத்துதுயர்தீர்த்தாள்-வண்ணமணிப் ௱௬௪
பொற்றொடிக்கைமங்கைநல்லாள்பொன்காய்க்கும்பூடொன்று
பெற்றதுபோலின்றெடுத்தபெண்கொடியை-மற்றுளால் ௱௬௫

## மதனாபிஷேகத்தின்வளர்ப்புணர்த்தல்.

ஏந்தியிருகையாலெடுத்துநறுநீராட்டிப்
பூந்துகிலான்மெய்துவட்டப்போட்டினர்-வாய்ந்தசங்கிற் ௧௬௬
சேனையுடன்வஞ்சத்திரட்டுமருட்டுமவ
தானப்புரட்டுந்தனம்பறிக்க-மானிடர்க்குச் ௧௬௭
செய்யுங்கவடமகாசித்திரிப்புமாராசப்
பொய்யுங்கலந்துபுகட்டினாள்-செய்யபசுந் ௧௬௮
தேனேகனியேதெவிட்டாததெள்ளமுதே
மானேயெங்கண்ணேமரகதமே-நானீன்ற ௧௬௯
பொன்னேயெனவெடுத்துப் பொற்குரங்கின்மீதேற்றி
மின்னேரிடையாள்விழிவாய்ப்பு-நன்னுதலிற் ௧௭௰
பாப்பிட்டசொல்லிவெள்ளிப்பட்டமெனவெண்ணீற்குக்
காப்பிட்டாற்சிற்றடிக்குங்காப்பிட்டாள்-சேப்பிட்ட ௧௭௧
செய்க்குவளைக்கண்மயிலேசெம்பொனுள்ளயோர்களையுன்
கைக்குவளையென்றுவளைக்கிட்டாள்-சிக்காப்புள் ௧௭௨
ஓட்டுக்குளாவதுபோலுள்ளமணக்காரர்களுந்
பொட்டுகருளாகவென்றுபொட்டிட்டாள்-பொட்டெனவே ௧௭௩
வேந்தர்புதையல்வெளியாக்குமஞ்சனம்போல்
வாய்ந்தவடிவேல்விழிக்குமையிட்டாள்-காந்திமுக ௧௭௪
வன்னக்கமலமதில்வண்டிருந்தாற்போலமகள்
கன்னத்தின்மீதோர்கறுப்பிட்டாள்-சொன்னதனம் ௧௭௫
வீடேறப்பண்டைமுதன்மேலேறத்தன்குடும்பம்
ஈடேறப்பொற்றொட்டிலேற்றினாள்-தேடியுன்பால் ௧௭௬
வாராதவாரார்வந்துமடிச்சீலைகொட்டித்
தாராதவாரார்தந்தணையிற-சேராதார் ௧௭௭
ஆராரார்சேர்ந்துனக்குள்ளாசைகொண்டுசுற்றற்றார்
ஆராராவென்றுதாலாட்டினாள்-தாராட்டிச் ௧௭௮
சீராட்டிமுன்னிருத்திச்செங்கைகொட்டிக்காட்டிமஞ்ச
னீராட்டியந்திலாக்காட்டிப்-பாரிற் ௧௭௯
கிளைப்பெரியநாகேந்திரன்கீர்த்தியைச்சொல்வாணர்
வளர்ப்பதுபோற்பெண்ணைவளர்த்தாள்-முலைகருமகள் ௧௮௰
தள்ளிடந்தாளதுகண்டுதாய்க்கிழவி
துள்ளிடந்தாள்துயர்தீர்ந்தாள்-பிள்ளையொரு ௧௮௧
சிற்றாடைக்கட்டித்தெருவில்வரக்கண்டுதிட்டி
சுற்றுமலேலிட்டிசுற்றினாள்-மற்றுமந்த ௧௮௨
வம்பிமாண்பழலைவார்த்தையைக்கேட்டாடவனாத்
தம்பியென்றுசொல்லத்தலைபட்டாள்-அம்புயக் ௧௮௩

கைக்குவளையிட்டுக்கடகம்பவளமிட்டு
தக்கையிட்டகாதிற்றளம்பமிட்டுப்-பக்கத்திற் ௧௮௪
கொண்டையிட்டுக்கொப்பியிட்டுக்கொப்பிட்டுகாலில்வெள்ளித்
தண்டையிட்டுச்செம்பொற்சதங்கையிட்டு-தெண்டாள ௧௮௫
மாலையிட்டிரட்டையரைஞாண்மருங்கிலிட்டு
வேலையிட்டசுட்டிநெற்றிமேலிட்டுக்-கோலச்சிங் ௧௮௬
தாக்கிட்டுச்செம்பவளத்தாழ்வடங்களிட்டுவச்சிர
மூக்குத்தளுக்கிட்டுமுத்தமிட்டு-நாக்குளிர ௧௮௭
வாரிட்டகொங்கைமதனபிஷேகமெனப்
பேரிட்டுலகறியப்பேச்சிட்டாள்-ஆரியமும் ௧௮௮
கன்னடமுங்கட்டிக்கரும்புபோலேவடுகும்
பன்னுதமிழும்படிப்பித்தாள்மன்மதவேள் ௧௮௯

பருவக்குறித்தாய்கண்டமையுணர்த்தல்.

சிற்பாதவல்குற்சிறியாள்வயதேழில்
நற்பாதமெல்லாநடித்தறிந்தாள்-உற்பனமாம் ௧௯௰
மோனவித்தையுள்ளமுனிவோரையுமயக்குங்
கானவித்தையெல்லாங்கரைகண்டாள்-மேனிக்குள் ௧௯௧
வாடைமஞ்சள்பூசுவதுமல்லிகைப்பூச்சூடுவதும்
ஆடவரைவீட்டுக்கழைப்பதுவும்-ஓடிப் ௧௯௨
பிலுக்குவதுங்கிட்டநின்றுபேசையிலேமுத்துக்
குலுக்குவதுங்கொஞ்சுவதுங்கொங்கைத்-தலைக்கருப்பை ௧௯௩
முந்திகொண்டுவெட்கம்போன்மூடுவதுங்காமுகரை
அந்திமட்டும்வைத்துவிளையாடுவதும்-வந்தவரை ௧௯௪
வாள்வீச்சுபோலவரிவிழிபாலவெட்டுவதும்
போர்வாய்ச்சிசண்டமபூரித்தாள்-ஏவலையார் ௧௯௫
கைக்குள்வசமாகிவந்துசாலைப்பிடிக்குமந்தச்
சொக்குப்பொடிமருந்துசொல்லிவிட்டாள்-சொக்கர்புது ௧௯௬
மண்டபத்தின்முன்னேவசந்தன்திருநாளில்
எண்டிசையோர்மெச்சவரக்கேற்றினள்-உண்டொடுக்குச் ௧௯௭
சின்னச்சிமிழாகிச்செப்பாகித்தேங்காயாய்
வன்னத்தனங்கள்வளர்ந்தேறக்-கன்னிகையாள் ௧௯௮
தன்னையறிந்தாள்தழியிலாள்தன்பழைய
பொன்னையொருபக்கம்புதைத்துவைத்தாள்-மன்னவர்கள் ௧௯௯
சுற்றுவதுங்காமுகரைத்தோயமகப்குமனம்
பற்றுவதுங்கண்டறிந்தாளப்பரத்தி-பெற்றெடுத்த ௨௱

தாய்க்கிழவிபோதிப்புணர்த்தல்.

மானேயென்கண்ணேமயிலேகுயிலேசெந்
தேனேமதனபிஷேகமே-மீனேறு ௨௱௧
குஞ்சிக்குநீச்சுங்கொடும்பாம்பினகுட்டிக்கு
நஞ்சுங்கொடுத்தலாரானங்கையே-செஞ்சிலக்கைச் ௨௱௨

சீவகனுக்கன் றொருமெண்சிங்கமொருகன் றீனும்
பாவனைபோலேயெழுதிப்பக்கத்தில்-ஓவியமாய்க் ௨௱௩
காரானையொன் றெழுதிக்காட்டவரிக்கன் று
போராடிப்மாய்ந்தகதைபொய்யலவேயாருக்கும் ௨௱௪
சாதித்தொழில்தனக்குத்தானேவருமொருவர்
போதிக்கவேண்டுமோபொற்கொடியே-மாதற்குள் ௨௱௫
உன்புத்தியென்புத்திக்கோவிரட்டையாகிலுமென்
தன்புத்தியுமகளேசற்றேகேள்-ஒன்மதூர்க் ௨௱௬
கொஞ்சிபரிகுலன்கூளேந்திரன்பன்றிமலை
மஞ்சட்குளியைமறவாதே-மஞ்சண் ௨௱௭
மணங்காட்டியாட்பிடிக்கும்வாடைப்பொடியின்
குணங்காட்டிக்கண்காட்டிக்கோலம்-இணங்கியபொன்
னுத்தரியஞ்சற்றேயொருமாற்றெரியவிட்டு ௨௱௮
குத்துமுலைச்செம்பொற்குடங்காட்டி-முத்துநகை ௨௱௯
காட்டிவகைகாட்டிநடைகாட்டியிடைகாட்டிநயம்
காட்டியிளையோர்க்காசைகாட்டுவாய்-கோட்டுமுலை ௨௱௰
சாய்ந்தான்முகந்திறைந்தாற்சல்லிக்காயென்றுநுணக்
கிந்தாமரிப்பவராரோங்கிழையே-ஆய்ந்தவஞ்சுப் ௨௱௰௧
பொட்டிமோலேநாத்தபெண்கள்கையிலென்னவருஞ்
சட்டிசுறண்டவருந்தையலேகட்டழகன் ௨௱௰௨
வாலிபத்தேதேட்டின்மனம்வைத்தாற்பொற்றகட்டால்
வேலியிட்டுகட்டலாம்வீடெல்லாம்-காலைப் ௨௱௰௩
பிடிப்பாருமுழுப்பிரட்டுப்பேசியிலைகிறி
மடிப்பார்தருவார்வருவார்-படுக்கைவிதங் ௨௧௪
காட்டுவேனென்பார்க்கள்ளவண்டர்தஞ்சளையுன்
வீட்டிலழையாதேமெல்லியரோ-வீட்டில்வந்து ௨௧௫
மாயப்பசட்டுவிதம்பண்ணுவார்க்குப்புழுதி
வாயிற்புகட்டுமயல்பூட்டி-நீயொருத்தர்க ௨௧௬
காசைவைத்தார்பின்னொருத்தாண்டாருடனெத்த
வேசையர்க்கெல்லாநகைப்பமெல்லியரோ-காசுபணம் ௨௧௭
குப்பல்கும்பலாகக்குவித்தாலும்வாலிபத்தில்
வைப்பிறுக்கசற்றுமனம்வையாதேசெப்பு ௨௧௮
முலையைக்கசக்கிவிட்டுமுட்டாள்சரசத்
தலையைவிடும்பேயையழையாதே-சிலைநுதலாய் ௨௧௯
முன்பின்னறியார்முடிப்பாகப்பொன்னெழுநூற்
றுன்மதுகந்தாலுமனமொவ்வாதே-இன்பமுடன் ௨௨௦
கூடுவார்நித்திலாநீகொள்வதும்பார்த்தும்மொடியைப்
போடுவார்சேலைவற்கம்பொன்னுடைமை-சோடிணையாச் ௨௨௧

சோரச்சுருட்டியப்பாற்செல்வார்விடிந்ததற்பின்
யாரைப்போய்க்கேட்பதுநாமாரணங்கே-ஊரிலே ௨௨௨

தந்தைகிழ்பிள்ளையுண்டுதாய்க்கிழ்ச்சிறுவருண்டு
வந்தால்மறையவரச்சொல்லி-தந்தமதின் ௨௨௩

வாயில்வடுச்செய்யாமல்மார்பினகம்வையாமல்
தோயுமிதங்காட்டிச்சுகங்காட்டு-சேயிழையே ௨௨௪

அந்திபடப்பணயமஸ்தமொக்கமாகவந்தால்
சொந்தமுள்ளபேர்தமக்குச்சொல்லியே-முந்திவந்து ௨௨௫

சாரமுண்மாய்நீயவன்பின்சக்கையத்தின்பாலேனமுன்
னோமறைத்தனுப்புநேரசமாய்த்-தூரத் ௨௨௬

திரிந்துவந்துகூடிவீடுந்தேகுமார்தம்மேல்
மரிந்தாசைபோற்பிறகேமற்றிப்-பிரிந்திருக்க ௨௨௭

மாட்டேனேயுன்னுலேமாப்பிளைமாராசையெல்லாம்
ஹோட்டேனேஎன்னமொடியோட்டாய்நீ-வீட்டில் ௨௨௮

தனித்திருக்கப்போமோடாசாமியுன்றன்பால்
இனித்திருக்குத்தாடாவிருடா-சனிக்கிழமைக ௨௨௯

கப்பாலேோநீவருவாயாணைபிடுமுக்காலும்
தப்பாதேயென்றனுப்புதார்குழலே-மைப்பொருங்கண் ௨௩௦

மாதுநல்லாய்வேறுமருந்தேனவர்திரும்பும்
போதுவருமேபுதையலெல்லாம்-காதல்கொண்ட ௨௩௧

மன்னவரைத்தூங்குசப்ரமஞ்சத்தின்மீதிருத்தி
யொன்னவரைக்கேளாமற்புல்லினுல்-மின்னரசே ௨௩௨

ஊர்க்குஞ்சவிகைநம்மோடொத்தவர்க்குமெண்ணிக்கை
யார்க்கும்கனத்தகுடியாகலாம்-யார்க்குள்ளே ௨௩௩

புல்லுவிற்றுங்கிளைவிற்றும்பொன்கொடுப்பார்காணமக்குக்
கொல்லிமலைப்பாவாய்குலதெய்வம்-மல்விழுந்த ௨௩௪

கூனற்கிழவன்கொடுக்கும்பணயமதில்
நானக்குழலேநாயுண்டோ-மானமின்றி ௨௩௫

அப்பன்வருவானதன்பின்மகன்வருவான்
தப்புமுறையென்றுநீதள்ளாதே-இப்புவியில் ௨௩௬

மாலகருளியர்வெகுமாமாயக்கள்ளர்தங்கள்
சோலிக்குப்போகாதேதோகையே-வேலையின்றித் ௨௩௭

தத்தையனையாரைத்தழுவிப்பணம்பறிக்கும்
எத்தைநாமெத்துவதுமெத்துகாண்-சித்ர ௨௩௮

கதையைக்கேளென்மருவக்காலத்திலிந்தப்
பதியிலோர்க்குச்சிவியப்பையல்-மதுரை ௨௩௯

மழுங்குணியென்னும்போரான்மாதர்தனத்தைத்
தழுவிப்பறிப்பான்தனத்தை-முழுதும் ௨௪௦

கிழக்குதெருவினெட்டைக்கிருஷ்ணசிவிட்டைக்
குளப்பமியாகப்பாரித்தான்கூடி-மூளைத்தெழுந்த ௨௪௧
செப்புமூலைமாதேசிவிலிபுத்தூர்தாசிக்
குப்புடமையெல்லாங்கொள்ளைகொண்டான்-வைப்பென்று ௨௪௨
தந்திரமாகப்பசப்பித்தஞ்சாவூர்செல்விதனைக்
கந்தைபொருததவிட்டான்கைம்மருந்தால்-இந்தவகை ௨௪௩
ஆங்கவனுக்கேகொடுத்தாரல்லாதவன்மொருளை
வாங்கினபேரில்லையென்மேலாகி-ஈங்குவந்தான் ௨௪௪
குன்றுமூலையாய்கொழுத்தகுட்டியகப்பட்ட
வென்றுபூரித்தேனிருதோளும்-அன்றுமுதல ௨௪௫
மாட்டிப்பறங்கிக்காய்மாதேதினஞ்சரியாக
கூட்டிக்கொண்டாங்கவனைக்கூட்டியே-வீட்டில்வந்த ௨௪௬
நாலாநாளல்லினடுச்சாமஞ்சோதித்துக்
சாவிற்றெருடுசெருப்புக்கட்டியே-மேலெலாம் ௨௪௭
வெண்ணீறுபூசியைந்துவீரசடைபின்னிட்டுப்
பெண்ணீலியென்றுகண்டோர்பின்வாங்க-யண்ணமின்றி ௨௪௮
கள்ளுஞ்சோறுங்கைச்சுரிகையுமாய்ப்போய்க்கழுவிற்
கள்ளன்வலதுகுதிக்கானரம்பில-மெள்ள ௨௪௯
விளக்கெரித்துநெய்வடித்துவிட்டிலவந்தானன்றாய்
உழக்கரிசிபெய்தூரவைத்துப்-புளிப்பில்லாச் ௨௫௦
சாற்றிடும்வாழ்கும்பிற்சற்கரையிற்கூட்டியிட்டுஞ்
சோற்றிலிட்டுநெஞ்சைச்சுழலவிட்டு-வேற்றவனு ௨௫௧
பாயத்தாற்றேடும்பணப்புற்றிலேகரடி
வாயைவைத்தாற்போலுறுஞ்சிவாங்கிவிட்டேன்-பேய்போல ௨௫௨
கையிலுள்ளதெல்லாம்போய்க்கப்பரையொன்றேந்தியதோ
தெய்வமேயென்றுதிரிகிறான்-கொய்யரிசி ௨௫௩
காணுக்குநாள்செலவானக்காயுனக்குவரும்
ஆளுக்கிருக்குதின்னமாழாக்கு-வாள்விழியாய் ௨௫௪
வேடிக்கையாய்மாசிவீதியிலேநாமுலவ
ஆடிக்கிழுன்னேயென்னுசையெனத்-தேடுகிறி ௨௫௫
யுள்ளவனைமெள்ளவுபாயமாய்க்கூட்டிப்போய்க்
கொள்ளும்பவளமுத்துகோவைவடம்-உள்ள ௨௫௬
கடையுஞ்சவுளிக்கடையும்யார்த்தையா
கிடையாச்சரக்குக்கிடைத்த-தலைவாயேன் ௨௫௭
னுத்தண்டமாலையைக்காதோலையைப்பொன்மோதிரத்தை
வைத்தெனருலுங்கடுகவாங்கித்தா-பத்தஞ்சு ௨௫௮
வட்டிசுமந்தாலுமப்பால்வாங்கலாமென்பாயக்
கொட்டனுக்குநெஞ்சுருக்கென்னும்-யொட்டெனத்தன் ௨௫௯
கைத்தனத்தையீவான்கடையிலேபுள்ளரசக்
கத்தனையும்வாங்கியறையிலிட்டு-வைத்து ௨௬௦
மருந்திடுப்பிற்கட்டிவருவார்சிலர்மேல
இருந்துடம்பைவாட்டியெடுப்பார்-பரிந்தணைந்து ௨௬௧

கைச்சரம்போற்றடவிக்கண்டுபிடித்துடனே
பிச்சப்பிடுங்கியெறிபெண்ணணங்கே-லச்சையுற ௨௬௨
மன்மதநூலைப்படித்தவம்பனையென்றுணையுன்றன்
சென்மசென்மமுள்ளமட்டுஞ் சேராதே-சன்யாச ௨௬௩
ருத்திராக்ஷப்பூனைருமா சிலருண்டுவந்தால்
மெத்தையிலேவைத்துவிளக்கணைத்துச்-சத்தமின்றிக். ௨௬௪
கூடையிலேயாள்வந்து கூப்பிட்டாளேயர்தமைக்
கூடையிலேமூடிவைத்து கூப்பிடுநீ-மாடிக். ௨௬௫
கடுக்கனலைக்குங்கவிப் புலவர்வந்தால்
துடுக்காயொருவார்த்தைசொலவாய்-கொடுக்கவென்றுல். ௨௬௬
ஐந்துபொன்வாங்காரைம் பணமேபோதுமென்பார்
சிந்தையலர்மகிழச்செய்திட்டால்-நந்தம். ௨௬௭
இசைபாடுவார்கூடாதென்றுற்கொடிய
வசையாடுவார்கெடுமேவாழ்வி-அசையளவும் ௨௬௮
அஞ்சுகின்றகச்சேரியாட் சேவகர்வந்தால்
வஞ்சியவரீந்ததைநீ வாங்கிக்கொள்-கொஞ்சமென ௨௬௯
எண்ணுதேகை முதலைமற்றென்னபோமோர்செம்பு
தண்ணீர்போம்நாயிடும்பொய்ச் சத்தியம்போம்-பெண்ணணங்கே ()
வாவென்றழைப்பார்மணியப்பிலுக்கர்கும்மா
போவென்றுசொன்னாலும்பொல்லாப்-பாவையே ௨௭௧
தாசனையாச்சேலையிலேதம்பலத்தின்சாறுமிழ்ந்து
ருதகமானேனென்றுதூரவிரு-மாதவிடா ௨௭௨
யானநாளிற்பணையம்ஸ்தசொக்கங்காணிலொரு
மானேவென்னீர்க்காவெண்ணிப்பாராதே-நானுன்மேல் ௨௭௩
மோகமுற்றேனீயென்மேல்மோகமில்லையென்றுசிலர்
தோகைநல்லாயுன்கருத்தைச்சோதிப்பார்-ஓகோநீர் ௨௭௪
என்னமாச்சொல்லவந்தீரென்றுசையும்மேலென்
றன்னமேயென்றலைநெட்டாணையொடு-சொன்னவந்தப் ௨௭௫
பொய்யனையாற்சீவன்போகுதோபாவனக்குக்
கையாலவ்வாணைதயிர்ச்சாதம்-கையில் ௨௭௬
இருக்கடினிற்செல்லாப்பணத்தையீந்துபடுத்துக்
கருக்கலிலேபோவானைக்காட்டித்-தரச்சொல்லு. ௨௭௭
வாயமட்டாப்பேசினுல்மானேமுசலின்மேல்
நாயைவிட்டாற்போலெழும்பிநம்மைவிடு-கோயிலுக்குள் ௨௭௮
நம்பியானையனுட ஞானுண்டுநம்பியார்
தம்பியானைக்கூடிச்சஞ்சரிநீ-அம்பெனுங்கண். ௨௭௯
மைவிஸ்தாரக்குயிலே வாய்விஸ்தாரக்காரன்
கைவிஸ்தாரக்காரன்கையைவிடு-செய்யுமறைக். ௨௮0
கட்டளையார்வந்தாலுன் கைம்மருந்தாலேயறிவைத்
தட்டழியப்பண்ணிதனம்பறிநீ-அட்டவிலே. ௨௮௧
சோறுசமைக்குஞ் சுயம்பாகிவந்தக்கால்
வேறுமொருவேளாண்மைவேண்டுமோ-சாறும். ௨௮௨

பரும்படியுச்சம்பாவும் பாற்குழம்புநெய்யும்
வரும்படிந்தக்கட்டளையாய்மானே-தரும்பொருளை ௨௮௩
வெம்பளிக்கைபண்ணுதே லெஞ்சினப்பண்டாரிவந்தா
லும்பளிக்கையூர்வரத்தையோகுமே-சம்பளத்தைக். ௨௮௪
கூட்டிச்சுமத்திவைப்பான் கோயிற்கணக்கனொரு
வேட்டுப்போட்டுப்போகவிட்டிலனே-ஆட்டுவிக்கக், ௨௮௫
கால்பிடித்தாட்டுவனூர் கையைப்பிடித்தழைத்தால்
வேலவடைத்தகண்மயிலே மேவிவிடு-சாலநெடு, ௨௮௬
நேரஞ்செலலாமனெடுங்குடைசைக்காரனைமுன்
நேரமழைத்தனுப்புநேசமாய்ச்-சாரமுள்ள ௨௮௭
நாடகத்துப்பாங்குசமக்குடைத்துவிக்கும்
பாடகனையுந்தனதுபண்ணிக்கொள்-கூடுதித்திக் ௨௮௮
காரனையுங்கைத்தாளக்காரனையுமெக்காளக்
காரனையுங்கூடியிதங்கட்டாகோ-தாறு ௨௮௯
தலையாய்க்கைத்தாழைத்தம்பியராய்ப்பிறற்
கலையராயுன்னழகைக்கண்டு-விலைகொடுத்தால் ௨௯௰
வாங்குவாய்சற்றேமருவுவான்மெய்ப்படுவான்
தூங்குவான்யோவான்சுகமறியான்-பூங்குயிலே ௨௯௧
மஞ்சத்தினியுமொருமாப்பிளையுமாயிருந்து
மிஞ்சுசாத்திலொருவேற்றுள்வந்-தஞ்சாறு ௨௯௨
தந்தாலவனைச்சமையல்வீட்டிற்பதுக்கிச்
செந்தேனேமெல்லச்செறுமுவென்-வந்தணைந்து ௨௯௩
கொல்லைக்குட்போனகுணம்போற்கைகாலலம்பி
மெல்லப்போநம்மையவர்வெல்லுவார்-நல்ல ௨௯௪
உடந்தையாகத்திருந்தவுத்தியோகஸ்தர்க்
கிடைஞ்சல்வந்தாலுன்னையும்வந்தேய்ப்பார்-மடந்தையே ௨௯௫
காணிக்கையானேனுன்கண்டியைத்தாதண்டையைத்தா
மாணிக்கமாலையைத்தாவைத்துநான்-காணிக்கை ௨௯௬
தீர்ந்தமறுமாதந்திருப்பித்தருவனென்பார்
ஏந்திழையேநீசற்றிணங்காதே-காந்தாரி ௨௯௭
தாய்க்கிழவிசம்மதித்தாற்சம்மதமென்பாயெனது
வாய்க்குட்பயந்தவர்பின்வாய்ப்பேசார்-நோக்கமாய் ௨௯௮
என்னைக்கலந்தவர்களென்றாலுங்கைநிறையப்
பொன்னைக்கொடுத்தாற்புணர்ந்துவிடு-பின்னே ௨௯௯
பறவைமிருகங்கண்முறைபார்க்குதோவேசி
முறைபார்க்கவேபிழைப்புமோசம்-சிறுமோதே ௩௱
தேடியல்லோவன்பிற்சிலப்பியென்றுமன்னவனைக்
கூடிதிருவாரூர்கொண்டியென்றும்-ஆடவரைத் ௩௱௧
தட்டிப்பெருங்குண்டைத்திம்பியென்றுங்கொண்டைபிற்பூ
மட்டுண்டவொற்றியூர்வல்லியென்றும்-சிட்டர்தொழும் ௩௱௨
பூவணமாம்பொன்னகரிற்பொன்னனையாளென்றிமுட்டற்
பூவணமாந்தென்னுறையூர்ப்பொன்னியென்றும்-தேவர்தொழும் ()

சொக்கேசர்கோயிற்றுணைக்கொடியென்றும்புவிக்குள்
மிக்கானபேர்படைத்தார்மெல்லியரோ-அக்காலம் ௩௱௪
வண்ணமாற்றுப்பசும்பொன்வாங்கவொருத்திசெய்த
இன்னமாற்றுக்கதையைக்கேட்டிலையோ-பெண்ணணங்கே ௩௱௫
என்றிமடித்தாயியம்பினாள்புத்தியதை
யன்றிப்படித்தாளனேகபுத்தி-அன்றுமுதல் ௩௱௬

### மதனாபிஷேகத்தின் செய்திகூறல்.

காதன்மதமீடிவருங்காமுகராம்யானைகளைக்
கோதிமுகிராங்குசத்தார்குத்தியிதம்-ஓதியந்த ௩௱௭
யாரணரண்மனைக்குள்வைத்தணைத்துச்சேர்ந்தாச
சாரக்கரும்புதனையூட்டி-ஆலவாய்த் ௩௱௮
தம்பற்கவளந்தனைக்கொடுத்துக்கும்பமுலைக்
கம்பத்துடன்பிடித்துக்கட்டினாள்-அம்பரத்தீ ௩௱௯
மூட்டிவிக்கும்யோகமுனிவோரையும்பொம்மல்
ஆட்டுவிக்குந்தோலுருப்போலாக்கினாள்-தீட்டியவேல் ௩௱௰
வண்ணக்குடையரசர்மாணிகியாமுங்கீழா
உண்ணக்குறுமுனியையொப்பானாள்-பெண்ணுக்குத் ௩௱௰௧

### அவளது தோழிகளைக்கூறல்.

தோழிமார்கைமருந்துச்சொக்கியென்றுஞ்சாரயத்
தாழியென்றுந்தாதுசவுக்கியென்றும்-ஏழுமதி ௩௱௰௨
லேறியென்றுந்தஞ்சாவூபெத்தியென்றுமாமாயக்
காறியென்றுங்குண்டுணிவாய்க்கள்ளியென்றும்-மாராட்டக் ௩௱௰௩
குள்ளியென்றுமாயக்குறவியென்றுமாரீசக்
கள்ளியென்றும்பத்துபேர்காமுகரை-மெள்ளப் ௩௱௰௪
பொருத்துதவாருடலாய்ப்போவாரையோடி
திருத்துவார்தாரரைச்சிம்பித்-துரத்துவார் ௩௱௰௫
கல்விலேநாருரித்துக்ககண்சாரணைத்துவிடங்
கல்லுவார்தாமுமொருகைப்பார்ப்பார்-மெல்லிநல்லார் ௩௱௰௬

### அவளைவிரும்பியஆடவர்செய்திகூறல்.

இவ்வாறுசெய்யவிருநிதியந்தேடுமந்த
மைவார்விழியாண்மகிநுகற்கும்-செவ்விக் ௩௱௰௭
கொடியிடைக்குநிலவெறித்த குறுநகைக்குமெயில்விளைத்த
பிடிநடைக்கும்வயிரமிட்டப்ரவைமிகுத்த-தொடிகளுக்கும் ௩௱௰௮
அலையுதித்தவமுதெனச்சொலருமொழிக்குமிருவிழிக்கும்
மலைகளொக்குமுலைகளுக்குமனதுவைத்து-வலையினுக்குள் ௩௱௰௯
மான்சிக்கினாற்போல மருள்வாருந்தூண்டிலிலே
மீன்சிக்கினாற்போல்மெலிவாரும்-ஏன்சிக்கிக் ௩௱௨௰
கொண்டோமென்றுள்ளங் கொதிப்பாருங்கூடியின்பங்
கண்டோமென்றுங்களிப்பாரும்-கண்டனைய ௩௱௨௰௧

மெச்சுமடந்தைதச்சுப்பிடிக்குமனதாசையென்று
பூச்சுமருந்திட்டணையம்போவாரும்-வாச்சுதென்றே ௩௨௨
யார்க்கும்பொடிபோடு மாயிழைமுன்வாடைமணம்
சேர்க்கும்பொடிபூசிச்செல்வாரும்-ஊர்க்கிணங்கத் ௩௨௩
தந்தனத்தையிந்துசரிந்ததனக்காரிபண்ணுந்
தந்தனத்துக்குள்ளாய்த்தளர்வாரும்-தந்திரமாய் ௩௨௪
மாதைப்பசப்பவென்று வாசன்மட்டுமவந்துநாப்
பூகத்தைக்கண்டகலப்போவாரும்-சேர்தாயுளை ௩௨௫
கால்பிடிக்கவோவடப்பைகட்டவோசண்பகப்பூ
மேல்பிடிக்கவோவிசிறிவீசவோ-கோலமலர் ௩௨௬
கட்டவோகட்டழகிகண்ணுறங்கப் பொற்குறங்கி
தட்டவோவென்றுருகிற்சார்வாரும்வெட்டிவேர் ௩௨௭
மண்டுகுழலாள்குளித்தவாடைமஞ் சணீரையள்ளிக்
கொண்டுதலைமேற்றெளித்துக்கொள்வாரும்- அண்டர்பிரான் ௩௨௮
சன்னிதியிற்சந்தடியிற் றளருண்டுவீழ்வார்போற்
பின்னுகுழலாளைப்பிடிப்பாரும்-பின்னொருத்தன் ௩௨௯
வீட்டிலிருக்கவெளியிலேநின்றுகண்ணை
காட்டித்திரிந்துகரைவாரும்-வீட்டிறப்பை ௩௩௰
அண்டிக்கலவிசெய்யுமாரம் பங்கேட்டுவெட்டித்
துண்டித்தாற்போலத்துடிப்பாரும்-சண்டனையாள் ௩௩௧
சோதிமுகமஞ்சள் துவண்டதுகிற்போர்வையுடன்
வீதிதொறும்போய்ப்பிலிக்கிமீள்வாரும்-காதளவு ௩௩௨
மைப்பட்டகண்ணிசப்ர மஞ்சத்தின்மேற்காலைத்
துப்பட்டிக்கொண்டுதுடைப்பாரும்-செப்பமுள்ள ௩௩௩
தெப்பத்திருநாளிற் றெப்பக்குளத்துமங்கை
தெப்பத்தேயேறிவருஞ்சீராட்டில்- அப்பம் ௩௩௪
வடைச்சுகியன்றோசைவகைகள்பணியாரம்
கடையிலேகொண்டுமடிகட்டிச்-சடுதியிற்போய் ௩௩௫
நாரிகையிலேகொடுக்க நாடிவடமோடுமாழ்
வாரியிலேயோடிவருவாரும்-பேராம் ௩௩௬
வசந்தன்றிருநாளில மண்டபத்தின்மங்கை
இசைந்துநடம்புரியுமெல்லை-கசங்காமல ௩௩௭
மல்லிகைப்பூச்செண்டு மருக்கொண்டுசந்தடியை
மெல்லவிலக்கிவரும் வேளையிலே-நல்லபடைக் ௩௩௮
கம்பாலடிப்பட்ட கஸ்தியினுநொந்துடம்பு.
செம்பாலொழுக்கத்திரிவாரும்-தம்பிரான் ௩௩௯
பல்லக்குக்கூடிவதிறைநாழிகைமேல்
வெல்லாக்குங்கொங்கைவளவுக்குச்-செல்லுகையிற் ௩௪௰
குக்கல்வாய்காட்டிக்கொடுக்கத்தலைவாரி
கைக்குளகப்பட்டுக்கட்டுண்டு-கக்குரதம் ௩௪௧
மூக்கிடொழுக முழுங்கையிடிபட்டுநெஞ்சிற்
ஈககட்டிக்கொண்டுதிரிவாரும்-தூக்குமனோரந் ௩௪௨

தேயொருவன்வீட்டிலிருக்குமதுகாணுமற்
போயொருவன்வீட்டிற்புகுதவே-யுபாயமற்ற ௩௪௩
பூசல்விளைத்துப்பொருமையினாலேவாது
பேசிவெளியிற்புறப்பட்டு-ரோசமுடன் ௩௪௪
மாதொருத்திக்காப்பொருத வாலியுஞ்சுக்கிரீவனும்போல்
வீதியிலேமற்கட்டிவீழ்வாரும்-சாதிவாத்தி ௩௪௫
வட்டிவெளிச்சமினுமினெனவந்தியர்முன்
கட்டியங்கள்கூறக்கடுநடையாத்-தொட்டிவரும் ௩௪௬
மாதக்குறட்டிறபவழற்றுமிழிலங்க
மாதுமணவாளக்குளமன்னர்வரும்-போதிலந்த ௩௪௭
வீட்டிற்பரணேறி மேவுந்தொழிலமளி
கேட்டுப்பதுங்கிக்கிடப்பாரும்-பாட்டிளஞ்சொன் ௩௪௮
மாங்குயிலைப்போலமருவக்களவுகண்டு
தூங்கையிலேயிந்திரியஞ்சோர்வாரும்-ஈங்கிவனுக் ௩௪௯
கியம்வகைகாணேன் மிசகம்பொன்னுக்குயது
யாயமென்றுமித்ரமபலகூட்டித் தீயிற ௩௫௰
குகையிலேவைத்துக்குனிந்தூதிவாதப்
புகையிலடிபட்டுப்புகைத்து-திகைதெரியா ௩௫௧
மாலைக்கண்ணுகி மதிமயங்கித்தங்கள்தங்கள்
காலைக்கண்ணுக்கிவழிகாணபாரும்-வாலிபத்தில் ௩௫௨
பூணார்முலையாட்காப்பொன்றிருடிக்கைபிரண்டும்
சாணுகக்கண்டிதளர்வாரும்-வாணுதற்காத் ௩௫௩
தாங்கணமிட்டுத் தலையைக்கடைக்காசு
வாங்கென்னவிட்டுலைமாய்ப்பாரும் தூங்கிவிழும் ௩௫௪
வண்ணனைமயிரும் மாதவிடாய்த்தபயலரும
பெண்ணுய்த்தலையோடும்பின்னையொன்றுஞ்சுண்ணம்பும் ௩௫௫
பானைப்பாலேனைத்தே பாவியங்கைத்தலத்திற
பூனையோற்றேண்டிப்புதைப்பாரும்-மானனையாள் ௩௫௬
இட்டமருந்தா லிருமலபிடித்தோயாமற்
குட்டியிட்டநாய்போற குரைப்பாரும் ஓட்டியபுண். ௩௫௭
என்பவர்க்குநாணி யிரசந்தின்றின்கரும்பு
தின்பவர்சுநாணித்திரிவாரும்-பொன்சரிகைச் ௩௫௮
சேலைகொடுத்ததற்குச்சீமாட்டியென்கொடுத்தாள்
சூலைகொடுத்தாளென்றுசொல்வாரும்-மூலவளா. ௩௫௯
யாப்புக்குச்சத்திரமிட்டாக்கிகாக்கக்காககாய்த்
தோய்பிறகிடந்துதுடிப்பாரும்-மாப்பிளைமார ௩௬௰
வைத்தகைக்குறியை மங்கையிருகொங்கையிற்கண்
டெய்த்துநெடுமூச்செறிவாரும்-முத்தமுதத்தாய், ௩௬௧
பேசினலும்போதும பேதைநங்கைத்துஷணமா
யேசினுலுமபேர்துகெனபாரும்-பசிளமுயாள். ௩௬௨
கொந்தலருமபூவணைமேற் கும்பகணலீலைசெய
இந்திரன்போறபக்கத்திருப்பாரும்-ஐநதுபத்து. ௩௬௩

மாடுவிற்றோநூறுமறிவிற்றோமேழுமங்கை
ஆடுவிற்றோம்வீட்டிலடிமைவிற்றோம்-தேடரிய. ௩௬௪
வெண்கலத்தாற்குத்துவிளக்குவித்தோங்காணிவிற்றோம்
உண்கலத்தைவிற்றோமுடைமைவிற்றோம்-பெண்செலவுக். ௩௬௫
கென்னத்தைக்கேட்கவந்த லென்னத்தைநாங்கொடுப்போம்
என்னத்தைச்சொல்லுவோமென்பாரும்-முன்னமிந்த, ௩௬௬
மின்னாசைகொள்ளாமல் வீணாக்குங்கொண்டோமிச்
சன்னாசமென்றுதளர்வாரும்-என்னசெய்வோம், ௩௬௭
மங்கைவிற்றுமீந்தோம் பணமினுந்தாருமென்றாள்
எங்கேசுமையெடுப்போமென்பாரும்-கங்குலுக்கு. ௩௬௮
இத்தினோனாகாசி செல்லோனாமோங்குலுநாம்
இத்தனையுங்கோற்றிழந்தோமென்பாரும்-அக்கையார். ௩௬௯
சூலைமகளுநற்சொனமெல்லாங்கைக்கொண்டு
காலையெனருளனுமனைவாரும்-நாளிசே. ௩௭௰
பாண்டிநாட்டிச்சிபணமறுஞ்சினாள்நாங்கள்
ஆண்டியானோமென்றலைவாரும்-ஆண்டிமார்தம் ௩௭௧
தொண்டுபோய்வேடம்போய்த்தோளைக்குடையவரைக்
கொண்டுபோய்க்கையிற்கொடுப்பாரும்-கண்டசெட்டு, ௩௭௨
மோசமாச்சுக்காண் முதலுக்குப்புலவாண்டைக்
காசுமில்லையென்றுகரைவாரும்-வேசியிவட். ௩௭௩
இந்தபொருளைவட்டிக் கீந்தோமோநாமிருக்க
வாய்ந்தமச்சிவீடுகட்டி வைத்தோமே-கூந்தலிளம். ௩௭௪
பேடைமயிலபோல்விட்டுப் பெண்டாட்டிக்கேயுடமை
சோடினையாப்பூட்டிச்சுகித்தோமோ-ஆடுமொண்டு ௩௭௫
விட்டோமோமாடுகொண்டு விட்டோமோதெய்வத்துக்
கிட்டோமேதேடியென்பாக்கிந்தோமோ-அஷ்டதிக்கும் ௩௭௬
காடிப்புகழ்பெரியநாமகன்மேற்பாமாலை
சூடித்தியாகஞ்சொரிந்தோமோ-தேடுநிதி ௩௭௭
தன்னைக்கொடுத்துத்தரித்திரத்தைவாங்கினோம்
என்னவியாபாரமென்பாரும்-இன்னவகை ௩௭௮
காமுகரெல்லாமயங்கக்காளத்தியையன்மகன்
ஆமொருவனிவ்வாறாதியையன்-சேம ௩௭௯
மதுரைக்கொருநாள்போய்மாசித்தெருவில்
விதிவசத்தாற்கண்டானம்மின்னை-மதிநுதலாள் ௩௮௰
மையலுக்குள்வீழ்ந்தான்வடுச்செய்தமாமரத்தில்
மெய்யுரிஞ்சப்பொய்க்கவரிவீழ்ந்தாற்போற்-கையில் ௩௮௧
இருந்ததெல்லாம்வீட்டிருந்ததெல்லாமாஸ்தி
இருந்ததெல்லாந்தோற்றானிறந்தான்-மருந்தினாற் ௩௮௨
கள்ளுண்டார்போலக்கலங்கினனவாசலிலே
தள்ளுண்டான்றன்னொழுக்கந்தப்பினான்-விள்ளுவதென் ௩௮௩
ஆதியையனென்னும்பேரன்றேபோயிப்பால்வி
யாதியையனென்னும்பேராயினான்-பாதி ௩௮௪

யுடலாகிமெய்யாட்டியபுண்ணுள்ளுருக்ககார்க்கும்
தொடலாகச்சீச்சிரங்குசூலை-கொடிய ௧௮௫
அரையாப்புமேகவட்டையண்டத்துவாதம்
புரைதாய்ம்மவுத்ரம்புகைச்சல்-இருமல் ௧௮௬
இளைப்புப்பொருகுமருந் திட்டநோய்ப்பித்தம்
களைம்புமாய்ப்பூணைபோற்கத்திக்-கிழக்கே ௧௮௭
அடுத்தமலையிலருகுதிண்ணைதன்னிற்
படுத்துக்கிடக்கிறான்யாரும்-மடித்தவரோ ௧௮௮
இப்படியாய்த்தேடி யுண்ணுமேந்திழையாள்வாழ்மதுரைக்
கெப்படிபோவீர்வருவதெப்படிகாண்-செப்புமவ ௧௮௯
தானியையரோவென்றுதக்கபுத்திபோதிக்க
ஞானியையனைப்பாத்தநான்விரத்தி-யானேன் ௧௯௰

அவதானி மதுரைக்கேகினமைகூறல்.

இருப்புத்தூணிற்கறையானேறுமோமோம்பேம்
நெருப்பிற்புழுவோமோநீரொன்-கருத்தை ௧௯௧
அறிவீரொன்றேநல்லதையரோவென்று
பிறியாமல்வந்தாரொன்பின்னே-நெறியினிற்போய் ௧௯௨
வையகமேலெய்தியசீர் வைதிகநூன்மெய்யொலிசேர்
மொய்திரைநீர்வையையில்லான்மூழ்கியே-உய்யப் ௧௯௩
படியுமடியவர்கொடிய படிறுசெயுமிடர்முழுதும்
அடிருமெழுகவலினிடையாருக்-கிடையோப ௧௯௪
பாத்துக்கேவிருப்புற்றோர் பவத்துக்கோர்நெருப்பொப்பாம்
அருட்பொற்றாமரைக்குட்போமாடி-உருச்செபிக்கும் ௧௯௫
ஐந்தெழுத்தைச்சிந்தைவைத்திட்டன்பருக்குச்சஞ்சலத்தை
சிந்துசிந்திக்குஞ்சாத்தைத்தெண்டனிட்டுக்-கந்தபுஷ்மக் ௧௯௬
கற்பகமெனப்பொலிகடம்பநிழலிற்குலவும்
அற்புதகயற்கணுமையைத்தொழுது-சிற்பரத்தில ௧௯௭
நேசர்மனவாசர்பவ நாசர்கயிலாசர்சக
தீசர்மதுரேசரடியானபோற்றி-நேசமுடன் ௧௯௮
துங்கப்ராகாரத்தைச்சுற்றிவடகுடபாற்
சங்கப்புலவர்தமையேத்தி-எங்குமுள்ள ௧௯௯
தியமாபாதகமுந் தீரதீர்த்தம்பருகி
நாயகர்பொற்கோபுரத்தைநானீங்கி-ஆயிரக்கால் ௨௱

மதனபிஷேகத்தைக்கண்டு மருண்டமைகூறல்.

மண்டபத்திற்கண்டேன்மதனபிஷேகத்தை
விண்டலத்தைவிட்டுவந்தமேனகையைக்-கொண்டைச் ௨௱௧
சொருக்கழகுமுத்துத்தாரழகுஞ்செவ்வாய்
முருக்கழகுஞ்சேலை புகப்பிற்-சுருக்கழகும் ௨௱௨
வேலழகுமென்றவிழியழகுந்தனவடையிட்ட
காலழகும்பொற்கடகக்கையழகும்-ஓலையிட்ட ௨௱௩
காதழகும்வச்ரமணிச்சிறுக்குமார்பழகும்
சோதிமுகத்தழகுந்துங்காத்த-மாதுரதி ௨௱௪

சட்டமுதும்மொட்டழகுங் கச்சைகட்டிவந்தகட்டு
மட்டமுகுங்கண்டுமயங்கினேன்-கிட்டவந்த ௪௯௫
நாட்டத்தைக்கண்டுநடந்துசிலக்காமனும்பூந்
தோட்டத்தைக்கொள்ளைகொண்டுதோன்றினான்-வாட்டமதன் ௪௯௬
கையம்புயாயவஞ்சி கண்ணம்புயாயநின்று
தொய்யுமான்போலத்துவக்குண்டேன்-தெய்வசுதி ௪௯௭
காணுமிசைராகங் கைத்தாளமத்தளங்கை
வீணைபலகைதித்திவேணுசாம்-கோணமல் ௪௯௮
கூடுஞ்சுருதியுடன்கொம்மையாள்சங்கீதம்
பாடுஞ்சுருதியின்பம்மாலிக்க-ஆடவரை ௪௯௯
எய்யுமதவேள்கைக் கிசையுமலரீவாள்போல்
தையலாள்புஷ்பாஞ்சலிசெய்தாள்-செய்துபிள்ளை ௫௱
யார்கவந்துவக்கொண்டா ளாடவினையாயி
ஞர்கவந்துவங்கொண்டுநண்ணினேன்-சேரும் ௫௱௧
நிலைக்கிடைகொண்டாள்மருட்டிநீலமலர்ச்செங்கண்
வலைக்கிடைகொண்டாளென்மனதைக்-கலைப்பாத ௫௱௨
மூந்தோளொடுப்பெடுத்தாள்மூரிவில்லைப்பூட்டியொண்மேல்
வந்தோளொடுப்பெடுத்தமன்மதவேள்-நந்திசொன்ன ௫௱௩
சொற்கட்டிலாரிதொடுத்தாள்முன்னின்றவரை
மற்கட்டுவாள்போல்மறைபயின்றேன்-பொற்கடகக் ௫௱௪
கைச்சாலங்கொண்டாள் கனம்பேசலாமிதற்கே
மெச்சாலமென்றுரைத்தார்விஞ்சையோர்-மெச்சுந் ௫௱௫
தருக்கொண்டாள்மற்றோர்சதிகொண்டாள்கண்டே
மருட்கொண்டிருக்கவெனைவைத்தாள்-விரித்தகருள் ௫௱௬
மாகிமடித்தாள்கீதம்பாடினாள்பூப்போடு
வாகிகடித்தாளிதயங்கினர்-சூதுமுலை ௫௱௭
மாதுபிரபந்தம்வகுத்தாளிதற்குறைப்ப
தேதுபிரமந்தமென்னவெண்ணினேன்-நாதப் ௫௱௮
மதசாரிசாரிகொள்ளய்யார்வேந்தரீந்தார்
முதுசாலிகைப்பொன்முடிப்பை-சதிராக ௫௱௯
நின்றவினயங்கள்செய்தாள் நிஷ்டூரியென்மனது
கன்றவினயங்கள்செய்தாள்கண்ணுலே-மன்றிலெலாரு ௫௱௰
கோப்பெடுத்தாள்வேந்தர்பொனைக்கொள்ளைகொள்ளக்கள்ளி
யிந்தக-கேப்பெடுத்தாளென்றுசொன்னகூடவந்தோர்-காய்மான ௫௧௧
தாரணிகொண்டாள்வோர்தடமருடங்கற்பிக்கப்
போரணிகொண்டாளரப்பேய்கொண்டேன்-ஆரணங்கு ௫௧௨
சங்கணிநின்றுடச்சபையிலேயோடியந்த
மைக்கணிலையமுத்தாடவாஞ்சித்தேன்-இக்கணையாள் ௫௧௩
செயுலாருவித்தையினற்செம்போனுடனேமெனவென்
கைலாகிமனந்தக்கருத்தானேன்-மைவாளும் ௫௧௪
கைவாளுமென்னைவெட்டக்கள்ளியொருகூத்துவிதம்
செய்தாளம்மான்வலையிற்சிக்கினேன்-தொய்யாமல ௫௧௫

தேசிகத்திலோர்நடனஞ்செய்தாள்கடையிலுள்ள
கோசிகஞ்சொன்னுடை யெல்லாங் கொள்ளைகொண்டாள்-பேசும்
நயமங்கலப்பெண்ணடனம்பலசெய்தாள்
செயமங்களம்பாடித்தீர்த்தாள்-மயல்கொண்டு ௪௨௭
வேதையென்றன்மனதும்வெண்களும்பின்னேதொடர
மாதுமனைக்கேகலுற்றுகொண்டாள்-காதில்விசைப் ௪௨௮
பந்தடிப்போற்றுள்ளிப்பாதவித்தேன்பாங்கனையச்
சந்தடியைக்கைகலயவிட்டுத்தப்பினேன்-மந்த்ரசெப ௪௨௯
சுற்றனெனுங்களையுந்தோழனெனும்பாகனையும்
புத்தியெனுமங்குசமும்போக்கியே-மத்தமிஞ்சம் ௪௩௰
பெண்ணானைத்தொடரும்போரானையேபோலப்
பண்ணார்மொழியாள்பின்பற்றினேன-வண்ணமலர்க் ௪௩௧
காவிவிட்டகண்கடலின்கலினென்றேலமிட
மேவிவிக்கிரனைப்போன்மின்னெறிய-வாவிவர்கண் ௪௩௨
டண்ணுந்தகொங்கைக்கறிவைக்கொடித்திலயிற்
சுண்ணும்படமற்சுருட்டியுண்ணக்-கண்ணிரண்டும் ௪௩௩
மங்கைகளேலாகவருவாரும்போவாரும்
தங்களிலேதங்கள்தலைமோத-துங்கமத ௪௩௪
அத்தியின்மேற்சொல்லுமாசரிவள்கொங்கைகளும்
மத்தகமுநோக்கிமதிமருளத்-தத்துமரி [௪௩௫
கான்மீறினுற்போற்கலினகெகிழவிட்டு
மான்மீறினுனொதிரோமாவிவிட-மேல்விழியாள் ௪௩௬
சந்தனகும்பஸ்தனங்கள்சுமந்திட்டவிடை
நைந்தனமென்றுநடுங்கநடந்திவள்-வந்துதன் ௪௩௭
சொன்முகம்புமாளிகையிற்போய்ப்புகுந்தாளின்றேநான்
முன்முகப்புவாயிலிலோர்மூங்கைபோல-என்முன்னொரு ௪௩௮
செக்குவருலதுபோல்சிமாட்டிகைமருந்துச்
சொக்கியெனும்பாங்குவந்துதோன்றினன்-மைக்குழலாள் ௪௩௯

பாங்கிகள்சந்திசெய்தமைகூறல்,

ஆரொன்றுநுங்களூர்யாதென்றேளேதுங்கள்
பேரொன்றுளண்டியண்டிப்பேச்சிட்டாள்-காரிகையே ௪௪௰
சீரங்கமெங்கள்பதிசிங்கையரென்தகப்பன்
சாரங்கபாணியையர்தம்பினன்-நாரணையர் ௪௪௧
சுப்பையரொன்மாமனூர்சோமாசிபட்டர்பெறும்
அப்பையங்காரெங்கள்தம்பியாகுமே-செப்புகவி ௪௪௨
அஷ்டாவதானியென்பேராரிழையேயென்மனைவி
மட்டார்குழலிமனவெறுப்பால்-விட்டேகி ௪௪௩
நாடிவந்தேனுங்கள்பதிநம்பர்சொக்கலிங்கர்முன்னின்
றுடிவந்தபெண்ணரசியாரொன்றேன்-ஆடவரே ௪௪௪

மாணிக்கமாலைபெற்றவச்சிரத்தைக்கும்மகுடக்
காணிக்குவாய்த்தகனதனத்தை-ஆணிமுத்தை ௪௪௫

விண்ணிச்சைகொள்ளவந்தமேனகையைப்பெண்ணுக்கும்
பெண்ணிச்சைகொள்ளவந்தபெண்ணமுதை-எண்ணரிய ௪௪௬

சாஸ்திரவிதக்கொக்கோகசாரத்தைமேல்விருது
மாத்திரசிரோமணியைமைக்கிளியை-வாய்த்தமட ௪௪௭

மானைமரகதத்தைமன்மதகுமோரியைச்செந்
தேனைமதனபிஷேகத்தை-நானிலத்தோர் ௪௪௮

எல்லாமறிந்திருக்கயாமறியோமென்றவிதம்
சொல்லியென்முன்மயலைத்தூண்டினாள்-மெல்லியலாய் ௪௪௯

இன்றைக்கெவர்வருவாரோவிழைக்கென்றேனந்தக்
குன்றைப்பொருதமுலைக்கொம்பனையாள்-அன்றதற்குப் ௪௫௦

பட்டணத்துப்பாரமத்தம்பாஸ்கரையனோகோட்டைக்
கட்டளைமானோனாயக்கட்டுமலை-மட்டடையிற் ௪௫௧

சோலையப்பப்பிள்ளையோசுற்றுதடைகட்டு
மாலையப்பப்பிள்ளையோவாசல்வழிச்-சாலையஞ்சற் ௪௫௨

காரமணியங்கனகசபாபதியோ
வாரணிலாயம்மணியம்பார்க்காமே-சீரணவு ௪௫௩

ஆரமணியமரசப்பனேதர்ம
தானமணியஞ்சதாசிவனே-மேன்மைதரும் ௪௫௪

கோயிற்றுறைமணியங்கும்பலிங்கப்பிள்ளையோ
ஆயத்துறைமணியமாண்டியோ-ஓய்வறுகா ௪௫௫

மோட்டமணியமுருகப்பனேகிளைத்
தோட்டமணியவெட்டைச்சொக்கனே-மாட்டுவரிக் ௪௫௬

காரனோபாசிவரிக்காரனோபீரங்கிக்
காரனோவொற்கொடிமேற்காதலொடும்-ஓரிரவில் ௪௫௭

எத்தனையோபேரிங்கேயெத்தனையோபொன்கொடுவர்
தெத்தனையோசொல்வார்களெத்துக்கள்-உத்தமிதான் ௪௫௮

அங்கவரிலேயொருவர்க்காலுமாய்நேரோள்
சிங்கஞ்சிறுதேனைதின்னுமோ-உங்களையபோல் ௪௫௯

நற்குணமுள்ளார்தமையேநாடுவாள்வேந்தாதரும்
பொற்குவைக்குமுள்ளம்பொருந்தாள்காண்-சொற்புலமை ௪௬௦

விறலையாகியநல்வேதியரேயென்றுசில
கூறியதன்பின்னையக்கோதையங்கே-ஒருதலைத் ௪௬௧

தூதுசவுந்தரிக்குச்சொன்னாள்பயிலாக
ஏதுக்கழைத்திரெனவந்தாள்-மாதுக்கின் ௪௬௨

றூர்வருவார்சொல்லென்றேனருமில்லைப்பொன்கொடுத்து
நீர்வருவீராகிலிங்கேநிற்பானேன்-வாருமென்றுள் ௪௬௩

முத்தனையமுத்துநகைமோகவல்லிக்குப்பைமணம்
எத்தனைபொன்சொல்லென்றியம்பினேன்-அத்தைக்கு ௪௬௪
மூந்நூறுபொன்மகட்கு மூந்நூறுபொன்னெனக்குப்
பின்னூறுபொன்றோழிப்பெண்களுக்குச்-சொன்ன ௪௬௫
தொறுநூறுபொன்னு மொருமுடிப்பாய்த்தந்து
வருவிரேல்வாருமென்றாள்மங்கை-துரைமதுரை ௪௬௬
வெள்ளைப்புதுவெட்டுமின்னலாயப்படியே
அள்ளிக்கொடுத்தங்கனுப்பினேன்-உள்ளிருந்து ௪௬௭

எவற்பெண்களுபசரித்தமைகூறல்,

பைந்தாரணிகூந்தற் பைங்கனிவாய்ப்பெண்கள்சிலர்
வந்தார்தொழுதார்வரச்சொன்னார்-சந்தனத்தி ௪௬௮
கைவிளக்குக்கொண்டுவந்தாள்கால்விளக்கநலதண்ணீர்
தெய்விகொண்டுவந்தாள்பொற்செம்பிலே-மைவிழியாள் ௪௬௯
அங்கிபிடித்தாளடப்பைவரிசைசின்னத்
தங்கிபிடித்தாள்தனிப்படிக்கம்-செங்கலவை ௪௭௰
பூசினாள்பூசிலந்து பூமுடித்தாள்பூவிமெல்ல
வீசினாள்பொன்கவரிவெண்கவரி-ராசி ௪௭௧
கைலாகுதந்தாளென்காலேறுத்தமென்று
வெயிலாள்பாவாடைவிரித்தாள்-ஒயிலாகப் வஎஉ

மனைக்குட்சென்றிருந்தமைகூறல்,

மம்புபெருமோனுட்பகட்டறியாப்பாய்புலிபோல்
அம்பொனெடுமனைக்குள்யான்சென்றேன்-செம்பவளப் ௪௭௩
வோதிகைக்காலேந்துசிங்கப்பொங்கத்தன்கைச்சவுக்கை
மீதுரத்நகம்பளவிசாலத்தில்-மோதுசரிக் ௪௭௪
கோட்டாரக்கொங்கையார்கொண்டுவந்துநின்டருகு
போட்டார்துரைப்பாங்குபோலிருந்தேன்-வாட்டங்கண் ௪௭௫

மதனாபிஷேகங்கண்டு உபசரித்தமைகூறல்.

வட்டமிட்டகொங்கை மதனாபிஷேகமூனான்
கட்டிவிட்டபொன்முடிப்பைக்கைக்கொண்டு-இஷ்டத் ௪௭௬
தருக்குடையேன்றன்னைவந்துசந்திக்கவொண்டு
பருக்குமெலுமிச்சம்பழங்கள்-மருக்கொழுந்துச் ௪௭௭
செண்டுகொண்டுதன்னிடத்திற் சென்றிருந்தவென்மனதுங்
கொண்டுகொண்டுவந்துமின்றாகும்பிட்டாள்-ஒண்டொடியாள் ௪௭௮
காதலைச்சேர்ந்தறியாக்கன்னிமோல்குகறியாப்
பேதைபோற்கூசிமெள்ளப்பேசினாள்-மாதவரோ ௪௭௯
மண்டபத்திலாடினேன்வந்துநின்றீரும்மைநான்
கண்டுமயலாகிப்பென்மக்சத்துள்ளோர்-ஒண்டொடிகை ௪௮௰

மெள்ளப்போய்க்கூட்டிவாவீட்டிலென்றேன்மாரீசக்
கள்ளிகுழப்பிக்குழப்பிவிட்டாள்-தெள்ளுதமிழ்ப் ௪௮௧
பாட்டிலேவல்லியென்பங்கிற்குலதெய்வம்
வீட்டிலும்மைக்கூட்டிவந்துவிட்டதே-வீட்டில்வரத் ௪௮௨
தாங்களேன்வாசற்றலைக்கடையினிற்பானேன்
பாங்கியேன்வந்தாற்பயமேன்-நீங்களல்ல ௪௮௩
லூவைகண்டேமுடித்துப்போவோமென்றெண்ணினீர்
மேவிக்கொண்டானுன்விடமாட்டேன்-தேவரீர் ௪௮௪
சித்தமெங்கள்பாக்கியமென்றுசெப்பினாள்சாலவித்தை
யத்தனையுமெய்யெனறேயானிருந்தேன்-கைத்தலத்தால் ௪௮௫
மின்னிருக்குநுண்ணிடையாள்மென்கமலக்கைபிடித்து
முன்னிருத்திக்கொண்டுமுகம்பார்த்தேன்-இன்னரத்தைக் ௪௮௬
கூட்டினாளேத்துமுலைக் கோட்டினாள்தந்திரியை
மீட்டினாள்சங்கீதவெல்லச்சா-றூட்டினாள் ௪௮௭
சொக்கேசர்மேற்கவியுஞ்சொக்கேசர்தம்பாதி
மிக்கானவங்கயற்கண்மேற்கவியும்-தக்கபுகழ்ப் ௪௮௮
பாண்டித்துரைமீதிற் பாட்டும்படித்ததற்பின்
ஆண்டநிலைகோட்டைமதியன்மேல்-தாண்டிபுகழ்ச் ௪௮௯
சிங்காசனாதிபதிசிந்தமகூலேந்த்ரனருள்
எங்கோனைபெரியநாகேந்த்ரன்மேல்-மங்கை ௪௯௦
பதம்படித்தாள்வண்ணம்படித்தாளென்காதுக்
கிதம்படைக்குந்தேன்போலினிக்க-விதம்படைக்கும் ௪௯௧
முற்கட்டும்பாகமுஞ்சீர்மோனைகளும்பொருளும்
பிற்கட்டுமுன்மூணும்பின்மூணும்-நற்கட்டாம் ௪௯௨
சொற்கட்டுங்கண்டுவிலைதொண்ணூறுபொன்பெறுமோர்
கற்கட்டுமோதிரத்தைக்கையில்விட்டேன்-விற்பிடித்து ௪௯௩

தாய்க்கிழவிகண்டு உபசரித்தமைகூறல்,

வாங்கினாற்போலவளைந்தவறட்டுடலும்
தாங்கிவைத்தகாலுந்தடிக்கொம்பும்-தேங்காய் ௪௯௪
குடுக்கைபோல்வாயுங் கொடுவாயுஞ்சற்றே
நடுக்குந்தலையுநரையும்-பொடிக்கொசுவு ௪௯௫
மொய்த்தகண்ணுங்காற்று முட்டிமுன்பறியம்பின்பறியக்
குத்திருமல்லோட்டலைக்குஞ்சோப்புமாய்-வித்துக்கு ௪௯௬
விட்டசுரைக்காய்போல்விழுந்துமுழங்காலதனைத்
தொட்டமுலைத்தாய்கிழவித்தானையினாள்-இட்டவர ௪௯௭
நாணமுற்றாள்மாமியென்றுநாணியத்தன்னுடம்புக்
கோணலுக்குள்ளேசற்றெகோணினாள்-நாணுதுங்கி ௪௯௮
வந்திரோவெங்கள்வரிசைத்துரையேநீர்
சந்தோஷமாகவிங்கேதான்வாரீலே-இந்தமனை ௪௯௯

என்னதவஞ்செய்ததோவென்பேதைமுன்பிறப்பில்
என்னதவஞ்செய்திருந்தாளோ-கன்னிமூன்றா ௫௱
நாளிரவுகண்டகனாவையுமென்பேதைமணித்
தோளிதுவக்கந்துடித்ததுவும்-ஆள்வருத்தில ௫௱௧
காகங்கதறியதுங்கட்டைச்சிதும்பியதுங்
தோகைக்கொருகுறத்திசொன்னதுவும்-யோகம்வரப் ௫௱௨
பல்லிசிமிழ்த்தம்பலகாலியம்பியதும்
நல்லவனைச்சேர்க்குமென்றுநங்கையுடன்-சொல்லிவைத்தேன் ()
அப்படியேவந்தென்னாசைமகள்குணத்தை
இப்படியென்றேயறியீரின்னமுநீர்-பொய்ப்பிறட்டுச் ௫௱௪
சாலைவித்தைப்பெண்கள்தடத்தின்மிகுத்தறியாள்
மாலைவித்தைப்பெண்கள்மனைக்கேகாள்-நாலு ௫௱௫
பாத்தையனைப்போலேமணங்காசுதேடிக்
கருத்துண்டோகாயக்கங்காணேன்-ஒருத்தர்கிட்ட ௫௱௬
மானுளைவிட்டேனோமாயக்கிரந்திவந்து
தானுமொருகாசுக்காகுமோ-நானின்ற ௫௱௭
மாதுக்குராசாதளர்ச்சியேயல்லாமல்
ஏதுமறியாள்சிறியாளின்னங்காண்-பேதைக்குக் ௫௱௮
கொஞ்சவயதானாலுங்கூடிப்புணைக்கலந்து
கொஞ்சவயதுகாண்கொற்றவரே-வஞ்சிநல்லாள் ௫௱௯
தன்மனதுகேற்கச்சவதரித்தார்பொன்கோடி
மன்மதன்வந்தாலுமினிவாங்காள்காண்-என்மகட்குப் ௫௱௰
மாவிலேமெல்லப்பழமூவிழ்ந்தவிதம்
போலவந்துவாய்த்திரப்புவரோ-நீயொரு ௫௱௰௧
மெய்ப்பிள்ளையைப்பெற்றேன்பிடிப்புவிடாமற்கொண்ட
மாப்பிள்ளையும்பெண்ணுமாய்வாழ்ந்திருங்கள்-மாப்பிளைக்கு ௫௱௰௨
நித்திரைமெத்தநெடுநேரமாகுதுபோ
தத்தைமொழியாயென்றுசன்னைசொல்லி-அத்தையரும் ௫௱௰௩
போயினார்மாமியரும்போயினார்செம்பவள
வாயினாள்வீட்டில்வாருமென்றாள்-சேயிழையாள் ௫௱௰௪

பள்ளியறைச்சிறப்புகூறல்.

முன்சென்றாள்பின்சென்றுமுன்முகப்புவாசலிலோர்
பொன்கொண்டிழைத்தரத்நப்போதிகையோமின்கொண்ட ௫௱௰௫
சித்ரக்கொடுங்கையோசெம்பொனிலையோகவிதற்
பத்தியிட்டதோர்கண்ணாடிப்படமோ-கத்திரிப்பு ௫௱௰௬
வேலைநிறைத்தபுதுமேற்கட்டியோசிறந்த
மாலைநிரைத்தவரிசையோ-கோலவச்ராக் ௫௱௰௭
காலிட்டதூக்குமஞ்சகாந்தியோபட்டாடை
மேலிட்டமல்லிகைப்பூமெத்தையோ-ஏல்லைநண்டு ௫௱௰௮

தாங்கிபதிவட்டிக்குத்தானேதயிலம்விடப்
பாங்கில்வைத்தருக்கிரப்பொற்றாவையோ தூங்குமஞ்சப் ௫௧௯
பக்கத்தில்வெள்ளிப்படிக்கமோபள்ளியறைத்
திக்குக்குத்திக்குமதிற்சித்திரத்தில்-மைக்கருங்கட் ௫௨௦
பெண்ணிரதிபோலாளுபேர்க்கொருவனேலீலை
பண்ணவெழுதிவைத்தயாவனையோ-தண்ணளியோன் ௫௨௧
மேற்கொண்டொருமடந்தைமிக்காமுபரிசெயக்
கார்க்கொண்டைபின்சரியக்காலெழும்பிப்-போர்க்கலவி ௫௨௨
பட்டந்திற்குநககுமாகவெழுதிற்கழுவிற்
போட்டவிதமயோர்விருந்தபொங்கமோ-வாட்டமுற ௫௨௩
மோடிவைத்தபெண்கமலாள்கைபிடித்துக்கடைக்கண்
காடிவைத்தாளென்றுநயம்பேசச்-சூடகத்தை ௫௨௪
தன்னைக்குவித்துத்தலைவன்றலையிருந்த
மின்னனையாள்காட்டஞ்செய்விந்தையோ-பின்னொருமால் ௫௨௫
அம்பனையகண்ணிபுமோகாரூந்தலைமாறிச்
கும்பனங்கள்செய்யுந்தொழிலவிதமோ-சம்ப்ரமங்கள் ௫௨௬

தாய்க்கிழவிவாவிட்டவரிசைகூறல்.

சொல்லமுடியாதுதூங்குமஞ்சத்தேறினேன்
மெல்லவிழுங்கொப்பத்திலவேழம்போல்-நல்லதங்கத் ௫௨௭
தட்டிலேயாக்குவெள்ளித்தட்டிலேவெள்ளிலைப்பொற்
பெட்டியிலேமல்லிகைப்பூச்சிப்பூ-வெட்டிவேர் ௫௨௮
தந்தச்சிமிழிற்சவாதுகுர்ணமட்டைதனிற்
கெந்தபொடிபவளக்கிண்ணத்திற்-சந்தனங்கள் ௫௨௯
கூறுங்கிளிமொழியைக்கூடிவிடாயாறித்
தேறும்பொழுதிலுண்ணச்சிற்றுண்டி-வேறுசில ௫௩௦
பீங்கானிற்றண்ணீர்பிடிசெம்பிலேவெந்நீர்
தேங்காய்முலையார்சிலபேர்கொண்-டாங்குவந்து ௫௩௧
மாமிவரவிட்டவரிசையென்றுவைத்துநின்றார்
காமியவர்களைக்கண்காட்டினாள்-சேமமணி ௫௩௨

மடக்கைசேர்த்தமைகூறல்.

வாசற்கதவடைத்தாள்மங்கைநல்லார்போனதற்பின்
பேசுக்குளமிட்டுப்பேதைபோற்-கூசி ௫௩௩
மதிவதனங்கோட்டிவளைதிருத்திநின்றாள்
புதியமணவறைப்பெண்போல-மதனுபி ௫௩௪
ஷேகமேயென்பிராணஸ்நேகியேதாங்காதென்
மோகமேயென்றவளைமுத்திபிடித்-தேக ௫௩௫
சயனத்திருத்திமுகத்தன்னின்முகஞ்சேர்த்து
நயனவத்திலவைத்தேனயனம்-தயவுவரப் ௫௩௬

பேசிமலர்மல்லிகைவேர்பிச்சைமுடித்துக்கலவை
பூசிச்சவ்வாதுபுனுகணிந்து-தேசம் ௫௩௭
பிடிக்கக்கொடுத்தாள்பிளவுதாம்பூலம்
மடித்துக்கொடுத்தாள்தன்வாயாற்-கடித்துக் ௫௩௮
கொடுத்தாள்சிலசருளைக் கொஞ்சிமடிமீதிற்
மடித்தாள்புளகம்படைத்தேன்-எடுத்தணைத்து ௫௩௯

## அநுபோகவகைகூறல்.

கொங்கைமுகம்பிடித்துக்கொங்கைவாய்த்தேன்குடித்து
செங்கையொடுநெகிழ்த்தேன்சேலைதனை-அங்கவளென் ௫௪௦
சோமனுரிந்தாள்துடைமேற்றுடைபோட்டாள்
காமமொழுகவிட்டாள்காமியத்தைக்-காமக் ௫௪௧
கலைமுறையேயாலிங் கனங்களைந்துசெய்தோர்
முலைசுவைத்துமற்றோர்முலையை-மெலநெருடிக் ௫௪௨
கைம்மூலமுண்டு கவுண்மாங்கனிசுவைத்து
மைவிழிநுவலைவைத்துவாங்கிசும்-மையத ௫௪௩
தலையழுத்திபுந்திதனின்மகாங்கிறிக்
கலவைகழுத்தணைத்துக்கட்டி-நிலைமைபெறச் ௫௪௪
சாதிகுணங்குறிகள் தத்துவங்கள்தேர்ந்துசுக
மாதுயருவவகைகண்டு-சோதித் ௫௪௫
தறிந்துமதியினமிர்தநிலையாராய்ந்
திறங்குமிடமேறுமிடங்கண்-டிநதுவிஷ ௫௪௬
ஸ்தானமகத்தியுள்ளங் காலிவருடியின்ப
மானவிரள்சுவைத்துள்ளங்கால்கள்-தேனின்றுன் ௫௪௭
மெல்லமெல்லநீவிவிரல்கொண்டுசுற்றியந்த
வல்லிமேலென்கண்வரிசிலையிற்-சொல்லும் ௫௪௮
அகாரஉகாரஏகாரஐகார
இகாரக்கணைகளைவைத்தெய்து-மகாசுகநீர் ௫௪௯
பாய்ந்தொழுகச்சேர்ந்தணையிற் பஞ்சகரணத்தின்மே
லாய்ந்தகரணமுதலாங்கரணம்-மாய்ந்தமகிழ் ௫௫௦
அந்தக்கரணமடங்குமெனக்குமொன்றாய்
முந்தக்கலவிப்போர்மூளவே-சந்தனப்பொற் ௫௫௧
குங்குமகும்பகுடங்களைவென்றத
னங்கள்புயங்கள்ததும்பி-நெருங்கிட ௫௫௨
மங்கைகுறங்கென்மருங்குநெருங்கவே
னங்கைநகங்களழுந்த-மயங்கி ௫௫௩
அணைந்துகுழைந்துமேயன்றிவிரண்டு
பிணைந்தவிதங்கள்பிணைந்து-மணங்கமழ் ௫௫௪
ஆகமுமாகமுமாவியுமாவியும்
மோகமுமோகமுமூரலும்-ஆகவோர் ௫௫௫

எட்டுடனெட்டையிரட்டிசெயத்தொகை
ரட்டிசெய்திட்ட வதைத்தொழில்-இஷ்டமுடன் ௫௫௬
கண்ணாடியில்ரதியுங்காமனுங்கற்கின்றதெனக்
கண்ணாடியிலொருமாற்காண்பிக்கப்-பெண்ணரசி ௫௫௭
தண்டரளப்பூண்மார்புதாங்கியுமாதியில்
மண்டலம்போல்முன்னிருத்திவார்குழன்மேல்-வண்டெழுத்து ௫௫௮
சங்கீதம்பாடஸ்தனங்கள்தாளம்போடச்
செங்கனிவாய்மென்குதலைத்திங்குழல்போற்-பொங்கமுற ௫௫௯
மங்கைகல்லாளாயிரக்கால்மண்டபத்திலாடினள்போல்
இங்குமொருமன்னமதக்கூத்தாடினாள்-எங்கும் ௫௬௰
கற்றகலைக்கூற்றுங்காட்டிவலசாரி
சுற்றியிடசாரிசுற்றினாள்-மற்றுமந்தப் ௫௬௧
பைந்தொடிக்கைத்தாடனம் பளீல்பளீலென்றுவிழக்
கந்தமலர்க்கைவளைகலீலென்னக்-கந்தரத்தில் ௫௬௨
ஒன்றுகுகுகுவெனவொன்றுகுமுகுமென
ஒன்றுருக்குக்கென்னவோசைதரக்-குன்றுத ௫௬௩
புள்ளொலியெட்டுங்குமுறப்போதாக்குறைக்குவித்தைக்
கள்ளிகொடிப்பின்வளைக்கைகொடுத்தாள்-மெள்ளமத ௫௬௪
பீடத்தில்வைத்தென்னெருங்காமவாரிதியில்
ஓடத்தில்வைத்தபயிலொப்பானாள்-கூடுகின்ற ௫௬௫
மின்னனையாள்தன்னறிவு மெய்யும்புதுமலரும்
கன்னதமும்போன்மருங்குதள்ளாடச்-சின்னபின்னக் ௫௬௬
கோவைவடந்திருத்திக்கூந்தல்புறத்தொதுக்கி
வேர்வைதுடைத்துமெள்ளவீசியே-காரிகையை ௬௬௭
முத்தமிடவொட்டாதமூக்குத்தியைக்கழற்றி
முத்தமிட்டேன்மெச்சியென்னைமுத்தமிட்டாள்-முத்தையன் ( )
ஆமடாகொங்கைகளுக்கைந்துகிரும்வைத்தாக்கால்
நேமடாமன்மதனன்னூல்படித்த-சாமி ௫௬௯
இறுகிறகுசமயமெனவினியமொழிகுழறவிழை
முறுவலதுவெளிறமுலைமுனைமதுர-மறுகுகொடி ௫௭௰
யிடைதுவளநுதனெளிபவிலகுமிதழ்மதரவிரு
துடைகள்படபடெனவருசகலவித-கடலுடைத்துக் ௫௭௧
கொண்டபெருக்கென்னக்குபிலென்றுபாயவதில்
ஒண்டொடியுநானுமுருவிலியும்-தண்டரள ௫௭௨
மெத்தையுங்கைக்கீச்சுமித்தப்போகமாய்ச்சோம
நித்திரைபோய்ச்சற்றேநினைவுவந்துசத்தமாய் ௫௭௩
என்கலையைச்சுற்றிப்பிடுக்கிமுகங்கோட்டிப்
பொன்கதவைத்தள்ளிப்புறப்பட்டாள்-முன்புசெலும் ௫௭௪

மோகினிபின் செல்லுமுனிபோலேயான் சென்றே
யோகாநீர்ப்பன்னீராற்யோக்கியே-நாகரிக ௫௭௫
மங்கையுடன்றிரும்பிவந்தேன்மலரணையிற்
செங்கைவளைநெரிந்துசிந்தியதும்-அங்கவிழ்ந்த ௫௭௬
மாலையொருபாகம்வதங்கிக்கிடந்ததும்பொன்
னூலையொருபக்கம்மொதுங்கியதும்-கோலமுத்தம் ௫௭௭
சிந்தியதுஞ்செம்பவளஞ்சிந்தியதுங்கண்டேயென்
சிந்தையறிவையங்கேசிந்தினேன்-வந்திருந்த ௫௭௮
குன்றைப்பொருதமுலைக்கொஞ்சுமொழிக்கிஞ்சுகவாய்
மன்றற்குழலிமடிசாய்ந்தேன்-என்றலையைச் ௫௭௯

மதனுபிஷேகந்தன்னைப்புகழ்ந்தமைகூறல்.

சுற்றிக்கிரணந்தொடிவளைக்கையாற்றனது
நெற்றிக்கொருயானெரித்திட்டாள்-கற்றதொழில் ௫௮௰
காட்டினாயாவென்கண்திஷ்டிபட்டுதின்பம்
பூட்டிநீர்கண்டேன்புருஷனாயும்-நாட்டிலே ௫௮௧
உங்களைப்போலேகலவிக்குத்தரிக்கவல்லவர்யார்
இங்குவரக்காணேனிதுவலாக்கும்-தங்காத ௫௮௨
கோழிப்போகக்காரர்கோட்டைவாசற்காரற்
சூழத்திரிவார்தொடருவார்-பாழுறிவார் ௫௮௩
தன்போகமுந்திவிட்டுத்தவிப்பவரேயல்லாமல
என்போகமுந்துவிப்பாரில்லையே-அன்பரே ௫௮௪
ஆணெல்லாமும்மைப்போலாகுமோமுருங்கைத்
தூணெல்லாகலவைத்துணுமோ-வீணே ௫௮௫
முருக்கமலரார்தான்முடிப்பார்முடித்தால்
மருக்கொழுந்தின்வாசம்வருமோ-ஒருத்தர்முகம் ௫௮௬
பாரேனினியெனக்குப்பள்ளியறைமாப்பிளையும்
நீரேசரியென்றுள்ளேசம்போல்-காரானைக் ௫௮௭

புணர்ச்சிவருத்தம் போக்கினமைகூறல்.

கூட்டுங்கவளம்போலுண்ணக்கனிகொடுத்தாள்
கோட்டுங்குழலிகுழம்புப்பால்-நாட்டம் ௫௮௮
விரும்பக்கொடுத்தாள்மின்னுளதாக்
கரும்பைப்போலேருசிக்கக்காணேன்-திரும்ப ௫௮௯
நடந்தகலவிசொல்லாலுநாள்செல்லும்
விடிந்துதபமெய்தினன்வெய்யோன்-மடந்தைநல்லாள் ௫௯௰

விடிந்தபின் தன்செய்திகூறல்.

மேவிலங்குமஞ்சள்மட்டுவெண்பூணூல்பொன்பூணூல்
போலிங்கக்கண்டுமனம்பூரித்தேன்-சால ௫௯௧
அழுந்துநகக்குறியையாடவர்கண்டேங்கச்
செழுந்திணநீர்வைகையில்யான்சென்றேன்-தொழுங்குலத்து ()

நானவன்மேனாக்கசயினாறையுருவியென் றுகுப்பை
மேனிபிடிங்கிப்பல்விளக்கினேன்-மோனமந்த்ர ௫௯௩
தர்ப்பணத்தைநீக்கித்தலைமுழுகினேன்கலவி
யுற்பனத்தையெண்ணியுருச்செபித்தேன்-பொற்புடைய ௫௯௪
மாயஸ்திரீயைவிட்டுவந்தனெடுநேரமென்று
காயத்திரியைவிட்டேன்காமிபோல்-தூயமணி ௫௯௫
தூவுதிரைவையையிலோர்சோமன்மறந்தேன்முன்
காவிரியிற்போட்டகலக்கம்போல்-தீவரமாய்ப் ௫௯௬
போனேனவண்மனையிற் பொற்கொடியாள்சொற்படியோர்
மானுளெனையழைக்கவாருமென்று-மீனுட்சி ௫௯௭
யாயிவீட்டிற்சமையலாச்சுதுபோமென்றாள்நான்
போயிருந்துசாப்பிட்டேன்போசனத்தாற்-காய்கறிகள்
இன்னதெனவறியேனின்னரசமென்றறியேன் ௫௯௮
கன்னிமேல்வைத்தகவனத்தால்-என்னுடைய ௫௯௯
கையிரமாறுமுன்னேகாதலியைவந்தணைந்து
சையோகவைபோகசம்போக-மெய்மோகம் ௬௱
ஆகச்சுகித்தேனகம்பட்டேன்பாய்மரத்திற்
காகத்தையொத்தேனென்காதலால்-மோகவலைப் ௬௱௧

தாய்க்கிழவிமருந்துகூட்டத் தொடங்கினமைகூறல்.

பூட்டுக்குளானேனைப்போழ்வாய்ச்சிகைமருந்துக்
கூட்டுக்குளேயடக்கக்கோப்பிட்டாள்-காட்டு ௬௱௨

வனமூலிகைசேர்த்தமைகூறல்.

மருந்துவகைநாவடக்கிவாதமடக்கி
கருந்துவளாபாடவனகஞ்சா-பெருந்தும்மை ௬௱௩
ஆகளைமேற்புல்லுருவியாவணாமேற்புல்லுருவி
மாதளைமேற்புல்லுருவவல்லாரை-தூதுவளை ௬௱௪
பேய்ப்பீர்க்குபேய்முசுட்டைபேய்ச்சிமிட்டிபேய்ப்புடலை
நாய்ப்பாசனுயுருவிநாய்வேளை-நாய்க்கோட்டான் ௬௱௫
புன்னைப்பூவன்னிப்பூபூளைப்பூகாழைப்பூ
முன்னைப்பூமாம்பூமுருக்கம்பூ-சின்னிப்பூ ௬௱௬
பூலாவேர்சங்கம்வேர்புங்கம்வேர்தைதவளைவேர்
வேலாவேர்நெட்டிவேர்வெட்டிவேர்-நாலைவேர் ௬௱௭
அத்திக்காய்துத்திக்காயல்லிக்காய்நெல்லிக்காய்
கத்திரிக்காய்பேய்ச்சுரைக்காய்காஞ்சிரங்காய்-மத்தங்காய் ௬௱௮
வின்றுசிறுங்கிகிலம்புரண்டியாலின்கிழ்க்
கன்றுமணமுறுஞ்சிகாஞ்சோறி-குன்றியிலை ௬௱௯
பின்றொட்டிமுன்றொட்டிபெண்டொட்டியாண்டொட்டி
பொன்றொட்டியைவாய்ப்புலிதொட்டி-இன்பூமல் ௬௱௰

ஆனைவணங்கியமுகன்னிதொழுகண்ணி
பூனைவணங்கிபுளிமடலை-ஊனு ௯௱௰௧

தலைசுருளிகன்னூரிதான்றிவெள்ளைத்தோன்றி
மலைகலக்கிதேள்கொடுக்குவாகை-யிலைகருநா ௯௱௰௨

ரத்தங்காய்ப்பிஞ்சுதமர்த்தம்பூப்பிஞ்சுமலை
நத்தைச்சுரிக்கொழுந்துராட்டகத்தி-சிற்றகத்தி ௯௱௰௩

தோதகத்திபட்டகைத்தோதகத்திபஞ்சமா
பாதகத்திற்சூரியனைப்பாம்பணையும்-போதிற் ௯௱௰௪

கடைசரக்குசேர்த்தமைகூறல்.

கருத்துவகையாய்த்தேடிக்கட்டிக்கடையில்
மருந்துவகைகஸ்தூரிமஞ்சள்-அரைத்தசித்ர ௯௱௰௫

மூலஞ்செவிட்டாதி மூளங்கடையினிற்றக்
கோலந்தாம்பூலங்குரோசாணி-ஏலம்வெலி ௯௱௰௬

காரஞ்சீனக்காரங்கர்ப்பூரசாரமரி
தாரநவசாரஞ்சவுக்காரம்-காரீயம் ௯௱௰௭

துத்தந்துரிசுதுருசாவசப்படுத்தும்
கொத்தமல்லிவாய்புளங்கங்குங்குமப்பூ-மூத்தக்கா ௮௱௰௮

செட்டுப்பணவிடையிந்துப்புவெடிபாணவுப்புக்
கட்டுப்புவீட்டிற்கறியுப்பு-மட்டிப்பால் ௯௱௰௯

இஞ்சிலவங்கமிதன்பத்திரிசிங்களத்தோர்
கஞ்சிபிலேபோகேசகச-மஞ்சள் ௯௱௨௰

அதிமதூரமாசையதிமதூரமாக்கும்
சதகுப்பிசாதிக்காய்சாபத்ரி-அதிவிடயம் ௯௨௧

மாக்குச்சிறுதேக்குப்பாஷாணம்வேப்பம்புண்
ணாக்குரிருவிஷமுள்ளவியம்புண்-ணாக்குமச்சை ௯௨௨

நாவிபபிணிமுதனுலுமுமநாலுமலைப்
பாவிசவதரித்துப்பாரிலுள்ள-சீவன் ௯௨௩

பிராணிகளினுறுப்புகள் சேர்த்தமைகூறல்.

மருந்துவகைசெவ்வரணைவாலாந்தைப்பிச்சு
மருந்துநகமுதலைப்பல்லு-குரங்கிந் ௯௨௪

திரியமாவட்டைசெவ்வட்டைபெட்டை
கரிமுதுகுத்தோலுடும்புநாக்கு-குருகு ௯௨௫

மூனைவாய்கருஞ்சேவன்முள்ளுவெள்ளைப்பல்லி
சிவனலியான்காடைச்சிறகு-பனையடியிற் ௯௨௬

குன்னுன்கண்வாகைமேற்கூசைகிழ்வாயலகு
செந்நாய்ப்பவனிவாய்தேவாங்கு-கன்னம் ௯௨௭

வலியான்கழுத்துமணிக்காடைமுட்டை
யெலிமூளையன்றியிநச்சி-புலிமீசை ௯௨௮

வல்லூற்றுவல்லெலும்புமாடப்புறவினெச்சம்
கல்லூரிக்கொப்புகவரியயிர்-நல்லமாம் ௬௨௯
பிரறலையிற்றெருமையிளங்கொடிசெம்
பூராமுயற்புழுக்கைபுற்றின்மேல்-தேரைக்கால் ௬௩௰
தூககணுன்குஞ்சுகுழல்வண்டுநண்டுகருங்
காக்கைபிணங்காராக்கருமுலைப்பால்-நாக்குப் ௬௩௧
புழுப்பூனைமீசம்மொலிப்புக்கடாவின்
கொழுப்புப்பெருச்சாளிகுட்டி-மழுக்கமா ௬௩௨
வவ்வாற்றலைகுதிரைவாயினுரைகரடிச்
சவ்வுகிழவானைமதஞ்சங்கிலூன்-நவ்விரத்தம் ௬௩௩
கன்னிகழியாதபிள்ளைகாதிற்சிறுகுறும்பி
தன்னையறியாள்தலையிற்பேன்-சின்னவட்டை ௬௩௪
வாற்குருவிச்சந்தெலும்புவானம்பாடிக்குடலூன்
ஞர்க்குருவிக்கொக்கைதன்னூநக்கு-மேற்குக் ௬௩௫
காட்டேரித்தொண்டைகாட்டேச்சிமண்டை
வாட்டேரிதேடிவகையாய்-நிறுத்து ௬௩௬

மருந்துகூட்டமைகூறல்.

வனமருந்தெல்லாம்தயிலம்வாங்கிக்கடையிற்
கனமருந்தெல்லாம்மெய்க்கரும்பு-தனில்வடித்த ௬௩௭
சாற்றிலரைத்துத்தசையூனைத்தாழியிலே
யூற்றியசாராயத்திலூறவைத்து-சோற்றடுப்பிற் ௬௩௮
செம்பிப்புதைத்துமறுதினங்களிலெல்லாமருந்தும்
அம்மியிலேயிட்டுமகளல்குலினீர்-செம்மைதரும் ௬௩௯
நாக்கிலழுக்குநகத்தழுக்குக்காலடிமண்
மூக்கில்வெயர்வும்விட்டுமூன்றுநாள்-தாய்க்கிழவி ௬௪௰

ஔஷதப்பிரயோகம் செய்தமைகூறல்.

மைப்போலரைத்துருட்டிமங்கைகல்லாயிந்தவுண்டை
தப்பாதெனக்கொடுத்தாள்சர்ப்பனையாள்-அப்பளத்தில் ௬௪௧

மதிமயக்கமிருந்தமைகூறல்.

இட்டாள்பழத்திலேஇட்டாள்சுண்ணம்பிலே
இட்டாள்மதிமயக்கமெய்தினேன்-விட்டிருக்கக் ௬௪௨
கூடாதுகண்ணுறக்கங்கொள்ளாதுசாப்பாட்டைத்
தேடாதுவேறுமனஞ்செல்லாது-பேடணையாள் ௬௪௩
மோகசமுத்திரத்தில்மூழ்குவதல்லாதுபிர
வாகநதியையுமறந்துவிட்டேன்-மோகனஞ்செய் ௬௪௪
சித்தசன்மந்த்ரகலைதேர்ந்தறிவதல்லாது
நித்யசெபமந்திரத்தைநீக்கினேன்-தத்துவரிக் ௬௪௫
கண்ணிசெயுமோடிக்குக்கால்பிடிப்பதல்லாது
புண்ணியநமஸ்காரங்கள்போட்டுவிட்டேன்-பெண்ணணங்கின் ()

செங்களபக்கொங்கைதெரிசனமல்லாதுசிவ
லிங்கதெரிசனத்தைநீக்கினேன்-அங்கசவேள் ௩௪௭
மாபூசைவேளையவள்வாயமிர்தமுண்டதல்லால்
தேபூசைமேற்கவலைதீர்த்துவிட்டேன்-சோமமுற்ற ௩௪௮

வஞ்சிக்கஉபாயம் செய்தமைகூறல்.

நாட்டமறிந்தென்னைநாக்கிழவிமெல்லவொரு
பூட்டகந்தான்பேசினாள்பொனமழிக்கத்-தாஷ்டிகரோ ௩௪௯
ஆடித்திருநாளழகருக்கின்றுகுதந்த
வேடிக்கையார்க்கவெகுசனங்கள்-கூடியே ௩௫௰
செல்லுகிறார்நீங்களும்போய்தீர்த்தத்திலாடிவந்தால்
நல்லபலனெங்களுக்குநன்றாதோ-கல்வியீர் ௩௫௧
என்றாளவ்வார்த்தைகதிருந்தாலறிவிலியாம்
சென்றாலுமங்கைமேற்றேட்டாமல்-என்றுசெழுந் ௩௫௨
தேனேமதனாபிஷேகமேநீவருவை
யானாற்றிருநாட்டமுகென்றேன்-நானுமுமைக் ௩௫௩

திருவிழாவுக்குச்சென்றமைகூறல்.

காணாதிருந்தாலென் கண்ணுறங்குமோவென்று
பூணார்முலையாள்புறப்பட்டாள்-மாணிப்பாய் ௩௫௪
பித்தளையினாலுடமை பெண்ணுக்குப்பூட்டிவாட்
டத்தைதொடர்ந்தாளடிப்பிறகே-மத்துப்போர் ௩௫௫
யாங்கியருமின்றிவரும்பாவையுடன்சென்றழகர்
ஓங்குமலைத்தீர்த்தமுவந்தாடிப்-பூங்குழலாய ௩௫௬
மானுங்கலைபுனைமந்தியும்போலேயிறங்கித்
தேனுந்துபூந்துளபச்செங்கண்மால்-தானேறும் ௩௫௭
தேருக்குப்பின்னாச்சென்றேமோர்பாணவிசைத்
தூரத்தேஞானியையன்தோன்றினான்-தேருக்குப் ௩௫௮
பக்கத்திலேயொதுங்கிப்பாய்ந்தேனைப்புறத்தோர்
தக்கமறையோன்மனையிற்றங்கினேன்-கக்கத்தில் ௩௫௯
தூக்கிட்டதோகைச் சுமையுமடிதனிலே
பாக்கிட்டகைவாளப்பையுமாய்-தாய்க்கிழவி ௩௬௰
மாதைத்தொடர்ந்துவர மங்கையளைப்பின்றொடராப்
பாதைவழிகொண்டேன்பரிசுடனே-மாதை ௩௬௧

திரும்பிவருகையில்மோசஞ்செய்தமைகூறல்.

அரைநாழிக்கப்பாலத்தைக்குறுகி
வரைமாலைமுலையாய்மறந்தேன்-சரிகையிட்ட ௩௬௨
சேலையென்றாளோடித்திரும்புகிறேனில்லுமென்று
வாலியப்பெண்மேலென்மனங்கிடக்கக்-காலிற் ௩௬௩
கடுமையுளவோட்டமெல்லாங்காட்டினேனென்பின்
குடுமியிலேதட்டக்குதிக்கால்-விடுதியிற்போய் ௩௬௪

மீளுமுன்னமங்கையிட்டவேற்றுடைமையைக்கழட்டிப்
பிளாதன்றுந்தஞ்சணிபிழைதேடி-ஆளுடனே ௩௬௫
போனாள்மதுரைக்குப்போய்த்துகிலைதானெடுத்து
மானாளைத்தேடிவரும்வேளை-தேனனையாள் ௩௬௬
ஊரின்முருங்கையுருவியகோல்போலனின்றாள்
மாரியெனக்கண்ணீர்வழிந்தோடக்-காரிகையே ௩௬௭
என்னென்றேன்விம்மியேக்கம்போனக்குளறி
முன்னின்றுமெள்ளமொழிமலுற்றாள்-அன்னை ௩௬௮
வருவார்நம்மையர்வழியிற்சுழியார்
இருகோட்சனத்துடனேசெல்வோம்-அபிலவயே ௩௬௯
வாவென்றாள்விட்டுவரமாட்டேனனியமந்தாற்
போவென்றேன்கோபமாய்போயினாள்-கூவென்றாற் ௩௭௦
கேள்வியுண்டோவந்தான்கிழவனொருவனையா
போழ்வாய்நரைத்தலையன்பூண்கட்டு-நீளத் ௩௭௧
தடிக்கொம்புகாரன்றனிவழியிலென்னை
அடித்துப்பறித்தானகன்றான்-திடுக்கிட்டேன் ௩௭௨
என்றனைதேற்றியதற் கெண்ணமேனுன்னதிஷ்டம்
ஒன்றுமேலகூழமுடையாம்-நின்று ௩௭௩
வருந்தாதேயென்றுமதுரைக்குவந்து
இருந்திழையாள்விட்டிலேசென்றேன்-மருந்துருட்டி ௩௭௪
அங்கேவந்தாள்மகளையாவலாய்ப்பார்த்துடைமை
எங்கேயென்றாள்பரிபோச்சென்றுரைத்தாள்-செங்கை ௩௭௫

தாய்க்கிழவிபொய்ப்புலம்பல்கூறல்;

நெரித்தாள்பதறிநெறித்தகையைவிட்டுப்
பிரித்தாள்வயிற்றைப்பிசைந்தாள்-ஒருத்தருமில் ௩௭௬
லாதவிட்டுடைமைக்காசையாயுன்னுயிரைச்
சேதப்படுத்திலென்னசெய்வேனுன்-யேதை ௩௭௭
மகளேயெனக்கதறிவாய்விட்டழுது
வெகுவாய்ப்பரதவித்துவிம்மி-நகைகளெல்லாம் ௩௭௮
போச்சுதேகோவிலுக்கும்போயிவரத்தடையொன்
றாச்சுதேயூருமறிந்ததே-ஏச்சொன்று ௩௭௯
வந்ததேயண்ணிமறித்துமிடக்காசுபணம்
சிந்துதேகண்டேனுன்றேட்டைநான்-வந்தடித்துக் ௩௮௦
கள்ளர்பறித்தநகைக்குவருமோவுட்மை
உள்ளதெல்லாம்ரத்வுடைமையே-அள்ளியள்ளி ௩௮௧
எண்ணியிட்டசெம்பொ னிருநூறுநான்கொடுத்துப்
பண்ணியிட்டகொப்பும்பரிபோச்சே-புண்ணியவான் ௩௮௨
திக்கடையவெற்றிகொண்டசிங்கமகளேந்திரனிட்ட
சைக்கடகம்போலுமினிக்காண்பேனோ ௩௮௩

தண்டசாப்பாளிதுளசாமராயன்கொடுத்த
கண்டசரமேனிவட்குக்காட்டினேன்-அண்டலரை ௬௮௪

வெட்டிவாள்வீரன் விருபாக்ஷியன்கொடுத்த
ஒட்டியாணம்போலவுண்டாமோ-சிட்டர்புகழ் ௬௮௫

ஆணிக்கனகிரியப்பராயன்கொடுத்த
மாணிக்கமாலையைப்போல்வாய்க்குமோ-வாணர்புகழ் ௬௮௬

அம்மைராயன்கொடுத்தவாணிமுத்துத்தாழ்வடத்தைக்
கொம்மைமுலையாட்கேன்கொடுத்தேனோ-நம்முடைய ௬௮௭

வல்லக்கொண்டையனருள்வச்சிரக்கணையாழிக்
கல்லுக்கொருவர்விலைகாண்பாரோ-வலவிசெய்த ௬௮௮

இன்னரிப்பாட்டுக்குக்கெடிக்காமையன்கொடுத்த
பொன்னரைஞாண்போற்கிடைக்கப்போகுதோ-மன்னர்புகழ் ௬௮௯

கச்சுமுலையாளுக்குக்காளிங்கன்முன்கொடுத்த
பொற்சிமிக்கைபோற்கிடைக்கப்போகுதோ-நச்சிவியர் ௬௯௰

கெங்காசிராவளித்தகெம்பிழைத்தமோதிரம்போல்
இங்கார்கொடுப்பார்சொலலேந்திழையே-மங்கைபுரி ௬௯௧

நாட்டியத்தைக்கண்டுமெச்சிநத்தத்துலிங்கேந்த்ரன்
போட்டகொலுசெண்ணூறுமென்பெறுமே-வாட்டமில்லா ௬௯௨

கோகனகவதனன்கோபாலராயனருள்
மோகனப்பொன்மாலைமுற்றுமே-யோகத் ௬௯௩

திருமலைக்கண்டமன்னன்றந்தருள்சிந்தாக்கை
இருமுலையாட்கேன்கழுத்திலிட்டேன்-கருணைநிதி ௬௯௪

பூசாரிராயனிட்டபொற்சவளிபோலவமோர்
ஆசாரிபண்ணவறிவானோ-தேசமெச்சும் ௬௯௫

மோடிமகிபன்கொடுத்தபொற்சுட்டிகட்டிவிட்டுப்
போடியென்றேனென்னமதிபோனேன்யான்-தாடலைகளைய ௬௯௬

அம்பிற்பொருராமபத்ரதுரையன்றுதந்த
தும்பிப்பதக்கவிலைசொற்படுமோ-சொம்புபெறும் ௬௯௭

நாடகத்தைக்கண்டுமெச்சுசம்முத்தையன்கொடுத்த
பாடகத்தைக்கண்டாற்பசிபோமே-நாடுபுகழ் ௬௯௮

தொட்டராயன்கொடுத்தகோடுவச்சிரவேலையும்பொற்
பட்டயரைஞாணும்விலைபண்ணுவதோ-வெட்டுகின்ற ௬௯௯

வாளுலவுஞ்செங்கண்மடந்தைபெட்டிக்காறையந்த
ஈளுவன்வீட்டிலிருக்குதோ-தாளவட்டப் ௭௱

பூணார்முலையாட்குப்போட்டவெள்ளித்தண்டையெந்தச்
சாணுன்வளவிற்போய்ச்சார்ந்ததோ-வீணையென் ௭௱௧

மாணுரைக்கொள்ளைகொண்டோன்வச்சிரமுருகையெந்தக்
கோனன்றன்கையிற்கொடுத்தானோ-ஆனலும் ௭௱௨

மூலைக்காம்பாட்டிகண்ட மூக்குத்தனுக்கையென்ன
பூவென்றெங்கேயெறிந்துபோட்டானோ-பாவைநல்லாய் ௭௱௩
என்னமோநசனினிமேலென்றாள்கிழவியையும்
கன்னியையுந்தேற்றிக்கணக்கேற்றி-அந்நேரம் ௭௱௪

அணிசெய்திட்டமைகூறல்.

ஐயாயிரம்பொன்னவலபோலப்பார்வையிட்டு
கையாரத்தட்டான்கையிலிட்டுச்-செய்த ௭௱௫
உடைமையெல்லாமந்தவுருப்படியேவிட்டு
வடிவையெல்லாம்பார்த்துமகிழ்ந்தேன்-கொடியிடையை ௭௱௬
மஞ்சத்திற்கூடிமகிழ்ந்திருக்கும்போதொருநாள்
பஞ்சொத்தகூந்தலாள்பையவந்து-வஞ்சியே ௭௱௭
கோயிலுக்குப்போவென்றாள்கோடியில்லைசேலையெல்லாம்
சாயமில்லையென்றுசலிப்பானாள்-நேயே ௭௱௮
பிறந்தவூருக்குப்புடைவையேனம்மை
அறிந்தவரோயல்லான்மற்றூர்காண்-நறுங்குழலாய் ௭௱௯
பொன்னின்குடத்துக்குப்பொட்டிடவேண்டுமோவென்றாள்
அந்நேரமதையழைத்துப்போய்நன்னிசெட்டி ௭௱௰

ஆடைவாங்கிக்கொடுத்தமைகூறல்.

கட்டுவர்க்கச்சேலைக்கடையிலிடைக்கிசைந்த
பட்டுவர்க்கம்பார்த்துபளபளப்பாம்-மட்டுவர்க்கப் ௭௱௰௧
பாவாடையிட்டமொழிப்பாவைக்குப்பொன்ராவிக்கை
பாவாடைவர்க்கம்பதினாறு-மேவியிரு ௭௱௰௨
செப்புவானபூமுலைக்குச்செம்பருத்திப்பூநிறத்துக்
கொப்புவர்ணமாய்த்தீர்ந்தகோப்புவர்ணம்-இப்புவியில் ௭௱௰௩
ஆகிவர்ணம்போலுமழகுடையாளுக்கிசைந்த
வீதிவர்ணச்சேலையொன்றுவிந்தையாம்-வாதுமத ௭௱௰௪
பாணத்தாற்கூந்தற்பவளவாய்ப்பைந்தொடிக்கு
வாணத்தாற்சேலைவகைமூன்று-வேணுமணி ௭௱௰௫
முத்துவர்ணமூரணல்லாள்மூலைக்குள்வைத்துடுக்க
முத்துவர்ணச்சேலையிலேமூன்றுவகை-வைத்திருக் ௭௱௰௬
குரணவர்ணத்திலகுசுட்டிநுதலாட்கிசைந்த
நாரணவர்ணச்சேலைநாலைந்து-வேரிற் ௭௱௰௭
படைமுறிச்சுக்குத்தியகப்பாவையாள்கட்ட
உடைமுறிச்சுக்குத்தியிலேயொன்று-தொடையல் ௭௱௰௮
சொருகுமணிக்குழலாள்சோடிணையாக்கட்ட
அருகுமணிச்சேலையிலேயஞ்சு-பிரிவுகொண்டு ௭௱௰௯
செல்லாச்சேலைப்பெருங்கட்சேயிழையாள்கட்டநல்
சல்லாச்சேலைத்தரமாய்த்தானிரண்டு-மெல்ல ௭௱௨௰

வாளெழுத்தோளடவளைமாலழுத்துவாளுடுக்க
ஆளெழுத்துச்சேலையிலேயாறேழு-நீளெழிற்சேர் எஉக
சுந்தரத்தோண்மங்கைக்குத்தொட்டிழுத்துக்கட்டநல்ல
சந்திரகாந்தக்கச்சுதானைந்து-அந்தரத்தில எஉஉ
இந்திரவிற்குலவுரம்பையனையாட்கிசையச்
சந்திராவிச்சேலைதானிரண்டு-சிந்துமழை எஉங
மாரிக்கொடிமின்மருங்கிற்கிணங்கியகஸ்
தூரிகொடிச்சேலைசோடிரண்டு-காரிகைக்கு எஉச
காங்குசரிகைச்சேலைகம்பாவரித்துகில்வட்
டாங்குகம்பிச்சேலையணைவர்ணம்-தாங்குசிலம் எஉரு
பெச்சரிகையென்மிடைக்குச்சரியிதென்றற்
குச்சரிகைவர்க்கமெல்லாங்கொண்டுந்தேன்-உச்சிதமாய்த் எஉசூ
தாய்க்கிழவிகேட்டாள்தனக்கிரண்டுசேலையந்தப்
பேய்க்குதவாவிட்டாற்பிழைப்பேது-வாக்களந்த எஉஎ

பலவகைக்கடன்றீர்த்தமைகூறல்.

ஊன்னியென்றும்பாளைத்தமாரியென்றுநெய்யளந்த
சின்னியென்றுநெல்லளந்தசெல்லியென்றும்-என்றோம் எஉஅ
வைவதுவும்போவதுவும்வாசலிலேநின்றலம்பல
செய்வதுவும்போலிட்டாள்இத்திரிப்புக்-கைமேலா எஉகூ
அந்தக்கடன்காரர்க்கன்றேநானைம்பதுபொன்
இந்தக்கடன்காரிக்கீந்துவிட்டேன்-அந்திசந்தி எஙய
தாய்குடிக்கப்பெண்குடிக்கச்சாராயமூற்றிவெறிப்
பேய்பிடிக்கவிட்டவெட்டிப்பிச்சியர்த்து-வியாயமோ எஙக
தப்பறைக்காரியென்றுசண்டைக்குவாய்திறந்தாள்
முப்பதுபொன்போட்டுவாய்மூடிவிட்டேன்-செப்புமுலை எஙஉ

தெய்வபூசைக்குகொடுத்தமைகூறல்,

மங்கைவயிற்றைவலிக்குதென்றுமார்க்கமிட்டாள்
அங்கைதொட்டக்காலதிகமாகுதென்றாள்-எங்கள் எஙங
குலதெய்வம்பண்ணுதித்தக்கோட்டாலையென்றாள்
கலைகுலைந்துசோர்வதையுங்காணாள்-சிலைநுதலாய் எஙச
தெய்வக்குறைக்கென்னசெய்வேணுஞ்சொல்லென்றேன்
கையிலறிவாளுங்கட்டளையாச்-செய்த எஙரு
உருவேணும்பொற்குச்சுருமாலைவேணும்
இருகாலுககுச்சிலம்புமீணுப்-பரவைகளும் எஙசூ
செஞ்சேவலும்வேணுஞ்சேவிக்கும்-பம்பைக்கோர்
அஞ்சாறுபொன்வேணுமாடிவரக்-குஞ்சமிட்டுப் எஙஎ
பூங்கப்பறையெடுத்துப்பூசையிடவேணுமென்றாள்
ஆங்கப்படிக்கீந்தேனைம்பதுபொன்-தாங்கருங்கண் எஙஅ

### தன்கையிருப்பனைவைத்திருக்கக்கொடுத்தமைகூறல்.

வாளாதானுங்காதுமாதுநல்லாய்நான்கேட்ட
வேளைதாவென்றவனைவிட்டிலே-ஆழாக்கு ௭௩௯
முத்துவைத்துவைத்தேன்முடிப்பாவோராயிரம்பொன்
வைத்துவைத்தேன்பின்னுமொருமாணிக்கம்-சித்திரக்காற் ௭௪௰

### பின்னும் பலவிதத்தால் வஞ்சித்துப் பொருள் கவர்ந்தமைகூறல்.

கட்டிலென்றுங்கட்டிலின்மேற்கட்டிசகலாத்தென்றும்
வட்டிலென்றுஞ்சிப்புவகையென்றும்-கட்டுமட்டாம் ௭௪௧
குத்துவிளக்கென்றுங்குடம்பாலெருமையென்றும்
பத்துமயேசொன்றும்பசுக்களென்றும்-மெத்தையென்றும் ௭௪௨
மச்சுவீடென்றுமனைக்குதிர்களென்றுமங்கை
மெச்சுவிளையாடிடற்கமேடையென்றும்-கச்சிறுக்கும் ௭௪௩
கொங்கைச்சிமிழ்மாதுகூடப்பிறந்தசின்ன
தங்கச்சிகால்களுக்குத்தண்டையென்றும்-இங்கிதமாய் ௭௪௪
ஆட்விட்டநட்டுவனார்க்கங்கியென்றுஞ்சங்கீதம்
பாடவிட்டப்பாடகர்க்குப்பாகையென்றும்-சேடியர்க்குக் ௭௪௫
கம்பிகுழிச்சேலையென்றுங்காதோலையென்றுவெள்ளித்
தம்பிக்கையென்றுந்தலையென்றும்-செம்பொன்றும் ௭௪௬
தந்தசிமிழிற்சவாதென்றுமாண்டியப்பன்
கந்தபொடியென்றுங்கதம்பமென்றும்-சந்தனங்கள் ௭௪௭
என்றுமடிக்கழுவிற்கேற்றதென்றுந்தைப்பொங்கற்
கென்றுஞ்சிவராத்திரிக்கென்றும்-நின்று ௭௪௮
தலைதடவிமூளைதனையுறிஞ்சுவார்போற்
பலவிதமாயேச்சிப்பசப்பிக்-கலவையணிந் ௭௪௯
தோங்குமிளமுலையாளுனிருக்கவேயுபிகா
வாங்குவதுவோர்பொருளைவாங்கிவிட்டாள்-சோங்கிவிட்டுக் ௭௫௰
கட்டியசெம்பொன்னைக்கடலிற்கவிழ்த்ததுபோல்
ஒட்டொழியத்தோற்றுவிட்டேனுள்ளதெல்லாம்-இட்ட ௭௫௧
மருந்தாவிருளுமருளும் கொண்டாற்போல்
இருந்தேன்கொடுக்கவகையின்று-உரிந்து ௭௫௨

### விற்றுவெறுங்கையனானமைகூறல்.

கலைவிற்றேன்காதிற்கடுக்கனையும்விற்றேன்
மெலிவுற்றேன்தாய்கிழவிவிட்டுச்-செலவுக்குத் ௭௫௩
தந்தரமாய்க்கேட்டாள்தலைகவிழ்ந்தான்திரும்பி
குந்துவதைக்கண்டாள்குறிப்பறிந்தாள்-எத்தியென்னைத் ௭௫௪
தாளாவிட்டவேல்விழியாள்தாய்கிழவிவார்த்தையைக்கேட்
டோவிட்டுப்போசவுட்டாயமிட்டாள்-சோவென்றும் ௭௫௫

### தூத்தவகை தேடினமைகூறல்.

மின்புறங்காட்டிச்சயனமேற்கடுத்தாலென்புறத்தில்
பின்புறங்காட்டிப்படுப்பாள்பேசாமல்-அன்புடனுன் ௭௫௬
செய்யாவுபசாரஞ்செய்யப்போனாலுமுழங்
கையாலிடிப்பாள்கடுகடுப்பாய்-மையலே ௭௫௭
அன்னைவந்துதன்னையழைக்கச்சென்றுமைந்த
சன்னையறிந்தென்னைவிட்டுத்தானேகிப்-பொன்முடிப்பு ௭௫௮
வாங்குவதுங்கூடுவதும்வக்கெனருகிற்படுத்துத்
தூங்குவதுமாகத்தொழிலெடுத்தாள்-பாங்கியரிற் ௭௫௯

### மதனாபிஷேகம்தன்னையேசினமைகூறல்.

கோப்புடையமாயக்குருவிடைவிட்டப்பழைய
மாப்பிளைமார்க்கிமைவரச்செல்லிப்-பேய்ப்படுவாய் ௭௬௰
அன்னியராய்வந்தாலருகிற்போய்நானிருந்தாற்
சன்னைதெரியாதேசவுங்கலே-என்னடா ௭௬௧
ஜோடாவெளியிற்புதுமண்டபத்திருந்து
வாடாவெனச்சொலுவாள்மட்டுமிஞ்சி-ஒடியங்கள் ௭௬௨
சொல்லத்தொடுத்தாள்துரத்திடினும்பூட்டியசெக்
கெல்லைவிட்டுப்போகாவெருதானேன்-மெல்ல ௭௬௩

### தாய்மகளைஏசினமைகூறல்,

மகளையழைத்துமருத்துருட்டிசொல்வாள்
தகல்பாசியைப்பான்சதமோ-மூகமாயம் ௭௬௪
என்னசெய்தானியவனுக்கேற்றவுடம்படிக்கை
என்னசொன்னாய்பார்த்தவருக்கேற்குமோ-மின்னே ௭௬௫
கொடுக்கமட்டும்வாங்கிக்கொடாதிருந்தால்விட்டு
மூடுக்கவல்லீலாவேசிமுறைமை-எடுப்பார்கைப் ௭௬௬
பிள்ளையோநீயுமென்னபேய்ப்பிள்ளாய்மாப்பிளைமார்
கள்ளனைப்போலேதிரியக்காரணமேன்-மெள்ளமெள்ள ௭௬௭
ஓடங்கட்டக்கவிட்டாலோடக்காரன்றலையிற்
போடுவதுசொட்டென்பார்பூதலத்தோர்-வாடி ௭௬௮
சிலைநுதலாய்நானுனக்குச்சேர்த்தமருந்துக்கு
மலையுகோர்ந்துவருமே-முலைவயிற்றைத் ௭௬௯
தொட்டதோகன்னஞ்சுரித்ததோபூந்தனை
யிட்டதோமேனியிளைத்ததோ-தொட்டவனை ௭௭௰
விட்டுப்பிரிந்தாக்கால்வேவேறுபிழைப்பில்லையோ
முஷ்டிவாங்கிப்பயலேமோப்பாச்சு-கெட்டிகெட்டி ௭௭௧
ஊரைவிட்டப்பற்றென்றுனேர்தாரிவீட்டிறப்புக்
கூரையிலொண்டிக்கேட்டுக்கொண்டேனன்-மேரைதப்பி ௭௭௨

## சண்டையிட்டமைகூறல்.

நன்றிமறந்தாரைநடுகேட்குமோதெய்வம்
என்றுசொல்லிவந்தேனெதிரேநான்-என்றவுடன் ௭௭௩
ஆங்காரமிட்டாளென்னாஸ்தியெல்லாந்தன்கையால்
வாங்காமல்வாங்கிவிட்டமாமியார்-ஆங்குவரும் ௭௭௪
பேய்மடவார்பெண்ணும்பெருங்குளத்துநீரைத்தன்
வாய்மடையாலேயுறஞ்சுமாமியார்-ஈயரைப் ௭௭௫
புல்வரைக்கண்டபுலிபோலப்போய்ப்பிடிக்கும்
வல்வாய்க்கிழநெட்டைமாமியார்-பல்லுவிழுந்த ௭௭௬
கோப்புளதன்மூப்பைக்கொடுத்திளமைவாங்கமொட்டை
மாப்பிள்ளையாரைத்தேடுமாமியார்-சேப்பைக்கும் ௭௭௭
பிஞ்சுமாங்காய்க்கும்பிளவுக்கும்வெற்றிலைக்கும்
மஞ்சளுக்குஞ்சஞ்சரிக்குமாமியார்-மஞ்சதமே ௭௭௮
தெற்றிதனைமுன்புசேர்ந்தபணக்காரமுறை
மாற்றிமகளுக்கிணங்குமாமியார்-போற்றிவைத்த ௭௭௯
காசழியாமற்றிரியுங் காவிப்பாற்காரனைத்தான்
வாசல்மிதிக்கவொட்டாமாமியார்-ஆசைகொண்டு ௭௮௦
சேயிழையைச்சேர்ந்தவரைத்தேற்றிக்கழுத்தறுக்கும்
ஆயுதம்போலுங்கூருநாக்கத்தையார்-மேயவொரு ௭௮௧
செம்பிலேதண்ணீருஞ்சிலைப்பாயுங்கொடுபோய்
அம்பலத்திலேவைக்குமத்தையார்-வெம்புலிபோல் ௭௮௨
தாஷ்டிகரையும்பிடித்துத்தாலகத்திம்மாவென்
றுட்டிப்பணம்பறிக்குமத்தையார்-மோட்டுப் ௭௮௩
வொலிப்பாட்டைப்போலேபுறப்பட்டாளென்று
வொலிப்பாட்டுப்பாடப்புகுந்தாள்-வலுத்தவர்போல் ௭௮௪
என்னசொன்னாய்பார்ப்பாணியின்னமொருகாற்சொல்லு
கன்னத்திலேயறைவர்காணேனே-சின்னஞ் ௭௮௫
சிறுகக்கியுனகுருநன்றாய்ச்சிக்கினளோநான்
கிறுக்குப்பிடித்தகிழவி-உறுக்கி ௭௮௬
வசமாக்கவல்லோவகைசெய்தாய்வைப்பு
நிசமாச்சோகுல்லாவிநீயே-பசிவேளைக் ௭௮௭
கேதுகொடுத்தாய்நீயித்தனைகாலந்திரிந்தாய்
போதுமினிப்போவென்றுற்றோகாயோ-மாதனக்கு ௭௮௮
தாய்மாமன்பிள்ளையோதாலிகட்டித்தந்தேனோ
நீமாத்திரமாங்குநேசமோ-மாமிகிட்டத் ௭௮௯
தந்தபணசேதமுண்டோசாண்வயிற்றுப்பிச்சைக்கு
வந்தவனும்பெண்ணுக்குமாப்பிள்ளையோ-சொந்தமாக் ௭௯௦
கிட்டகிடக்கக்கிடைப்பாளோதேவடியாள்
இட்டொருவனைச்சேர்வதெத்தனைநாள்-குட்டிணியுன் ௭௯௧

வாணாளைவாங்கிடுவேன்வாயைமூடுன்வயிறு
சாணுருழமோசவுங்கலை-நாணமற்ற ௭௯௨
மூடாவிதேதுருபுழக்கம்வெளியிலே
வாடாவொருகாலமதிகேடா-னுடலாம் ௭௯௩
என்றுவுடைமையிருக்கிறாள்நாணவளைத்
தின்றுவிடத்தக்கசினமானேன்-நன்றியற்ற ௭௯௪
பாவிநீசேளாய்மழுங்கதைசெந்தீயிடைப்பட்
டாவிவிடும்பாம்பையெடுத்தாதரிக்கத்-தாவி ௭௯௫
நளன்கரத்திற்றீண்டியதுநன்மைசெய்யக்கர்மம்
விளைந்தகதையென்னளவுமெய்யே-உளம்பதறிப் ௭௯௬
பேசலாமோநீபுறம்விடலாமோதுடுக்காய்
ஏசலாமோகொடுத்ததில்லையோ-ராசியமேன் ௭௯௭
செட்டிகளுக்கெல்லாந்தெரியாதோநான்கொடுத்த
கட்டிவராகன்கணக்குண்டோ-தட்டார் ௭௯௮
அறியாரோவூராரறியாரோவுன்னெஞ்
சறியாதோதோஷமல்லவோ-மறுமடியுன் ௭௯௯
கிட்டவைத்தவென்முடிப்போசேனாய்கிழப்பிணமே
எட்டுதலைமுறைமட்டிங்குண்டே-கெட்டபுத்திக் ௮௱
கந்தலேயென்றேன்கவட்டினுழையடா
சந்தையின்மானங்கெட்டாய்சரசமபோல்-முந்தன் ௮௱௧
வளவிற்சிலவுடைமைவைத்துவைத்தேனென்றாய்
களவாணியப்பயலேகண்ணை-கிளாட்டோ ௮௱௨
பின்னுசைவேண்டாம்புறப்பட்டுப்போவென்றாள்
அன்னேரமோர்வடுகனுயுதரும்-கன்னப் ௮௱௩
பரிசையுந்தன்காலிலேபாப்பாசும்போட்டுப்
பெரியமட்டைநாமமுந்தனபின்னே-ஒருவனுமாய்க் ௮௱௪
கக்கத்தில்வாளிடுக்கிக்காச்சுமூச்சென்றுவந்தான்
மக்கத்திலேசவிகைகாட்டி-வெட்கமறந ௮௱௫
தாடாதகூத்தெல்லாமாடியேயம்பலத்தில்
வாடாவென்றென்னைவாட்டுத்தோய்-பாடி ௮௱௬
மடியைப்பிடித்தாள்மயிரைப்பிடித்தேன்
தொடையிலடிப்பட்டதவள்தோற்றமை-மடிநழுவித் ௮௱௭
தொங்கியகைவாலமென்றுதூக்கிச்சுருட்டியெடுத்
தங்கையினுற்கக்கத்தடக்கினேன்-மங்கைதனைத் ௮௱௮
தள்ளினுளஞ்சாறுதாக்கினேன்-போக்கைவாய்க்
குள்ளிபிடித்தாள்குடுமியை-உள்ளோரார் ௮௱௯

சபையேறினமைகூறல்.

கூடிவிலக்கிவிட்டார்கூகூவெனறம்பலத்தில்
ஓடினாள்கானுமுடன்சென்றேனை-தாடகையோற் ௮௱௰

போயப்பொழுதேபுதுமண்டபத்திலந்தக்
கோயிற்றலத்தாரைக்கூட்டிவிட்டாள்-வாய்விட் அளயக
டழுதாள்மகளையருகேவிறுத்தித்
தொழுதாள்மடைமாறிச்சொல்லாள்-மழியஞ்சிப் அளயஉ

கிழவி அறிவிப்புக்கூறல.

பட்டரேதேவேந்த்ரப்பட்டரோமீனாட்சி
பட்டரோகாமாட்சிபட்டரோ-இஷ்டமா அளயங
இங்கையரோசரணையதீட்சிதரோசெவ்வந்தி
லிங்கரோவெங்கள்சொக்கலிங்கையரோ-சங்கரா அளயச
சாரியாரோவனந்தசாஸ்திரியாரோவைகவிஸ்
தாரியாரோகோழுஸ்தனிகரோ-ஊருக்குள் அளயரு
விமாயமிலையோமயிலையோபார்ப்பாரப்
பேய்பிடித்ததேயெனதுபெண்பிள்ளையைக்-கோயிலுக்குள் அளயசு
அஞ்சாறுமாதமாயாடிபாடித்திரியச்
சஞ்சாரங்கண்டுரோசர்ப்பனையாய்-பஞ்சமாம் அளயஎ
பாவியிந்தப்பார்ப்பானணையக்கொடுத்தொருநாள்
மேவியிருந்தான்விடிந்தவுடன்-போவானென் அளயஅ
றெண்ணினேனென்னமருந்திட்டானோவென்னவகை
பண்ணினானோமதநூல்பாடமோ-வெண்ணணங்கை அளயகூ
வைப்பென்றுமேரிட்டான்வட்டிலிற்கஞ்சிக்குமகள்
உப்பென்றுகேளாதுபாயமிட்டான்-கைப்பிடித்துக் அளஉய
கொண்டானைபோயிக்குடிலமிட்டான் ஆண்பூண்டு
கண்டாலும்பேசாமற்கட்டிட்டான்-ஒண்டொடிக்கு அஉக
வாடைப்பொடியிட்டான்வாய்ப்பூட்டெனக்குமிட்டான்
கோடைச்சுழித்துவைத்துக்கொள்ளையிட்டான்-மாடாயோர் அஉஉ
பட்டிவைக்கிறேன்பலதொம்மைக்கூட்டிற்சம்பாநெல்
கட்டிவைக்கிறேன்பொற்கடாரங்கள்-எட்டேழு அஉங
தூங்கவைக்கிறேனென்முன்சோத்துக்குத் தூங்கவைத்தான்
ஏங்கவைத்தானம்பலத்திலேற்றிவைத்தான்-விங்கலிவன் அஉச
இங்குவந்தநாண்முதலாயேதுகொடுத்தான்றனக்குக்
குங்குமச்சம்பாவரிசிகொள்ளவென்றும்-பொங்கலுக்குப் அஉரு
பாசிப்பயறொன்றும்பாலென்றுநெய்யென்றும்
தோசைக்குளுந்தென்றுஞ்சோமனென்றும்-பூசுவதுக் அஉசு
கானசவ்வாதென்றுமலகுபாக்கென்றும்ரச
மானவர்க்கமென்றும்பகலிரவா-ஏனே அஉஎ
படிக்கைக்குவாழைப்பழமென்றுங்கேட்பான்
கொடுக்குங்கடன்போற்கொடுத்தேன்-மட்கொடியாள் அஉஅ
பொட்டழியக்காதிற்பொகடியொருசோட்டழிய
ஒட்டழியத்தோற்றேமுடைமையெல்லாம்-பட்டிமகன் அஉகூ

மோகினிமந்திரமுழுதுமறிவான்மதன
னாகமங்களெல்லாமவதானம்-நாகரிகப் ௮௩௦

பொட்டறிவானுந்தண்டுப்பூச்சறிவானும்யோகக்
கட்டறிவானுமொருநாள்கைவாளத்-தட்டறையிற் ௮௩௧

சோதித்தேன்சின்னமயிர்த்தோலுரிக்கொம்புங்கி
பூதிக்கிழியும்பொடியுமதில்-ஏதுக் ௮௩௨

குருட்டுவைத்தானேசிலதுவுண்டையுரான்கண்டேன்
இருட்டுப்புரட்டனென்றுதேர்ந்தேன்-அரைக்காசுந் ௮௩௩

தொண்டனிவனம்பலத்திற்சோதிப்பானென்றிங்கே
கொண்டுவருவானேகொண்டுவரான்-வண்டனிவன் ௮௩௪

மானேர்விழியணக்குமாதவிடாயானுக்கால்
தானேவிடவருவான்தண்ணீரை-மானிடமோ ௮௩௫

அல்லும்பகலுமடைத்தகதவைத்திறவான்
மெல்லியரைச்சற்றும்வெளியில்விடான்-சொல்லுவதென் ௮௩௬

பத்துவிசையாம்பகலுக்கும்ராத்திரிக்கும்
பத்துவிசைக்குமென்றன்மாவைபோல்-உத்தரிக்க ௮௩௭

ஆர்க்குமுடியுமிவனுளுமுன்பிறப்பில்
ஊர்க்குருவியோவெண்ணுடம்பிலே-திர்க்கவொண்ணு ௮௩௮

நோவொதுங்கவிட்டானூறுவயதும்மயிர்க்குப்
பூவொதுங்கவிடான்மொழுமொழென்று-மாமிமகன் ௮௩௯

சொர்ணங்கொடுப்பனென்றுசொன்னதுவுண்டல்லாமல்
என்னகொடுத்தானிதுவரைக்கும்-என்மகட்கு ௮௪௦

மோகங்கொடுத்தான்மூளையறைபாய்புக்கொடுத்தான்
மேகங்கொத்தான்மெலியவிட்டான்-ஆகம் ௮௪௧

சிரங்கானுள்தம்பியிட்டதிமருந்தால்மாது
குரங்கானுள்குத்திருமல்கொண்டாள்-மருந்து ௮௪௨

கொடுப்பவரார்புண்ணுக்குக்கூசாமற்றிட்டப்
படுப்பவராரென்மகளைப்பாவி-கெடுத்தானே ௮௪௩

தேட்டுவந்துசேருஞ்சிறுவயதிற்போக்கருவான்
வீட்டிற்புகுந்தான்விடுதிபோல்-காட்டமாய்க் ௮௪௪

கூடவந்தங்கிருந்தக்குடிமித்தலைமைக்கண்
டாடவர்களெல்லாமகன்றுவிட்டார்-தேடாமன் ௮௪௫

நித்திரைக்குப்பொன்னூறுமித்தங்கொடுத்துவந்த
முத்திரைப்பண்டாரமோமோடிவைத்து-மெத்தக் ௮௪௬

கறுப்பானன்மாலைகட்டிக்கன்னியப்பன்மற்றும்
வெறுப்பானன்மெய்க்காவல்வேலன்-சிறிக்கிமேல் ௮௪௭

ஆசைவைத்தவாத்தியாரையாமுறைதப்பிதமாய்
பாசைவைத்துப்போனார்புகையானார்-காசுபணம் ௮௪௮

மாரியெனச்சொரிந்தமாரியப்பன்சண்டையிட்டு
வீரிவளவிற்போனானைமீள்வானோ-தேரோறப் ௮௪௯

பொன்னுடைமைபூட்டிவிட்டபொன்னப்பனங்கிசந்தி
சன்னையிட்டுப்பார்த்தான்சலித்துவிட்டான்-பின்னை ௮௫௰

வரத்துமில்லைத்தானும்வழங்கானோர்சேலை
தரச்சொன்னாலின்னறைக்குச்சண்டைக்கொருப்பட்டான் ௮௫௧

வைதானென்னையுமயிர்பிடித்தான்செய்யாதுஞ்
செய்தானமதலைச்செவியிலே-கையால் ௮௫௨

அடித்தான்விலக்குமவளைமுழங்கையால்
இடித்தான்கரத்தினாலென்னை-இப்பொடியப் ௮௫௩

போட்டானங்கேமூர்ச்சைபோனேனெழுந்திருந்தேன்
கேட்டாசிரிக்கவல்லவோகீர்த்திவைத்தான்-ருட்டிசெய்த ௮௫௪

தேதென்றுநீர்கேட்டாலென்னசொல்வான்தாய்கிழவி
சூதென்பான்வாரிச்சொரிந்தபொருட்-சேதம் ௮௫௫

கணக்குண்டோவென்பான்களிமெச்சவிந்தத்
துணிக்குண்ணியோகொடுப்பன்சொர்ணம்-வணக்கவளம் ௮௫௬

மாந்தரிட்டுக்கட்டிவளர்த்தகடாக்கையிலே
பாய்க்கதைமெய்யாம்பலித்ததே-ஈந்ததில்லை ௮௫௭

தாயுமகளுமொருதாமரையினீரானோம்
பேயுமிரங்குமேபெண்ணென்றால்-தூயவரே ௮௫௮

கண்டநகைப்பேசிக்கணக்குப்பார்த்துப்பொருளைத்
தெண்டித்துவாங்கியிந்தச்சேமனைநீர்-கண்டிப்பாய் ௮௫௯

மெட்டுக்கடக்கவெருட்டுமென்றாளென்ற
சட்டித்தலைப்பேயைத்தானமர்த்தி-பட்டன்மார் ௮௬௰

நில்லென்றாருன்வாழ்க்கைவிர்ப்பார்க்கியாநீயும்
சொல்லென்றார்சொல்லத்தொடங்கினேன்-கல்லும் ௮௬௧

### தன்னறிவிப்புக்கூறல்.

கரையுமேமாயமார்கள்ளிசொன்னவார்த்தைக்
குறையுமெதிர்வாக்குமுண்டோ-ஒருநாள் ௮௬௨

நடந்தகதைகேளீர்நடுக்காட்டுநீலி
தொடர்ந்தாளோர்செட்டிதனைச்சூதாய்-நடந்தவன்கைப் ௮௬௩

பத்திரத்தாற்றப்பிப்பழையனூரம்பலத்தில்
மொய்த்திருந்தவேளாளர்முன்சென்றாள்-சத்துருப்போல் ௮௬௪

ஆலங்காட்டுப்பேயதோவருகுதென்மனையாள்
கோலங்காட்டுப்பகட்டிக்கொண்டென்றாள்-நீலியென்னும் ௮௬௫

கள்ளிமுலைப்பாலுங்கண்ணீருங்கால்கழுகக்
கள்ளியொன்றைப்பிள்ளையாக்கையேந்தி-மெள்ளவந்த ௮௬௬

நாட்டிலேகண்டதுண்டோநல்லோரோவென்னைநடுக்
காட்டிலேவிட்டார்கணவனார்-மீட்டுமவர் ௮௬௭
இட்டிவந்தார்காண்பயந்துநெஞ்சிவந்தேன்வாளுருவி
வெட்டவந்தார்முனனாள்விதிப்படியோ-முட்டமுட்டப் ௮௬௮
பேயென்றுபொன்னையிந்தப்பிள்ளைகள்ளிக்கொம்பென்றார்
தாயென்றுவிலலைதமரில்லை-தூயவரே ௮௬௯
பிர்விட்டபான்முலைக்கீழ்ப்பிள்ளையைவிட்டாலதுதான்
ஆர்கிட்டப்போமென்றறியலாம்-பாருமென ௮௭௰
விட்டாள்சபையிலதுமெள்ளத்தவிழ்ந்துமடி
தொட்டேறச்செட்டிதனுக்கென்றான்-ஒட்டாரம் ௮௭௧
பண்ணுகிறான்செட்டியென்றார்யார்த்தவொல்லாமவளென்
கண்ணுனைநீவியென்றான்காணடுங்கிப்-பெண்ணலது ௮௭௨
சத்துருப்பேயாகிச்சதிசெய்தால்நாங்களுனக்
கித்தனைப்பெரும்பழிகாணென்றுரைத்துப்-பத்திரத்தை ௮௭௩
வாங்கிவணிகனையுமார்க்கமிட்டநீலியையும்
யாங்கியொருவீட்டிற்படுக்கவைத்துத்-தூங்குமெனப் ௮௭௪
பூட்டிக்கதவடைத்துப்போயினார்மெய்மதியோர்
வாட்டமுற்றநீலியழிவாச்சுதென்றே-ஊட்டி ௮௭௫
கடித்தாள்வணிகன்பிடரிதனைக்கையால்
பிடித்தாளிடித்தாளுதிரங்குடித்தாள்பின் ௮௭௬
நீண்டாள்பிளந்தெரிந்தாள்நெஞ்சிற்குடர்மாலை
பூண்டாளெழுந்தாள்பொருள்வணிகன்-மாண்டதற்பின் ௮௭௭
கண்டார்வழங்கலையெந்தக்கற்பனையாற்சற்பனைகள்
விண்டாலுமவெண்வார்த்தைமெய்யாங்காண்-அண்டினர்க்கு ௮௭௮
ருகினடிக்காட்டிலடித்தும்மறித்தாரிற்
கூக்குரலுமிட்டாற்பின்கூறுவதென்-வாய்க்கலினம் ௮௭௯
பூண்டயரியெடுத்துப்போட்டதுமல்லாதுகுழி
தோண்டுதென்றுனினிமேற்சொல்வானேன்-ஆண்டவரே ௮௮௰
அந்தணரேநானிவண்மேலாசைகொண்டேன்மோசமதாய்
இந்தவிதிவருமென்றெண்ணுமல்-முந்தமுந்தக் ௮௮௧
கூனிமருங்கையிட்டுக் கூறுகொண்டாளன்றுமுதல்
மேனியொடுங்கினேனமெய்ம்மறந்தேனே-நானிவட்கு ௮௮௨
றூன்றுட்கட்டைமுதலிடுவார்போற்கொடுத்த
பொன்னேபொற்பூந்துகிலோபூஷணமோ-சொன்னசொல் ௮௮௩
லத்தனைகரும்வீணேயழித்ததெல்லாம்யான்கணக்கிட்
டெத்தனையென்றுங்கட்டியம்புவேன்-சித்தசித்தம் ௮௮௪
வல்லார்தனத்திசொர்ந்தவைப்பென்றுபேரொனையும்
அல்லாமற்போக்குவரத்தாயிரம்பேர்-நல்லவள்போல் ௮௮௫

உள்ளதெல்லாமெள்ளவுபாயமாவாங்கியெனைத்
தள்ளிவிடக்கள்ளிதளமெடுத்தாள்-உள்ளுடையப் ௮௮௬
பேசினாள்சும்மாபுறம்பட்டுப்போடாவென்
றேசினாள்நீகொடுத்ததென்னென்றாள்-கூசாமல் ௮௮௭
முக்கிமடிபிடித்தாள்முந்தானையைக்கிழித்தாள்
சந்தியிலேபூணூல்தனையறுத்தாள்-இந்தகளைத் ௮௮௮
தட்டானைவந்தென்தலையிலொருகுட்டு
போட்டாளென்குட்டெல்லாம்போச்சையா-மோட்டு ௮௮௯
வடுகனையென்மேல்விடுத்தாள்மற்றொருவனால்
விடுவானோவுண்ணியவான்விட்டான்-இடுதூறாய் ௮௯௰
அந்தக்கிழவியலக்கழிக்கப்பார்த்திருந்த
இந்தக்குமரியேயென்றாளோ-சந்த்ர ௮௯௧
கலைவாணுநலணங்கேகாதலென்மேலுண்டோ
இலையோவுனக்கென்றேனெட்டித்-தலைமேற் ௮௯௨
சளக்கென்றடித்தாள்சதிகாரிவிட்டு
விளக்கிலடித்தாள்பின்வெள்ளி-மூளைக்குமுன்னே ௮௯௩
முந்திப்போட்டென்மேலேமுக்காலுமாசையென்று
சந்திவீரய்யன்முன்னேதாண்டினாள்-வந்தொருவன் ௮௯௪
முத்தங்கொள்வாய்க்குமுன்னொருவன்றான்கொடுத்த
அத்தம்பலங்கொடுப்பார்க்காணையுண்டோ-வித்தகரே ௮௯௫
மேனியிட்டுநல்லமெழுகுபிள்ளையார்போலே
யாணிருத்ததிர்க்கமறியீரோ-கூனியெனக் ௮௯௬
கிட்டமருந்தாலுமிவள்கொடுத்தபுண்ணாலும்
ஒட்டியுலர்ந்தவுடலானேன்-மட்டைக் ௮௯௭
கிறுத்ததெல்லாம்போகட்டுமென்பொருளீதென்று
மறித்துமொருபொன்முடிப்புவைத்தேன்-நிறத்தமுழு ௮௯௮
மாணிக்கமொன்றுமணிமுத்தொருசிறங்கை
பேணிவைக்கச்சொல்லிவைத்தேபெண்ணிடத்தில்-ஏணியைவைத் ()
தேறவிட்டுவாங்கியெனையிக்கோலங்கண்டகழன்
மாறிகிட்டவாங்கிவழங்குவீர்-வேறெனக்குத் ௯௱

பின்னுந்தாய்க்கிழவி அறிவிப்புக்கூறல்.

தஞ்சமில்லைநீங்களேதஞ்சமென்றேனங்கோம்
தொஞ்சுமுலைக்காரிதுடிதுடிப்பாய்-வஞ்சத் ௯௱௧
திருடனிவன்கூத்திச்செலவுக்கும்போக்கி
ஒருமுடிப்புவைத்ததுவுமுண்டோ-மருதங் ௯௱௨
குடியிருக்குதேயழகர்கோயில்பதினெட்டாம்
படியிருக்குதேமுதலைப்பள்ளம்-கடுகியாயம் ௯௱௩
சொல்லுதேசிங்கப்பிடாரிதுடியாமல்
சொல்லுதேதீர்த்துக்கொடுக்கிறோம்-அல்லவென்றால் ௯௱௪

என்னைக்கிடத்தியென்றுமகள்தாண்டமகன்
தன்னைக்கிடத்தினான்தாண்டுகிறேன்-சொன்னதென்ன ௩௱௫
தெள்ளிமையோமுற்பிறப்பிற்சீர்கேடனென்மகட்கும்
பிள்ளையோவென்றாள்பெரியோர்முன்-கள்ளிசொல்லைக் ௩௱௬

சபையார்விசாரணைகூறல்.

கேட்டுநகைபுரிந்தார்கிட்டவழைத்தென்னையவர்
கூட்டத்துக்குள்ளிருத்திக்கூறுவார்-வாட்டமுற்ற ௩௱௭
மாதவரோவேசிமருந்திட்டாளென்றீரச்
சேதியுமக்கெங்கேதெரிந்ததென்றார்-காதல்தந்த ௩௱௮

மருந்திட்டதறிந்தமைகூறல்.

மூத்தனையாள்நேற்றிராவுமூலைக்குள்வைத்துவிறை
குத்தியரக்குடித்துக்கூட்டமிட்டிவ் வைத்தைமுதல் ௩௱௯
வெள்ளாட்டிகளுங்குடித்துவெறிபிடித்துத்
துள்ளாட்டமாடமங்கைதூஷணித்துத்-தள்ளித் ௩௱௰
தலைக்கடையில்விட்டாளென்தன்னையொருத்தன்
விலைக்கெருதுபோற்புகுந்தான்வீட்டில்-மலக்கலமாய்த் ௩௱௰௧
திண்ணைத்தலையிற்படுத்திருந்தேன்றுண்டுணியாய்
கண்ணியங்கேவந்தாள்கலைநெகிழ்ந்து-உண்ணு ௩௱௰௨
ஆக்குவெறியாலவளென்மேல்வீழ்ந்து
குாக்குவெறிபோற்குறியிற்குய்யம்-பொருந்தியென்னை ௩௱௰௩
யண்ணுககோலமெல்லாம்பண்ணினளார்க்குமொரு
பெண்ணாசையானாற்பிடிக்குமே-அண்ணர்களைச் ௩௱௰௪
சம்போகஞ்செய்வதுபோற்றன்னுலேயாவதெல்லாம்
அம்பாருங்கண்ணியார்த்தாகாமல-வெம்பியே ௩௱௰௫
காட்டுமருந்துங்கடைமருந்துமூன்மருந்துங்
கூட்டியிட்டாலாசையொருகோதைமேல்-நாட்டம்வர ௩௱௰௬
வொட்டுமோவென்றாளுடந்தையாகத்திரிந்த
வட்டமுலையாள்சொல்வகைவகையாற்-சிட்டோ ௩௱௰௭
இந்தவிதம்நானறிந்தேனென்றுரைத்தேன்கேட்டுநல்ல
விந்தையெனச்சிரித்தார்மேலோர்கள்-சிந்தைநொந்த ௩௱௰௮

சபையார்தன்னைத்தேற்றினமைகூறல்.

பூசுரரேவேதப்புனிதரேயம்பலத்தில்
தாசியுடனேறத்தகாதுகாண்-வேசியொரு ௩௱௰௯
செய்யமறைவேதியனைச்சென்னியிற்கல்லிட்டகதை
ஐயரேநீர்தாமறியீரோ-கையில் ௩௱௨௰
திரவியத்தைவாங்கியுமைச்சிவனுடன்விட்ட
மரியாதைக்குணமோவழக்குப்-பெரியாரே ௩௱௨௰௧

வேதியராயுள்ளவர்கள்வேசியரைக்கண்டாக்கால்
சாதவழிவிலங்கக்காரியங்காண்-ஓதுமறை ௩௨௨

மந்திரநூல்வாயான்மதுவாரசங்கொள்ள
ஏந்தலைநைதுணிவாயெண்ணினீர்-சிந்தைமயல் ௩௨௩

தீர்த்தவாசிக்குத்திரவியமெல்லாங்கொடுத்து
தீர்த்தவாசிக்கடனைத்தீர்த்துவிட்டீர்-தீர்த்தியா ௩௨௪

நாமறியாக்கூத்தாடித்துவிட உரும்மளவோ
நாமமறையோர்க்கெல்லாம்வசையாச்சே-சேமநிதி ௩௨௫

தன்னைப்பறித்தாள்தாச்சொல்லுமென்றீரப்
பொன்னையினிகேட்கப்போகுமோ-பொன்னைப்போற் ௩௨௬

கூட்டியசெந்தேனெடுத்துக்கொண்டோர்தம்மையவர்
ஓட்டிவித்தண்டிப்பதுண்டோகாண்-கூட்டரவம் ௩௨௭

வாய்க்குளகப்பட்டமண்டூகமும்யானை
வாய்க்குள்ளகப்பட்டவான்கரும்பும்-தீக்குள்ளே ௩௨௮

விட்டநறுநெய்யும்வெயின்முகத்திலேவெடிக்க
பட்டகமரில்விட்டவாற்குழம்பும்-கட்டுபசும் ௩௨௯

பாங்கினுற்றேடப்பாமலுத்தர்சைப்பொருளும்
வாங்கினுலிப்பொருளும்வாங்கலாம்-நாங்கள்சொன்ன ௩௩௰

புத்திவழிநின்றாற்பொருளறிதோநீகற்ற
வித்தையிலேசெம்பொன்விளையுமே-எத்தும் ௩௩௧

பாத்தையருக்கிந்திலும்பத்தத்தனையாய்
வாத்தக்கயோகம்வருங்காண்-கருத்திலே ௩௩௨

எண்ணியிடையாதிருக்குமோர்க்கேகுமென்று
புண்ணியர்தாந்தன்மனையிற்போயினுற்-பெண்ணணங்கை ௩௩௩

தான்கலக்கித்தெளிந்தமைகூறல்,

பின்னடத்திசெல்லினவள்பின்னழகைப்பாரேனே
முன்னடத்திச்சென்றாள்முழுப்பாவி-நன்னீர்கட் ௩௩௪

டாகுங்குளத்திலனுபவித்துவற்றியபின்
ஏகுமறவைகள்போலேகினள்-மோகமுற்ற ௩௩௫

என்னைக்கிழவியிடர்செய்தெனைப்பிரியாக்
கன்னிதனைபபிரிவுகண்டாளே-இந்நாட்டில் ௩௩௬

மாடுமிதித்தாய்க்கிழவிமாமிதலையிற்கல்லைப்
போட்டுப்புறப்பட்டுவோவோமோ-நாட்டமுற்ற ௩௩௭

ஊரெங்கேதோழரெங்கேயுற்றாரெங்கேமனைவி
யாரெங்கேயஷ்டாவதானியென்றும்-வேறெங்கே ௩௩௮

நானுவிதமுமெண்ணிட்டாற்றுச்சோலையைப்போல்
ஆனேனுமெனக்கலக்கமாகினேன்-யானே ௩௩௯

### ஆலயஞ்சென்றுதெரிசித்தமைகூறல்,

எனைத்தேற்றிக்கொண்டுபோயெங்கள்சொக்கலிங்கந்
தனைப்போற்றியென்கவலைசாற்றி-அனுக்கிரகம் ௩௱௪௰
பெற்றிரண்டாஞ்செம்பொற்பிரகாரமயான்வலமாச்
சுற்றிவைரவசுவாமியையும்-முற்றும் ௩௱௪௧
வணங்கியொற்றம்புந்தனக்குவடபால்
இணங்குந்திருவாசற்கிப்பால்-மணங்கமழ்பூ ௩௱௪௨
மாலைநிறைத்தமணிவாசன்முன்மகப்பிற்
சேலைநிறைத்ததிருவிளங்கும்-பாலாவி ௩௱௪௩
சாந்திதாவீனத்துக்கட்டளைக்குக்கட்டளையாய்
வாய்ந்ததெல்லாஞ்சொர்ணமயமாகித்-தேய்ந்தமுனை ௩௱௪௪
நெட்டிலைவேற்சங்கநிதிக்காசனுமானைப்
பெட்டிநிறைந்தபிரகாசம்போற்-சட்டம் ௩௱௪௫
புழுகுமணமும்பொலிக்கவனைக்கண்டு
தொழுதேனதிசயமுந்தோன்றப்-பழுதில் ௩௱௪௬
மறையோன்மணியம்வரதையனென்போனவ்
வறைவாசலிலிருந்தானையா-செறிவுடையாம் ௩௱௪௭

### நாகமகூளேந்த்ரன்கட்டளைகண்டமைகூறல்.

ஆருமயமீதென்றேறுடைலபயன்முதல்த்
தாருலவுமேருத்தடமயமால்-வாராளும் ௩௱௪௮
யோகமகாராசனென்பதூர்வாழ்பெரிய
நாகம்கூளேந்த்ரநரபாலன-தோகையபில் ௩௱௪௯
மீனாட்சியம்மைக்குமிக்கசொக்கலிங்கருக்கும்
தானாட்சியானவுபசாரமோ-மேன்மையபி ௩௱௫௰
ஷேகமதுமாலைசிறப்புமூதுதீபமுத
லாகவிடம்பிக்குமறையெனமுன-மோகமக் ௩௱௫௧

### இழந்தபொருளுக்கிரங்கினமைகூறல்.

கிட்டணையுங்கன்னிக்கினைத்ததெல்லாமிப்படியோர்
கட்டளையாச்செய்துவலங்கண்டோமோ-சிட்டர்தொழும் ௩௱௫௨
அங்கயற்கணம்மைக்கழகுதிருவாட்சியொன்று
தங்கத்தினாலேசமைத்தோமோ-சங்கார்சொக் ௩௱௫௩
கையார்மகிழ்ந்தேறவபிஷேகமண்டாரம்
செய்ததிருத்தேர்வோலச்செய்தோமோ-வைபோகம் ௩௱௫௪
பொற்புதுமண்டபத்திற்பின்புறமுமுன்புறமும்
பொற்றகழுகொண்டழுத்திப்போட்டோமோ-மற்றுமெங்கள் ௩௱௫௫

மாலழகருக்குவயிரத்தாற்பின்னெறித்தாற்
போலழகாமங்கிபண்ணிப்பூட்டினமோ-சாலையறம் ௯௫௬

செய்தோமோகோதானஞ்செய்தோமோபூதானம்
செய்தோமோசத்திரங்கள்செய்தோமோ-ஐய்யவிதி ௯௫௭

ஆரிடத்தில்வாங்கிமெருப்பலனைத்தேடுவோம்
போர்படைத்தபெஞ்சைப்ரதாபனென்ப-தூர்படைத்த ௯௫௮

## அப்பிரபுவிடத்துக்குச்செல்லத்துணிந்தமைகூறல்.

ஐயன்பெரியநாகையனிடஞ்செல்வோமோ
செய்யுமறைவேதியரோசெப்புமென்றேன்-எய்துதிருப் ௯௫௯

பாற்கடலுக்கேகினவர்பால்குடியரோவிதற்கு
மேற்புத்தியுங்கேட்கவேணுமோ-சூற்கொண்டு ௯௬௦

பெய்யுமழைக்குணையாதபேருமவன்
கையிலேற்காதவருங்காணேனன்-ஐயமின்றிப் ௯௬௧

போமெனவெண்ணீறுதந்துபூசிவிட்டார்சந்தனத்தை
யாமெனச்சொக்கேசரடியணிந்து-மாமேவு ௯௬௨

கூடலழகர்மதனகோபாலர்பூந்துளவ
வேடலருந்தார்வீரராகவமால-மாடேறும் ௯௬௩

நல்லாண்டவர்யார்க்குமிம்மையிலேநன்மைதரு
மல்லாண்டவர்பாதம்வாழ்த்தியே-செலவ ௯௬௪

மடந்தையங்கையற்கண்வாசலறச்சாலை
கடந்துமறுவீதிகடந்து-கடந்துவாய் ௯௬௫

## மதுரையினின்றுஞ் சென்றமைகூறல்.

பின்னிழுக்குமோர்காலேபெண்ணாசைமாமிசினம்
பின்னிழுக்குமோர்காலேன்றுதாம்-பின்னே ௯௬௬

திரும்புவதுமீள்வதுமாய்ச்சிமாட்டியாசைக்
கரும்பையினைத்தேன்கருத்தில்-விரும்புமவள் ௯௬௭

குன்றிருக்குமென்முலைமேற்கூடிக்கலந்தசுகம்
இன்றொருத்தன்மங்காயிருக்குமோ-மன்றலர்நார்ச் ௯௬௮

சுற்றுடனான்படுத்ததூங்குமஞ்சமீதிலொரு
பற்றுய்யவலும்படுப்பானோ-மற்றுமந்தச் ௯௬௯

சந்திலேமாமிவிட்டசண்டையிலேவந்தவொரு
தொந்திவடுகன்சுகிப்பானோ-முந்திவிலை ௯௭௦

யாடியனுராகம்பாடியுறவாடினன்
கூடியதெல்லாநினைத்துக்கொள்வாளோ-மேடையின்மேற் ௯௭௧

பின்னமுலைமேற்பதித்தக்கிள்ளையார்த்தென்னையுஞ்சற்
றெண்ணிநெடுமூச்செறிவாளோ-எண்ணிற் ௯௭௨

படாதபாடித்தனையும்பட்டேனென்பாவம்
இடாதோபிரமனார்க்கென்றே-தடாமல் ௱௭௩

வடக்குமுகக்கோட்டைவாசல்நடுக்கட்டு
முடக்கில்வரும்போதெனக்குமுன்னே-அடக்கமுள்ள ௱௭௪

ஞானியாரைமறுபடியுங்கண்டமைகூறல்.

மானுபரஞானியையன்மதனாக்கன்
றேனேவந்தானென்னெதிராக-நானவனைக் ௱௭௫

காணுமளவிற்களவாண்டவன்போலெண்
சாணுடம்புங்குன்றியொருசாணானேன்-நாணமாய் ௱௭௬

மாமிதனைக்கண்டமருமகள்போலானேனைச்
சாமியேனையம்மாய்த்தழுவினால்-நாமரிய ௱௭௭

ஆனைபோலேயிருந்தினாயரோயும்முடம்பு
பூனைபோலேயொடுங்கிப்போவானேன்-ஆனவிது ௱௭௮

என்னவகையென்றான்மற்றேதுவகைநீர்முதலே
சொன்னவகைகேளாததோஷவகை-முன்னுமது ௱௭௯

கைமைவிட்டுவேசிமகள்கால்பிடிக்கச்சென்றேனான்
மையையிட்டகண்ணிக்குமாலானேன்-மையவுண்டைக் ௱௮௰

கூட்டியிட்டாள்கைப்பொருளைக்கொள்ளையிட்டாள்கைக்குரங்காய்
ஆட்டியிட்டாளிக்கோலமாக்கிவிட்டாள்-கேட்டார் ௱௮௧

ஞானியார்தேற்றமைகூறல்.

நகைப்பாரொன்றேனிதற்குநாணமேன்யார்க்கும்
வகைதப்பாமோசம்வாராதோ-பகுத்தறிவாம் ௱௮௨

வண்டாடுஞ்செங்காந்தள்வாழையாலேவசைந்து
கொண்டாடுவோர்க்கைக்குணங்காட்டக்-கண்டெதிர்பின் ௱௮௩

இந்திரன்மெய்மோனிக்சனீனாஞ்ஞானதுவும்
அந்தணனார்சென்னியிலொன்றற்றதுவும்-சந்தோம ௱௮௪

சந்தாமடிந்ததுவுஞ்சுக்கிரீவனால்வாலி
முந்தமடிந்ததுவுமுன்னொருநாள்-கந்தன் ௱௮௫

மாமானதுமிலங்கைவாள்வேந்தன்சிந்து
சீரமானதும்வச்ரதேகத்-தூரம்படைத்த ௱௮௬

கீசகனார்மாண்டதுவுங்கேட்டீரிலையோபெண்
ணாசையாலென்பதறியீரோ-பூசுரரோ ௱௮௭

கைப்பொருள்போச்சென்றுகவலையேன்கல்வியொன்றால்
மெய்ப்பொருளாம்பாவலர்க்குவேளாண்மை-இப்புவியில் ௱௮௮

மன்னனுமாசறக்கற்றோனுஞ்சீர்தூக்கின்
மன்னனிற்கற்றோன்சிறப்புடையன்-மன்னனுக்குத் ௱௮௯

தன்றேசமல்லாற்சிறப்பில்லைகற்றோர்க்குச்
சென்றவிடமெல்லாஞ்சிறப்பென்று-நன்றிபெற ௯௯௰
ஔவைசொன்னநீதியறியீரோநீரினிமேல்
இவ்விடம்விடுங்களூர்க்கேகுமென்று-தெய்வ ௯௯௧
மறைவலலோனென்னைவழிவிடுத்துப்பார்த்துத்
தழுவின்றனென்மேற்றயவால்-நெறியுடனே ௯௯௨

ஒன்பதூர்க்கநோக்கிச்சென்றமைகூறல்,

ஐம்பதூர்க்கேகியலைந்தலைனேதன்றே
ஒன்பதூர்க்கேகவொருமித்தேன்-முன்புகருங் ௯௯௩

நற்சகுணங்கண்டமைகூறல்.

காகமிடத்திருந்துகைக்குவலப்புறத்தில்
ஏகக்கருடனிடமாக-யோகபலம் ௯௯௪

ஏடகங்கண்டமைகூறல்.

இன்றுவந்தகாருமக்கென்றுவந்தேனேடகத்திற்
சென்றுவந்தேயங்கச்சிவனுனை-அன்றுதெரி ௯௯௫
நாகமலைநம்பநாங்கொண்டைப்பூவிகழுந்
தியாகமெனப்பொன்னுமுத்துஞ்சிந்திரமத்-தோகைவிரிச் ௯௯௬
சிந்தேனென்பூர்வசென்னதோஷங்களெல்லாய்
இக்தேசங்கண்டதெனவறியேன-அத்தலத்தில் ௯௯௭
வேம்புகரும்பாமாம்வெண்மணலேநீறுமாம்
தாம்புவிடுநீயிர்தானுமாம்-தேமட்டும ௯௯௮
வலியேன்மருந்தின்மயக்கமுநோயுந்தீர்த்
தறிவாளனாகிவிட்டதவ்வூர்-நெறியுடனே ௯௯௯
அன்றைநாள்தங்கியருணோதயத்தெழுந்து
மற்றைநாண்மேற்குவழிகொண்டேன-வெற்றிபுரி ௲
கோடுகொண்டமால்யானைக்கூடேந்திரனென்பதுபோர்
நாடுகண்டேனென்கவலைநாசகரணன்-ஆடகவான் ௲௧

பின்புநாடுவளங்கண்டமைகூறல்.

எட்டியபூஞ்சோலையெழிற்கமுகம்வாழைகளும்
கட்டியபூங்காவனமாக்காண்பிக்க-விட்ட ௲௨
வருக்கைபலாககனியைமந்திபிருனைக்கொண்டு
டிருக்குவதுமத்தளக்கோடென்ன-உருக்குமிசை ௲௨
வண்டுகித்திகூடவரிக்குயில்கள்பண்பாடக்
கண்டுகிளிகள்கவிபாடத்-தண்டாத ௲௪
மண்டலந்தாரல்விமறர்வாடைக்காற்றுலடிபட்
டொன்றொடொன்றுதாளம்போலொத்திசைப்ப-வின்றுலகில் ௲௫

நீலவண்ணந்தோகைநெடுஞ்சிறகைமேல்விரித்துக்
கோலவனிதையர்போற்கூத்தாடச்-சோலைக்குள் ௯௬
ஆங்குருகிபாயுமலரோடைவாளைவாள்
வாங்கியவீச்சுவளங்காட்டப்-பூங்காவில் ௯௭
வந்துநுழைந்துசொல்லும்வாலாவிகூத்துக்குப்
மந்தம்பிடிக்கும்படிசிறப்பு-மூந்த ௯௮
மூகைத்திருக்குமுல்லைமலர்மொய்த்திருந்துபார்ப்போர்
நகைத்திருக்கும்பாவனையாய்நண்ண-மிகுத்தவொரி ௯௯
தாடுகின்றமஞ்ஞையெதிரன்னம்பறந்துவந்து
போடுகின்றவெண்டுகூபோற்படிய-நீடுலயச் (௱)
சாலிக்கதிர்குலையுங்காமரையுமந்தரும்
சோலைக்குண்மன்னர்குழாஞ்சூழ்ந்தொக்குஞ்-சோலைவளம் (௱௧)
ஏதென்றுசொல்வேனிருதோளும்பூரித்தேன்
வேதன்றொழுங்கோயிலையேட்டிலே-சீதையுடன் (௱௨)

திம்மராயரைக்கண்டுதெரிசித்தமைகூறல்.

மாதவனைக்கண்டேனென்வல்வினையெல்லாமுடனே
ஆதவனைக்கண்டபனியாகினேன்-பாதம் (௱௩)
தொழுதுதிம்மராயர்துதித்துனைப்பாடாமல்
பழுதிலேவேசையரைப்பண்ணி-முழுவதுமுன் (௱௪)
மீனவடிவமைந்தமின்னார்காணென்றுநீ
யானசிங்கருபமிடையாமென்றும்-மேன்மையுடன் (௱௫)
மைக்கிசைந்தரூபத்தைமங்கையர்கூந்தலென்றுங்
கைக்கிசைந்தசங்கைக்கழுத்தென்றும்-திக்கனைத்தும் (௱௬)
தங்கிப்புவனமெல்லாந்தங்கவனைத்தந்தமல
ருந்திதிருமுகத்துக்கொப்பென்றுஞ்-சந்ததமும் (௱௭)
வேயடுத்தநின்னிசையைமின்னார்வசனமென்று
நீமடுக்கும்பாயைநிதம்பமென்றும்-வாய்ப்பிதற்றிப் (௱௮)
பாடினேனிந்தப்பலன்கண்டேன்சிந்தைமலர்
சூடினேன்பாதந்தொழுதெழுந்தேன்-ஆடி (௱௯)

பதியின்சிறப்புக்கண்டமைகூறல்.

அளகாபுரிக்குமமராபதிக்கும்
வளமானவப்புரிக்குவந்தேன்-ஊளமெளனும் (௱௰)
செம்பொன்னெடுமதிலுந்தேரோடும்வீதிகளுங்
கும்பமுடிநிரைத்தகோபுரமும்-அம்பரத்தில (௱௰௧)
ஆற்றுநீரள்ளியருக்கனுடல்குளிரத்
தூற்றியபொன்மாடத்துகிற்கொடியும்-நீற்றொளிசேர் (௱௰௨)
தன்னிறத்தைப்பொன்னிலத்துத்தங்கிக்கிந்தங்கிலத்துப்
மன்னிறத்தைப்பெற்றபுரிசைகளும்-இன்னவழ (௱௰௩)

கத்தனையுங்கண்டுமகிழ்ந்தையன்கோபிலனும்
கர்த்தனையுங்கண்டும்கலத்தாள்-பத்தியுடனே (தஉச)

ஆரண்மனைகண்டுசென்றமைகூறல்.

சேவித்தேன்கோயிலுக்குத்தென்புறத்திற்கம்பர்பூ
நீவித்தேனூற்றுநெடுமதிலும்-மேவுமுகம் (தஉரு)
இட்டமணிப்பொற்குடங்களெட்டுவகைச்செந்திருவின்
வட்டமூலைபோலிலங்குமாளிகையும்-தொட்டுக் (தஉசு)
குழைக்கின்றநல்குரவுகொண்டேனைவாவென்
றழைக்கின்றதுபோனின்றாட்டம்-தழைக்கின்ற (தஉஎ)
சிங்காரவெள்ளைச்செயலாலுங்கண்டிதுவே
எங்கோனரண்மனையென்றெய்தினேன்-துங்கப் (தஉஅ)
படையாற்றிருடர்பயத்தாற்கொளஉபால
அடையாதவாசலுக்குளானேன்-தடவிகட (தஉகூ)
காந்துதழற்சிறுகட்காரனைநிற்பவது
ஏந்துசெம்மைக்கண்டுவெகிலென்றுமனம்-சேர்ந்துநான் (தஙய)
வெல்லவிட்டபூண்டிலையாண்மென்மூலைமேலென்மனதைச்
செல்லவிட்டேன்மெள்ளத்திருப்பினேன்-செல்வமுதல் (தஙக)
வாசலுக்குண்மன்னர்வருவாரும்போவாரும்
சேஜெயெனுஞ்சந்தடிக்குட்சிக்கினேன்-வீசுகின்ற (தஙஉ)
பட்டைக்கம்புக்குப்பயந்தேனைப்பின்மற்றிவந்த
மொட்டைக்கலியன்முடுக்குண்டான்-கிட்டப்போய் (தஙங)
அத்தினேன்கொல்லவேனையாரென்றாப்மானான்
வித்துவானென்றுசொன்னேன்விட்டுவிட்டார்-மொய்த்தமணிப் ()

கொலுசிறப்புக்கண்டமைகூறல்.

பத்திவிலாசப்பவளக்காற்கோதிகைப்பூ
வைத்தகனகமணிமண்டபத்தில்-இத்திகிரி (தஙரு)
வாளலோகம்புரக்குமால்பெரியகாகேந்த்ர
கூளபூமாலன்கொலுவாகத்-தோளிற் (தஙசு)
செயமாதுகூத்தாடத்திங்கண்முகமேற்பங்
கயமாதுதன்கருணைகாட்டக்-கையிலேந்து (தஙஎ)
செய்வடித்தவாள்செவிக்குநோாகமின்றெனக்கூன்
எய்விடத்தையாசொலலெனக்கேட்பச்-செவ்வியலுஞ் (தஙஅ)
சந்த்ரகாவித்தலைப்பாகைமேற்கவிகை
சந்த்ரோதயகாந்திதான்கேட்ட-அந்தரமும் (தஙகூ)
திக்கனைத்துஞ்சுற்றச்சிறகடிக்கொள்கீர்த்தியைப்போல்
மிக்கிரட்டைப்பாவாமைவீசிநிற்கச்-சொக்கர் (தசய)
அவிரொளிரத்நாங்கொடுத்திருமால்வீசும்
கவரியுபயமிறக்காட்டக்-கவலைபடும் (தசக)

சொற்காட்டுமொன்னார்தொழுதுவந்துகொஞ்சப்
பற்காட்டுஞ்சென்னிபதித்தமணி-முற்காட்டு ௩௪௨

சாமித்துரோகரைப்போற்றண்டைமுகப்பிலவெற்றிச்
சேமத்தலைபோலச்சோதிவிட-விமரண ௩௪௩

திரதுரைமக்கள்செயமந்திரிமாரும்
விரதளகர்த்தர்களும்வேந்தர்களும்-மார்மதிக்கும் ௩௪௪

ஸ்தானுமதிகளும்ப்ரசண்டயோகிகளும்
நாநாகவிதிரிந்தநாவலரும்-கோன்முறைமைக் ௩௪௫

இந்தவகைக்கிந்தவகையின்மந்திருவதென்ன
வந்துமாராசர்மனுகேட்பச்-செந்திருவாழ் ௩௪௬

துய்யவதனசந்த்ரசோமைநருந்தெள்ளமுதை,
தையலல்லார்செங்கட்சகோரமுண்ணக்-கைகுவித்து ௩௪௭

வாரிட்டராணுவரிசையாய்நிற்கவெதிர்
காரிட்டயானைநின்றுகாதாட்டத்-தாரிட்டும் ௩௪௮

பொன்னின்முகப்பூண்டுபூட்டிநிறைத்தடிகலி
வன்னப்பரிகளைத்துவாவிநிற்க-எங்கேம ௩௪௯

கூடுஞ்சனுவூழியக்காரர்கோடிசெய்த
தேடுங்கனம்சேருவைக்காரர்-சோடிட்டுத் ௩௫௦

தத்தாமாய்க்கலிவிட்டதண்டைகளும்கேடயமும்
கத்தியுமாய்வந்துநின்றுகைகுவித்துச்-சித்தம்வாச் ௩௫௧

சிங்களத்தைவிட்டுச்சிறைபிடிக்கவோகாங்கள்
வங்களத்திலேகலகம்வைக்கவோ-பங்கமில்லா ௩௫௨

வலைலத்துக்கோட்டையைப்போய் வாங்கவோவாங்காதோ
கொலலத்தைகொள்ளையிட்டுக்கொள்ளவோ-பெல்லப்போ ௩௫௩

சொல்லையாவென்னத்துடிமடியக்காரர்பணம்
செல்லும்வரவுஞ்செவிக்கேற்ற-கெல்லுமிதி ௩௫௪

ஆயக்கமுஞ்செலவுமாதாயமுங்கழிவும்
வாயிற்கணக்கர்வந்துவாசிக்கத்-தேயத்துக் ௩௫௫

கோவேலைவாசகத்தைகூறுவாருமெழுதி
ஏவோலைகொப்பமிட்டுச்சொல்லத்-தாவித் ௩௫௬

தகருந்தகருந்தலையுந்தலையுந்
தகருந்தகருமெனத்தாக்க-விகடதட ௩௫௭

மல்லராய்முற்பகையுமல்லராய்க்கட்டிவிழு
மலலராய்கைகுவித்துவாங்கிநிற்ப-வெலலக் ௩௫௮

குறும்புள்ளாயன்கைக்குறும்புள்ளாக்கோபக்
குறும்புள்ளாய்ப்மாய்ந்துகுதிகொள்ளப்-பறங்கியரும் (௩௫௯)

சோனகருந்தக்கதுரிதவராகனிது
சினர்வரவிட்டசிவிகையிது-யானைகட்டி (௩௬௦)

மிண்டுகொண்டமைசூர்மேல்வேட்டையோம்கம்முடைய
தண்டுகொண்டுவந்ததனங்களிது-மண்டலிகர் (தூகூக)

இட்டதிறைகளிதுபாக்கென்றுசொலவிக்
கட்டியர்கொண்டாடக்கனபேரி-கொட்டரண

மல்லாரிகொட்டவகோபிலமாக்கோயிலா
ரெல்லாருமோர்பாலினிதிருப்ப-நலலமிாத (தூகூ௩)

போசனுங்கூளபூபாலன்சத்திரத்து
மாசனமுமன்றுடிமங்கலத்து-மாசனமும் (தூகூச)

அத்தலக்குண்டுமாசனமுமாற்றாராம்
அத்தலத்திலவைதிகநூலந்தணரும்-வித்வசெனர் (தூகூரு)

பக்ஷமுழுமெங்கோன்பவிசுப்ரலன்களுமென்
றக்ஷயமாமென்றக்ஷதைவழங்க-ரக்ஷகனும் (தூகூசு)

கோரசிங்கரூபவுக்ரகோதண்டபாணியைப்போல்
வீரசிங்காதனத்தில்வீற்றிருந்தான்-சூரியன்முன் (தூகூஎ)

பங்கயம்போலானேன்மாயனெச்செனறெதிரே
செங்கைதனையேந்திச்செயமென்றேன-இங்கே (தூகூஅ)

இருமென்றென்னையணிடங்காட்டப்பெற்றேன்
அருகிலிருந்தேன்மகிழ்ச்சியானேன்-கருணைபுரிந் (தூகூ.கூ)

தென்மேல்விழிவைத்தானெங்கோன்குறிப்பறிந்து
பொன்மேவுமபெஞ்சைபுரந்தரா-மன்னு (தூஎ௰)

நிகளங்காவலலாநிலேக்கோட்டைராயா
அகளங்காவாளுக்கபிமா-நகைமுகப்பித் (தூஎக)

தாபாகவிகோபாசதுராவிருதுமண்டு
பாமாவலக்கவசம்பாக்யகுல-தீபா (தூஎஉ)

கமூஃப்ரபுகலளிதசுகுணகுணாவியனைய
சமுகநகைமுககமலதளயனு-அமிர்தாச (தூஎ௩)

மதுரவித்வவசனமிர்தமகமெமுதுபுயசைல
சதுரதடகடகாடசமாகரி-உதயசெரு (தூஎச)

விதரடனபரிநதுலவிகடமிடிமகுடமுடி
அதிரவடிவருடுசாணடலமய-அதுலகுல (தூஎரு)

சந்திரசிந்துரசந்தனகுங்கும
மந்தரகொங்கைமடந்தையர்-சுந்தர தஎசு

கல்விப்பெருங்கடலேகற்பகக்கனறேசமலச்
செலவிக்குவாய்த்ததிரவியமே தஎஎ

கூன்கோட்டியானைக்குறுகாரெனுங்காட்டு
மான்கோட்டஞ்சாடுமவரிப்புலியே-மீன்கூட்டம் தஎஅ

பாதிக்குறவவிந்தமுண்டிமலேச்சாரலிலே
ஆதிக்கஞ்செய்திருக்குமாளியே-ஓதுபகை தஎகூ

வீரமண்டலிகரெனும்வேழங்களைவிழுங்கும்
மாரகண்டபேரண்டபக்ஷியே-சேரலாய் ௱௮௰

அண்டிப்பொருவோரரிக்குலத்தைவாளுகிராந்
தண்டிற்கிழக்குஞ்சரபமே-இண்டறலவேற் ௱௮௧

போசேந்த்ரசக்ரபுவனேந்த்ரராஜாதி
ராஜேந்த்ரதீனசனரக்ஷிகா-வீசுதிசை ௱௮௨

ஆற்றிலேனாலுமனுதினமும்பொன்னூறும்
ஊற்றிலேயாருமுடையானே-ஏற்றமுள்ள ௱௮௩

பத்தூரல்லொன்றுப்படைக்குந்தலையூராம்
நத்தூருமொனமதூர்நாயகனே-மொய்த்தகடல் ௱௮௪

ஒப்பத்திரண்டுதளமுள்ளசதுருடியங்கள்
முப்பத்திரண்டுபெற்றமொய்ம்பனே-இப்புவியில் ௱௮௫

அண்டலரைவெல்லுநருமத்துநாலுமன்னர்
கண்டசெயதுரங்கரணகஞ்சனனே-மிண்டுகொண்டு ௱௮௬

சண்டைக்குடில்வித்தளம்வந்தாலும
கண்டுமலையெறுதகண்டனே-தண்டஜய ௱௮௭

தண்டனேகாரியவுக்தண்டனேசூகாலே
தண்டனேவீரியகோதண்டனே-தண்டலவத் ௱௮௮

தாரனேசர்க்குணவிஸ்தாரனேகற்றவர்க்கு
தாரனேயற்றவர்க்காதாரனே-ஆரமுத ௱௮௯

சோமனேயன்னசத்ரசோமனேகற்பகப்பூங்
காமனேவிற்கரும்புக்காமனே-நாமகள்சேர் ௱௯௰

வெஞ்சைநகர்சிந்தமனபேறேசரற்கால
மஞ்சைசிகழுந்தியாகவள்ளலே-அஞ்சித் ௱௯௧

தொழுதுங்கவேந்தருக்குத்துள்ளுசீட்டொப்பம்
எழுதும்பெரியநாகேந்த்ரா-எளிமையார் ௱௯௨

கரங்கள்விரித்தேற்கக்கன்றுகண்டவாபோல்
இரங்கும்பெரியநாகேந்த்ரா-வரங்கள் ௱௯௩

செருக்குமசுரும்பம்போற்சிங்காதனத்தில்
இருக்கும்பெரியநாகேந்த்ரா-பருக்கும் ௱௯௪

மழைக்கும்பகழும்மதயானைவிரிட்
டழைக்கும்பெரியநாகையா-தழைத்தபுகழ்க் ௱௯௫

கூளயகிரண்குமாரதுரைச்சிந்தமனும்
வாளயசோதரவசீரனே-நீள்சகல ௱௯௬

தன்வித்தைஅரங்கேற்றினமைகூறல்.

சம்பனுவென்றுதமிழ்பாடினேன்தமிழிற்
கம்பனுமென்றார்கவிராஜர்-செம்புபெறக் ௱௯௭

கட்டாகநூறுகவிசொன்னோனங்கேயென்
அஷ்டாவதானமாக்கேற்றினேன்-அஷ்டாங்க ௲௯௮
யோகக்காவித்துகிலோருள்ளமகிழ்ந்தயிர்த
மாதமெனச்சொலலப்பண்ணினேன்-தியாகநிதி ௲௯௯
என்னும்பெரியநாகேந்த்ரனைசளக்க
மன்னன்திருவாய்மலர்ந்தருளி-என்னைக் ௲௱
கவிச்சக்ரவர்த்தியென்றுன்காவலாநீயே
புவிச்சக்ரவர்த்தியெனப்போற்றச்-செவிக்குநல்ல ௲௧0௧

வெகுமதிசெய்தமைகூறல்.

முத்துக்கடுக்கனொடுமுன்கைதனக்கிணங்கும்
அஸ்தகடகம்ரத்நகாரமணிக்-கொத்துச் ௲௧0௨
சரப்பணிதும்பிப்பதக்கஞ்சாலுவைபொற்காந்தி
மாப்பியிடுபொற்சரிகைப்பாகை-தரித்தருள்பி ௲௧0௩
தம்பரங்கவீந்தான்தருப்போலவனெனக்கங்
காம்பரிசிலீபமதற்குமுன்னே-மேற்பநம்போ ௲௧0௪
தீட்டுபுகழ்க்கல்லூர்வாழ்திப்பணவேளந்தலைக்குச்
சூட்டவொருமுத்துத்தூரவிந்தான்-தாஷ்டிகோத் ௲௧0௫
தண்டெட்டுங்கூளேந்த்ரன்தம்பியாஞ்சிந்தமனோர்
கண்டசாமிந்தாளைகழுத்துக்குக்-கொண்டலெனும் ௲௧0௬
முத்துராயன்கொடுத்தான்முன்னணிசுமாக்கியணன்
மத்துவராகன்பெறவோர்பாகிந்தான்-சித்தசனும் ௲௧0௭
ரங்கப்பனைகைக்கொலுசுகல்கினான்மோதிரமென்
செங்கைவிரலுக்கணிந்தான்சிந்தமவேள்-தங்கவளை ௲௧0௮
ராசகோபாலையனலகினான்சீரகொள்முத்துப்
பேரசனொருமுத்துவடம்பூட்டினான்-மேசுபுகழ்ச் ௲௧0௯
சாந்தபூபன்கொடுத்தான்சாலுவைநன்னுகரதநப்
ஈந்தானகொடிநாகனென்கையில்-வாய்ந்தபுகழ் ௲௧0௰
நல்லவநுசுநடைப்பரியீந்தானுலகம்
சொல்லும்பணிக்கரயன்சொக்கலிங்கம்-மல்லிகைப்பூத் ௲௱௰௧
தையலங்கியொன்றெனக்குத்தந்தான்பெரியதம்பி
துய்யவெள்ளிக்குண்டுசெரக்காய்தந்தான்-பொய்யுரையாக் ௲௱௰௨
கூளக்கணக்கன்மணிகுண்டலந்தந்தானிரண்டு
தோளிற்றுணுக்களவாய்த்ததூக்கவே-வேளைக் ௲௱௰௩
குதவியதமயான்கொடுத்தானென்பதுபொன்மட்டுச்
சதுரன்கைலாசதபாலு-புதுவயிரத் ௲௱௰௪
தண்டோட்டிதந்தான்சவாதுப்பணிதந்தான்
கொண்டசொக்கலிங்கனகொடுத்தானோர்-முண்டாசு ௲௱௰௫

சட்டமிட்டுச்சொக்கலிங்கன் தந்தான்கணையாழி
கட்டழகனாசிபந்துகட்டினான்-பட்டை ௲௰௬

யனாஞான் தந்தான்பொன்னனாசட்டைதந்தான்
வரிசையாம்ராமமகிபன்-முருகுமுத்து ௲௰௭

சின்னனுதவினான் திரள்வடகூளன்
பொன்னால்விருதுதண்டைபூட்டினான்-மின்னெறிக்கும் ௲௰௮

தாயிரத்திராமனன்றுதந்தான் திருமலையான்
நேயத்தாற்பொற்பூவிசாறுதந்தான்-தூயதுனைக் ௲௰௯

காமனீந்தானற்சுறவையைந்துகண்டையிட்ட
சோமனீந்தானைக்குச்சோட்டாகச்-சோமனெனும் ௲௨௰

பசலைசிவப்புத்துப்பட்டிதந்தான்மாடல்
மாலுக்குக்காம்பசுதந்தான்-மால்குழைந்து ௲௨௰௧

வேலனெனக்கிரண்டுவெள்ளையெருதாய்மேகம்
போலக்கொடுத்தோட்டிப்போவென்றால-சீலிபு ௲௨௰௨

பாலன்கொடுத்தானேர்பச்சைவடஞ்சோடங்கி
காலுமுடிப்புரொக்கலகினான்-சீலனெனும் ௲௨௰௩

நல்லமதன்கொடுத்தானல்லகுதிரைமறி
கல்விதெரிசிக்கணனென்கண்குளிரக்-கொல்லத்துப் ௲௨௰௪

பச்சைக்கனாய்தந்தான்மாரியொத்தகாமியங்கே
மெச்சியெனக்கிரண்டுமேதிதந்தான்-உச்சிதமாக் ௲௨௰௫

கூதலுக்குப்போர்வைதந்தான்கொண்டபூமன்னுலக
நாதன்சகலாத்துலகினான்-மாதங்கக் ௲௨௰௬

கட்டிக்கொடுத்தனனுக்கண்டவன்குருவா
ரொட்டிகொடுத்தானதற்குரொட்டிப்பு-தட்டிவிட்டு ௲௨௰௭

நாழிமுத்தைமுத்தையவேணல்கவரதப்பனொரு
தாழிவிரலைப்போட்டான்சமூகத்தில்-வாழியென ௲௨௰௮

ரங்கையனீந்தானங்கோரதககண்டிராமயனுந்
தங்கன்கொடுத்தான்பொன்தொண்ணூறு-இங்கண்முக ௲௨௰௯

வீரப்பெருமாள்விரலுக்குவச்சிரக்கல்
சேருற்றபொன்மோதிரந்ததான்-கோர ௲௩௰

அனுமத்துவசருங்கருட்டாலர்
கனவிருதுசிங்கடாற்காரர்-எனவாழும் ௲௩௰௧

எல்லாருஞ்செம்பொனிறைந்தாரையானைஞ்சூழ்
நல்லாசனம்பெரியநாகேந்ரன்-செல்வத் ௲௩௰௨

துரையெனக்கங்காட்டான்சொர்ணாபிஷேகம்
கரையெனத்தந்தானேமதமா-தளரக் ௲௩௰௩

கவிகைதந்தான்வெள்ளைக்கரிதந்தான்செம்பொற்
சிவிகைதந்தான்காந்திசிறந்த-ரவிபோல ௲௱௩௰௪

இருட்டகற்றுதீவட்டிமீந்தான்மதியோற்
சுருட்டிதந்தான்தந்தான்றுவசம்-பெருத்தசில ௲௱௩௰௫

ஊர்தந்தானும்மளிக்கையூர்தோறும்பண்ணைவைக்க
ஏர்தந்தான்வாவுக்கிடந்தந்தான்-ஆர்தந்தார் ௲௱௩௰௬

இந்தத்தியாகமிவனைப்போல்வாவியர
விந்தத்தியாகவந்தமெல்லியலே-இந்தவிதம் ௲௱௩௰௭

(விறலியைத்தூதுவிடுத்தமைகூறியது.)

என்னசெய்தியாதிதொடர்ந்தெல்லாமுனக்குரைத்தேன்
மென்செய்தவம்மூர்க்குப்போயினிநீ-மின்செய்த ௲௱௩௰௮

சிற்றிடையாகியவென்தேவியாரைக்கண்டு
நற்றிறஞ்சேர்வீணையம்பாடி-மற்றவளுக் ௲௱௩௰௯

கென்குறையமெள்ளவியம்பியெதிர்சொல்லுமந்தப்
பொன்குறையுங்கேட்டுடல்போக்கியோ-நன்குறுமென் ௲௱௪௰

ஆசைமனையாட்டிதனக்கையங்காரின்னுமொரு
வேசைமனைக்கேகுவரோவிட்டெனவா-லோசனையுட் ௲௱௪௰௧

கொள்ளாமலென்பதங்கூறிமுன்னைக்குற்றநினைந்
தெள்ளாமற்கற்பினியல்மோதி-உள்ளாளப் ௲௱௪௰௨

பண்பாடியுட்கமாமாணம்படச்செய்து
நண்பாடியென்வரவைநான்கேட்டுக்-கண்பார்க்க ௲௱௪௰௩

ஓகையாமுன்னோலுறவாக்கச்செல்லவழி
தோகைவிறலிநீ-தூது. ௲௱௪௰௪

ஆக கண்ணிகள் - ௲௱௪௰௪.

விறலிவிடுதூது

முற்றிற்று.